189

7 - JUN 1933

தொகுதி 12.] 1933௵ மேஜூன் மீ [பகுதி 3.

மனமோகினி

ஆசிரியர்:
ஆரணி. குப்புசாமி முதலியார்

பிரசுரகர்த்தர்
கா. முனிசாமி முதலியார்,
ஆனந்த நிலையம், சென்னை.

மாதவி மாதவன் 2-பாகம்

ஓர் துணிகரமான சாமர்த்திய ரெயில்வேக் களவு

இன்பரசம் பொருந்தியது; படிக்கப் படிக்கப் பேரவாக் கொடுக்கக் கூடியது; தேன்போல் தித்திப்பது; பொருள் நிரம்பியது; இதுவரையில் வெளிவராதது; சாமர்த்திய சம்பவங்கள் பொதிந்தது; அழகிய கடிதத்தில் அச்சிடப்பட்டது. இரண்டு பாகமும் சேர்ந்து விலை ரூ. 2—0—0.

இரத்தினபுரி ரகசியம் 7-பாகம் விலை ரூபா 13-14-0

அமராவதி 2-பாகம்.

ஆரணி-குப்புசாமி முதலியா ரவர்க ளியற்றியது.

இது மிக்க பிரமையை யுண்டாக்கும் அற்புத சம்பவங்கள் நிறைந்த நாவல். ஒரு மனிதன் சுய நம்பிக்கையும், நேர்மையான நடக்கையும், ஊக்கமு முடையவனுயிருந்தால், அவன் தான் கோரிய காரியத்தில் கட்டாயம் ஜெயம் பெறுவான் என்பதும், எத்தகைய ஆபத்துக்களிலும் தப்பித்துக்கொண்டு கீர்த்தியும் மேலான பதவியும் அடைவானென்பதும் இதில் நன்ருய் நிரூபிக்கப்பட் டிருக்கின்றன. அசம்பாவிதமெனத் தோன்றும் அநேகம் சம்பவங்கள் இதில் உண்மையாகவே நடைபெறுவது வாசிப்போர்க்கு அளவற்ற மன மகிழ்ச்சியை யளிக்கும். 2-பாகமும் விலை ரூபா 4.

இராஜாமணி

அல்லது

ஓர் அபூர்வ மர்மம்

கற்புக்கரசியாகிய ஓர் உத்தமியின் சரித்திரத்தை மெத்தத் தெளிவாக விளக்கிக் காட்டக் கூடியது. இராஜாமணி யென்னும் பெண்மணி, பெருந்திருட்டும், மிகுந்த கொலைத் தொழிலுமுடைய ஒருவனுக்கு மகளாயிருந்தும், அவனைப்போலவே பெரும் பாதகச் செயல்களையுடைய ஒரு முரடனுக்குச் சகோதரியாயிருந்தும் அவர்களிடம் அகப்பட்டுப் பெரிய ஆபத்திற் சிக்கிய பூபாலம் பிள்ளை, யென்பவரைக் காப்பாற்றி அவருடன் தானும் வெளியேறி அவரை மணந்து கொள்வதும், மிக்க அதிசயம் பொருந்திய செயல்களாயும் படிப்போர் மனத்தைக் கவரக்கூடியதாயும் இருக்கும்.

இதன் விலை ரூபா 2-0-0.

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை, மதராஸ்.

7-JUN 1933

அப்போது அவள், 'ஆ எப்போதும் பேசுவதில்லையா?' என்று கூறிக்கொண்டே அவனை உற்றுப்பார்த்தாள். அதைக் கண்ட அவன் அவளது நோக்கத்தை அறிய முடியாமல், 'மாதே! நீ என்ன சொல்கிறாய் என்பதும்' என்ன செய்கிறாய் என்பதும் எனக்கு ஒன்றும்தெரியவில்லையே. இச்சம்பாஷணை எதில் கொண்டுபோய் முடிகிறதோ என்பது தெரியவில்லை. உன் சம்பாஷணையின் போக்கு எனக்கு அதிகம் மனத்துயரைத் தருகிறது. இவ்வாறு நீ எனக்குத் துயரத்தை அளிக்கலாகாது' என்றான். அவளும் உடனே, 'ஆம்; நான் உனக்குத் துயரத்தைத் தரக்கூடாதுதான். நீ என் உயிரையே காப்பாற்றினாய் அல்லவா? நான் உன்னைத் துயரத்துக் காளாக்க விரும்பவில்லை. நீ வேண்டுமாயினும் படுத்துக்கொள்' என்று கூறினாள். அதற்கு அவன், உன்னுடைய பேச்சின் தோரணையும் முகத்தோற்றமும் பல ஆச்சர்யங்களை வெளிப்படுத்துமோ என்று சந்தேகமிருப்பதால் இந்நிலையில் சம்பாஷணையை முடித்துவிடுவதென்பது முடியாத காரியம்' என்று சொன்னான். அப்போது அவள், 'அப்படியானால் நான் போகிற போக்கில் நீ வரவேண்டியதுதான். அதுதவிர வேறு வழியில்லை. ஹேமவதி சீமாட்டி உனக்குத் தெரிந்தவளாயிருப்பின் நீ ஏன் இன்று அவளைச் சந்திக்கவில்லையென்பதற்குக் காரணம் கூறு. அவளை அறிந்திருந்தும் அவளைப் பார்க்காமல் மாளிகையைச் சுற்றித் திரிந்துகொண் டிருந்ததன் உத்தேசமென்ன?' என்று மீண்டும் கேட்டாள்.

மோகனதாஸ் இக்கேள்விக்கு உடனே பதில் அளித்துவிடவில்லை. என்ன பதில் அளிப்பதென்று சிறிது நேரம் யோசித்துப் பார்த்தான். அவ்வாறு சிந்திக்கையில் அவன் தன் எதிரிலிருந்த அம்மாதின் முகத்தையும் உற்றுப் பார்த்

186579

தான். காட்டு மிராண்டித்தனமும், பிடிவாதத் தன்மையும் சிறிது காணப்பட்டபோதிலும் அவள் ஏதோ முக்கிய காரணத்தைக்கொண்டே இவ்வாறெல்லாம் கேட்கிறுள் என்று தெரிந்து கொள்ளும்படியான ஜாடையும் அவள் முகத்தில் காணப்பட்டதைக் கண்டான். மேலும் அவள் குறும்புக்காக இப்படிப்பட்ட கேள்விகளைக் கேட்பவளாகவும் காணப்படவில்லை. அவள் நமது சக்திக்கு மேற்பட்ட அதிசய சக்தியுடையவளாய்க் காணப்பட்டாள். ஆகவே அவள் கடைசியாகக் கேட்ட கேள்விக்குப் பதில் அளிப்பது என்னும் முடிவுக்கு மோகனதாஸ் வந்தான். எனவே அவன், 'ஒரு ஆசாமியிடம் எனக்கிருந்த வேலை காரணமாக நான் இவ்விடம் வரவேண்டியதாயிற்று. அந்த ஆள் யார் என்ன என்பது பற்றியெல்லாம் தயவுசெய்து கேட்கவேண்டாம். நான் ஹேமவதிசீமாட்டியைப் பார்க்க வரவில்லை. உண்மையைச் சொல்ல வேண்டுமாயின், அவளை நான் பார்க்கவும் விரும்பவில்லை! ஏனெனின் அவள் எனக்குத் துன்பத்தை விளைவித்திருக்கிறுள்.' என்றதும் அம்மாது, 'எப்படி? எந்த வகையில் உன்னைத் துன்புறுத்தினுள்' என்று கேட்க மோகனதாஸ், 'இவ்விஷயத்தில் நான் ஒன்றும் மறைத்து வைக்கவேண்டிய அவசியமில்லை. ஏனெனின் அவளே அவளுடைய கதையைத் தனக்கு வேண்டியவர்களிட மெல்லாம் சொல்லிக்கொண்டு விட்டிருக்கிறுள். இரத்தினபுரியிலும் ஹேமவதியின் குமாரிகளுக்கு நான் சில மாதங்களாகச் சித்திரமும் கற்பிப்பதில்லை. ஹேமவதி சீமாட்டி என்னிடம் காமப்பேச்சுகள் பேசியது தான் அதற்குக் காரணம்!' என்று கூறினுன்.

அப்போது அம்மாது, 'ஆ, அப்படியா? அந்தக் காமப் பேச்சுகளை நீ மறுத்துவிட்டாயோ? மறுத்துவிட்டாயா இல்லையா சொல்' என்றுள். மோகனதாஸ், 'ஆம், மறுத்து விட்

டேன். அப்படி மறுத்ததைத் தான் அவளுக்கு நான் ஒரு பெரிய குற்றம் செய்து விட்டதாகக் கருதினுள். என்னைக் கடுமையாகப் பழிவாங்குவது என்று நினைத்துவிட்டாள். நான் அவளை மோகித்து அவளுடன் கெட்ட வார்த்தைகள் பேசியதாக அவள் தன்னுடைய சிநேகிதர்களிட மெல்லாம் என்னைப்பற்றி அவதூருகப் பேச ஆரம்பித்தாள்!' என்று சொன்னதும் காட்டுமிராண்டி வகுப்பைச் சேர்ந்த அம்மாது, 'உன் முகத்தைச் சரியாகக் காண்பி. நான் அதைப் பார்த்துச் சொல்லி விடுகிறேன். ஆ, நம் இருவருடைய கண்களும் பரஸ்பரம் சந்திக்கின்றன. உன் கண்களிலிருந்தே நீ குற்ற மற்றவன் என்று நிச்சயமாகக் கூறிவிடலாம். நீ எவ்வளவு அழகாக இருக்கிருயோ அவ்வளவு நல்லவனுகவும் இருக்கிருய். இருக்கட்டும், நீ மற்ருெருமுறை என்னை நன்ருகப் பார்த்துக்கொண்டே அத்தகைய காமப் பேச்சுகளைப்பேசியது நீ அல்ல என்று சொல் பார்க்கலாம்' என்று கேட்டாள். அப்போது மோகனதாஸ் சிறிது ஆத்திரத்துடன், 'எல்லாவற்றிற்கும் பொதுவாகக் கடவுள் இருக்கிருர். ஆதலால் நிச்சயமாகச் சொல்கிறேன். நான் அப்படி யொன்றும் செய்யவில்லை. அச் சீமாட்டிதான் அவ்வாறு செய்தது' என்று பதில் அளித்தான். அப்போது அவள், 'போதும், நீ சொன்னது போதும். நானே நேரில் இருந்து அதைப் பார்த்திருந்தால் எப்படி நம்புவேனே அப்படியே இப்போதும் அதை நிச்சயமாக நம்புகின்றேன். ஆகையால் அச்சம்பவத்துக்குப் பின்னர் நீ ஹேமவதி சீமாட்டியின் வீட்டுக்கே போகவில்லை போலும்!' என்ருள்.

அப்போது மோகனதாஸ், 'அப்படியல்ல, அநாவசியமாகக் கூறிய பொய்யைவிட்டு நியாயத்துக்கு வரும்படி கேட்க

நான் ஒருமுறை அங்கு சென்றிருந்தேன். ஆனால் நியாயம் கிடைக்கவில்லை யாதலால் நான் பிறகு அங்கு போவதை விட்டுவிட்டேன். நீ இவ்வாறெல்லாம் கேள்வி கேட்பதன் காரணமென்ன? அதைத் தெரிந்துகொள்ள நான் மிக ஆவலு டையவனாக இருக்கிறேன்,' என்று கெஞ்சும் தோரணையில் கேட்டான். அதற்கும் அவள் செவி சாய்க்காமலும் அவன் கேட்பதில் அசிரத்தையுடையவள் போலும் தன் வழக்கப்படி 'அதெல்லாம் கிடக்கட்டும். நாம் மறுபடியும் ஆரம்ப காலத் தைக் கவனிக்கவேண்டும். உன் பெற்றோர்கள் தெருக் கூத் தில் ஆடிக்கொண் டிருந்ததாகச் சொன்னாயல்லவா?' என்று கேட்டாள். அதற்கு அவன், 'ஆம்; அவர்கள் தெருக்கூத்தில் நடித்தார்கள். மிக்க ஏழைகளா யிருந்தனர். என் தாயார் இறந்துபோன பின்னர் என் தந்தை வங்க நாட்டுக் குச் சென்றார். அவரும் அங்கு இறந்துபோகும் வரையில் அவரே என்னைக் காப்பாற்றி வந்தார்,' என்றான். அவள் 'அங்கு அவருடைய நிலைமை எப்படி இருந்தது' என்று வினவியதற்கு அவன், 'ஏன், சௌக்கியமாகவே இருந்தார் நல்ல தொழிலும் கிடைத்தது. தயவு செய்து நமது சம்பா ஷணையை வளர்க்க வேண்டாம்' என்றான். அப்போதும் அவள் விடாமல், 'உன் தந்தையார் மரணப் படுக்கையில் சொல்லிவிட்டுப்போன கோவிந்தன் என்பவனைக் கண்டுபிடித் தாயா?' என்று கேட்கவும் மோகனதாஸ், 'நான் எவ்வ ளவோ முயற்சி செய்து தேடிப்பார்த்தும் அந்த ஆள் அகப் படவேயில்லை. என் முயற்சிகளெல்லாம் வீணாயின என்று வருத்தத்துடன் தெரிவித்துக் கொண்டான்.

அப்போது குறத்திபோன்ற அம்மாது, 'கோவிந்தனா! உன் தந்தை நடித்த தெருக்கூத்து கம்பெனி ஏதேனுமொன் றின் மானேஜராக இருக்கலாம். அவன் உன் தந்தை குறிப்

பிட்ட இரகசியத்தை அறிந்து மிருக்கலாம். ஆகவே, அந்தக் கோவிந்தனை எப்படியாவது கண்டு பிடிக்க வேண்டும். நான் நமது தேசம் பூராவையும் சுற்றிப் பார்த்து அவனைக் கண்டு பிடிக்கிறேன். அவன் இறந்துவிட்டிருந்தாலும் அவனது பிரேத அடக்கம் செய்யப்பட்ட இடத்தையாவது கண்டு பிடித்து விடுகிறேன்' என்று மிக்க நம்பிக்கையுடனும், உறுதியுடனும் கூறுபவள்போலப்பேசினாள். அவள் அவ்வாறு பேசியதைக் கண்ட மோகனதாஸ் அவளைக் கண்டு ஆச்சரியப் பட்டதுடன் தற்செயலாகத் தன்னைச் சந்திக்க நேர்ந்த அம் மாது யார் என்று அறிவதிலும் மிக்க அவாவுடையவனானான். நான் பிரஸ்தாபித்த கோவிந்தனை இவள் தேடவேண்டிய அவசியமென்ன? அதனுடன் இவள் எவ்விதத்தில் சம்பந்தப்பட்டிருக்கிறாள்? என்னும் கேள்விகளெல்லாம் அவன் மனத்தில் எழுந்தன. அதற்கு விடை யாதாயிருக்குமென்று அறிய அவனால் முடியவில்லை. ஒருகால் சொற்ப பணத்தைப் பெற இவ்வாறெல்லாம் தந்திரம்செய்கிறாளோ என்று நினைத்தான். ஆகவே, அவளை எப்படியாவது சோதித்துப் பார்த்து விடுவதென அவன் தீர்மானித்தான்.

ஆதலால் மோகனதாஸ், 'என் விஷயத்தில் உனக்கு அதிக அக்கரை இருப்பதுபோலத் தெரிகிறது. எனக்காக நீ நமது தேசம் பூராவையும் சுற்றுவதாகச் சொல்கிறாய். உன் செலவுகளுக்கெல்லாம் நான் பணம்தருவேன் என்று நீ எதிர்பார்க்கிறாய் போலும்!' என்று கேட்டான். அதற்கு அவள், சிறிது ஆத்திரத்துடன், 'மூடு வாயை. நான் இம்மாதிரி எளிய உடை அணிந்திருப்பதால் கண்டவரிடம் கை யேந்தி நிற்கும் பிச்சைக்காரி என்று என்னை நினைத்துவிட்டாய் போலும்! உன்னிடம் பணம் பிடுங்குவதற்காக ஏதோ உன்பால் அபிமான முள்ளவள்போல் நடிப்பதாகக் கருதுகிறாயோ?

மோனதாஸ், என் விஷயத்தில் நீ தவறான எண்ணம் கொண்டிருக்கிறாய். ஆனால் என் உத்தேசமென்ன என்பதை இப்போது சொல்லமுடியாது' என்று கூறிக்கொண்டே வெளியே போகப் புறப்பட்டாள். அப்போது அவன், 'மாதே! நீ இவ்வாறு என்னை அந்தகாரத்தில் விட்டுப் போகலாகாது. நீ இப்போது நடந்து கொள்ளும் வகையில் ஏதோ விசித்திர விசேஷமிருக்கிறது. அறிந்துகொள்ள வேண்டுமென்றும் ஆவல் எனக்கு அளவு கடந்துவிட் டிருக்கிறது என்பதை நீ அறிய வேண்டும்' என்று கெஞ்சும் 'தோரணையில் பேசினான். அம்மாது, 'உனது ஆவலை நான் தீர்க்க முடியாதவளாக இருக்கிறேன். இப்போது அதைச் சொல்வதிலும் பிரயோஜனமில்லை. ஆகவே இதை மறந்து நீ உன்னுடைய இதர வேலைகளைக் கவனி. இன்னும் ஒருமாதம்வரை என்னைப் பற்றியே நினைக்க வேண்டாம். பிறகு நான் அடுத்தமாதம் இதேதேதி இதே மணியில் உன்னைச் சந்திக்கிறேன். அதாவது இரவு ஒன்பது மணிக்கு நாம் இருவரும் இரத்தினபுரியில் சந்திப்போம். நீ மறந்துவிடாமல் என்னைச் சந்திக்க வேண்டும்,' என்றாள்.

அப்போது மோகனதாஸ், 'ஆனால் நாம் எந்த இடத்தில் சந்திப்பதென்று நீ குறிப்பிட்டுச் சொல்லவில்லையே, என்று கேட்க அவள் அவனுடைய இருப்பிடத்தை விசாரித்தாள். அவனும் தான் தன் சகோதரியுடன் தனியாக வசிக்கும் இடத்தைச் சொன்னான். அவள் அந்த வீட்டில் சந்திப்பதாகச் சொல்லிவிட்டு அவ்விடத்தைவிட்டுப் போய்விட்டாள். அவள் போனதும் மோகனதாஸின் மனத்தில் எத்தகைய யோசனைகள் தோன்றியிருக்கும் என்பதை யெல்லாம் நாம் விசாரித்துக் கொண்டிருக்க வேண்டியதில்லை. நாவல் பிரியத்தில் சிறந்த நேயர்களே அதை யூகித்தறிய வல்லே

ஆற்றல் படைத்தவர்கள் என்பதை நாம் அறிவோம். மோகனதாஸ் மிக்க களைப்புற்றிருந்த படியால் அயர்ந்து தூங்கி விட்டான். மறுநாள் காலை அவன் விழித்துக் கொண்டதும் களைப்பாறி உற்சாகமாக இருந்தபடியால் தன் ஆடைகளை அணிந்துகொண்டு, தனக்கு அவ்வளவு உபசாரம்செய்த விவசாயிகளுக்கு நன்றி செலுத்திவிட்டு அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டான். மிதுனபுரிக்குச் சென்று தன் நண்பனிடம் விடைபெற்று அங்கிருந்து இரத்தினபுரிக்குப் போய்ச் சேர்ந்தான்.

65-வது அத்தியாயம்

—:(o):—

நடுக் குப்பத்தில் சம்பவம்.

மோகனதாஸ் இரத்தினபுரியை யடைந்த இரண்டாவது நாள் இரவு சுமார் பத்து மணிக்குச் செல்வநாதரும் மோகனதாஸனும் நடுக் குப்பத்தினருகில் ஒரு பிரத்தியேக வண்டியை விட்டு இறங்கினார்கள். அவர்கள் இரத்தினபுரி நகர படத்தைப்பார்த்து அதன்மூலம் நடுக் குப்பத்தின் சந்து பொந்துகளை யெல்லாம் நன்ருக அறிந்திருந்தார்களாதலால் சர சரவென்று நடந்து அக் குப்பத்தின் சில தெருக்களைக் கடந்தார்கள். அந்தத் தெருக்கள் மிக்க அசுத்தமாகவும், ஆபாசமாகவும், துர் நாற்றத்துடனும் இருந்தபடியால் அவ் வழியே செல்ல மோகனதாஸ் அதிக கஷ்டப்பட்டான். எனினும் செல்வநாதரும் மோகனதாஸனும் கையைப் பிடித்துக் கொண்டு மேலே நடந்து சென்றனர். அக் குப்பத்தில் பிரபல

மாக விளங்குவது நாம் முன்னே கூறியபடி கோபாலன் தம்பதிகளுடைய சிறிது பாழடைந்த மாளிகைதான். ஆதலால் அவர்களிருவரும் அந்த வீட்டில் நுழைந்தனர். அவர்களிருவரையும் கண்ட அங்கிருந்த சிலர், அவர்கள் போலீஸ் அதிகாரிகளோ, அல்லது உளவு கண்டு பிடித்துச்செல்ல வந்திருக்கும் உத்தியோகஸ்தர்களோ என்று நினைத்தனர். ஆகவே, கோபாலனுடைய மனைவியும் அங்கிருந்தவர்களைப் பார்த்து அந்த இருவரையும் வெளியே அனுப்பிவிடும்படி சொன்னாள். அங்கிருந்த ஒரு மாது குடி மயக்கத்தில் பாதி நிர்வாணமாக அவர்கள் எதிரில்வந்து நின்று ஏதோ உளறினாள். ஆபாச மொழி கூறினாள். அப்போது செல்வநாதர் அதிக கோபமடைந்து அவளைத் தூஷிக்கலாம் என்று முதலில் நினைத்தாரென்றாலும், தான்வந்த காரியம் கெட்டுப்போகக்கூடாதென்னும் எண்ணத்துடனும், அவர்களிடம் நல்லவர்போல் நடந்துகொள்ள விரும்பியும், தன் சட்டைப் பையிலிருந்து அரைப் பவுனை எடுத்து விசிறி எறிந்து, 'உங்களுக்கு என்ன தேவை என்பதை நான் அறிந்து கொண்டேன். இதைக் கொண்டு உங்களுக்கு அவசியமான மதுபானச் சரக்கை வரவழைத்துக் கொள்ளுங்கள்' என்று கூறினார்.

அவர் பணத்தை எறிந்ததைக் கண்ட அங்கிருந்த காட்டுமிராண்டிப் போக்கிரிகள் அதிக சந்தோஷத்துடன் கைதட்டி ஆரவாரம் செய்ததுடன் செல்வநாதரைப் புகழ்ந்து கொண்டாடினார்கள். ஒருவன் அவர் ஒரு சுற்றுப் பிரயாணி என்றும் மற்றொருவன் அவர் பெரிய பரோபகாரி என்றும், இன்னொருவன் அவர் எவ்வளவு ஸ்தூல சரீரியாக இருக்கிறாரோ அவ்வளவு பெரிய பணக்காரரா யிருக்க வேண்டுமென்றும் சொன்னான். உடனே எல்லோரும் சிரித்தார்கள். உடனே வீட்டின் எஜமானனாகிய கோபாலன் அங்கிருந்தவர்களையெல்

லாம் அவர்களுடைய இடங்களுக்குச் சென்று அவர்களின் வேலைகளைக் கவனிக்கும்படி கட்டளையிட்ட பின்னர். செல்வநாதர், மோகனதாஸ் ஆகியவர்களிடம், 'நான் இந்த இடத்தை எவ்வளவு ஒழுங்காகவும், சுத்தமாகவும் வைத்துக்கொண்டிருக்கிறேன் பார்த்தீர்களா? சென்றமுறை லைசென்ஸ் வாங்குவதற்காக நான் முனிசிபல் ஆபீசுக்குப் போயிருந்தபோது கூட சேர்மன் துரை யவர்கள் எனது ஒழுங்கையும் கண்டிப்பையும் பாராட்டினார்கள்' என்று ஏதேதோ அதிகமாகப்பெருமைகளைச் சொல்லிக்கொள்ள ஆரம்பித்தான். அப்போது செல்வநாதரும் அவனைத் திருப்திபடுத்த வேண்டுமென்னும் எண்ணத்துடன், 'ஐயா, நானும் இந்த இடத்தைப் பற்றிப் பலமுறை கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் இதைப் பார்க்கும் பாக்கியம் இன்றுதான் கிடைத்தது. உண்மையிலேயே இங்கு நீ கவனிக்கும் ஒழுங்கையும், சுத்தத்தையும் பார்க்கும்போது திவான் பகதூர் பட்டத்துக்கு உன்னைச் சிபார்சு செய்யலாம். ஆனால் நமது மந்திரி என்ன செய்யப் போகிறாரோ! சர்க்காருக்கும், மந்திரியின் கட்சிக்கும் தாஸானுதாஸம் பாடும் சிலருக்கே பட்டம் கிடைக்கிறதே யொழிய உன்னைப்போல் பொதுஜன சௌகரியத்தைக் கவனிக்கும் உத்தமர்களுக்குப் பட்டம் கிடைப்பது அரிதாக இருக்கிறது. அது கிடக்கட்டும். நாம் சற்றுநேரம் தனியே போய் மதுபானம் அருந்தலாமா?' என்று கேட்டார். உடனே அவனும், 'மாடிமீதுள்ள அறைக்குப் போகலாம் வாருங்கள். அதுமிகச் சுத்தமாகவும் தனியாகவும் இருக்கிறது. மதுபானத்துக்கும் குறைவில்லை. இதுவரை உங்கள் வாழ்க்கையிலேயே ருசி பார்த்திராத அப்படிப்பட்ட சிறந்த மதுபானச் சரக்கை வரவழைக்கிறேன்.' என்று சொன்னான். பிறகு எல்லாருமாக மாடிமீதுள்ள அறைக்குச் சென்றார்கள். அங்குச் சென்ற

தும், செல்வநாதர் கோபாலனிடம், 'நீயும் உட்கார்ந்து சவகாசமாக மதுபானத்தை அருந்து. நாம் சில பிரத்யேக விஷயங்களைப் பேசவேண்டியதாய் இருக்கிறது. ஆனால் உனக்கு விரோதமான விஷயமொன்று மில்லையென்று முதலிலேயே சொல்லி விடுகிறேன். எங்களுக்கு ஒருவிதத்தில் நீ உதவி செய்யலாமென்று நினைக்கிறோம். அவ்வாறு செய்தால் உனக்குத் தக்க சன்மானத்தை அளிப்போம்! என்றார். இதைக் கேட்டதும் கோபாலனும் அதிக ஆர்வத்துடன் தன் நாற்காலியைச் செல்வநாதரின் நாற்காலிக்கருகில் இழுத்துப்போட்டுக்கொண்டு அவர்சொல்வதை மிகக் கவனமாகக்கேட்டான்.

அப்போது செல்வநாதர், தன் பணப்பையிலிருந்து இரண்டொரு பத்துபவுன் நோட்டுகளை எடுத்து எதிரிலிருந்த மேஜையின்மீது போட்டு, 'கோபாலா! இப்போது நான் உனக்கு இரண்டு மூன்று கேள்விகள் கேட்கப்போகிறேன். நீ எவ்வளவு கபடமின்றி அவைகளுக்குப் பதில் கூறுகிறாயோ அதற்குத் தக்கபடி உனக்கு நாங்கள் அளிக்கும் சன்மானமும் இருக்கும். முதலாவதாக நீ உயர்ந்த அந்தஸ்திலுள்ள எந்த மாதினுடனேனும் கடிதப் போக்கு வரத்து வைத்துக் கொண்டிருக்கிறாயா?' என்று கேட்டார். அதைக் கேட்ட கோபாலன், செல்வநாதர் கேட்டது இந்திராபாயைப் பற்றித்தானே என்று மனதில் நினைத்துக்கொண்டு, 'உயர்ந்த அந்தஸ்திலுள்ள மாதா?' என்று தன் வாயினாலும் ஒருதரம் சொல்லிக்கொண்டே ஒருகால் அவளைப்பிடித்து அடைத்து விட முயல்கிறார்களோ என நினைத்து அவளைப்பற்றி ஒன்றும் சொல்ல இஷ்டப்படாமல் மௌனமாக இருந்து விட்டான். செல்வநாதரும் விடாமல், 'ஆம், உயர்ந்த அந்தஸ்திலுள்ள மாது தான். இன்னும் தெளிவாகச் சொல்ல வேண்டுமாயின் அவளுக்கு இரத்தினபுரியிலும் ஒரு மாளிகை இருக்கிறது'

என்றார். உடனே அவன் 'அப்படியானால் அப்படிப்பட்ட மாதுடன் எனக்கு எத்தகைய சம்பந்தமுமில்லை.' என்றான்.

அதற்குச் செல்வநாதர், 'பின்னர் நீ ஏன் பதில் கூறுவதற்குச் சிறிது நேரம் யோசித்தாய்,' என்று கேட்க அவனும், 'நான் எப்போதும் சிறிது உஷாராக இருப்பது வழக்கம். அவசரப்பட்டு எந்தக் காரியத்தையும் செய்வதில்லை' என்று சமாதானம் சொன்னான். அதனால் திருப்தியடையாத செல்வநாதர் உனக்குக் கடிதம் எழுதியவர் யாரென்று தெரியாது போலும். எப்படியிருந்தாலும் இரண்டு மூன்று தினங்களுக்கு முன்னர் உனக்கொரு கடிதம் வந்தது என்பதை மறுக்க உன்னால் முடியாது. அது மிதுனபுரியில் போஸ்ட் செய்யப்பட்டது. அதன்மீது நடுக்குப்பத்திலுள்ள கோபாலன் தம்பதிகளுக்குக் கொடுப்பது என்று எழுதப்பட்டிருக்க வேண்டும். அதற்கு என்ன சொல்கிறாய்' என்று கேட்டார். அதை மறுக்க முடியாமல் அவன் தனக்கொரு கடிதம் கிடைத்திருப்பதை ஒப்புக்கொண்டான். செல்வநாதர் அக் கடிதத்தைத் தனக்குக் காண்பித்தால் ஐம்பது பவுன் சன்மானம் தருவதாகச் சொன்னதும் கோபாலன் சிறிது நேரம் யோசித்து, 'ஐயா, நாம் இன்னும் அதிகமாகக் கலந்து பேசுவதற்கு முன் நீங்களும் அந்த வாலிபரும் யார் என்று தெரிய வேண்டும்' என்று கேட்டான். இருவரும் அதைத் தெரியப் படுத்துவதாகச் சம்மதித்துத் தங்கள் பெயரும், விலாசமும் அடங்கிய கடிதத்துண்டைக் கொடுத்தனர். மோகனதாஸின் பெயரை அவன் வாசித்துப் பார்த்ததும், 'ஓகோ, இந்தப் பெயரை நான் பத்திரிகைகளில் வாசித்திருக்கிறேன். துப்பாக்கிச் சண்டையில் ஈடுபட்ட மனிதன் தானே. உனக்கு உடம்பு சொஸ்தமாய்விட்டதா?' என்று மோகனதாஸைப் பார்த்துக் கேட்டான்.

அதற்கு மோகனதாஸ், 'ஐயா, இப்போது நான் அந்தக் காயத்தால் அவஸ்தைப் படவில்லை. நாங்கள் யார் என்பதை உனக்குத் தெரிவித்துவிட்ட படியால் எங்கள் கோரிக்கையை நிறைவேற்ற உனக்கு இனி எத்தகைய ஆட்சேபமு மிரா தென்று நினைக்கிறேன்' என்று கேட்டான். கோபாலன், 'ஐயா, உங்களுக்கு அக்கடிதத்தைக் காண்பிப்பதில் தடையில்லை. ஆனால் கவரைக் கிழித்து அதனுள் அடக்கம் செய்யப்பட்டுள்ள விஷயத்தைப் பார்க்கக்கூடாது' என்றான். செல்வநாதர் அதற்கும் உடன்பட்டு, 'இந்த ஐம்பது பவுனை வைத்துக்கொள். அந்தக் கவரையாவது காண்பி' என்று கேட்டார். உடனே கோபாலனும் தன் சட்டைப்பையிலிருந்த ஒரு கட்டு கடிதங்களை யெடுத்து அதிலிருந்த கவரை நீட்டினான். அதைக் கண்டதுமே மோகனதாஸ் அதுதான் ஹேமவதி சீமாட்டியின் கையால் மிதுனபுரி தபாலாபீஸில் போடப்பட்டது என்பதை அறிந்து கொண்டான். அக்கவரைக் கோபாலன் செல்வநாதரிடம் கொடுத்துவிடாமல் தன் கையிலேயே வைத்துக்கொண்டு, 'ஐயா, ஒரு கையால் இதை எடுத்துக் கொள்ளுங்கள். மற்றொரு கையால் அந்தப் பணத்தை என்னிடம் கொடுங்கள். காரியத்தை எப்போதும் ஒழுங்காகச் செய்யவேண்டும்' என்றான். செல்வநாதர், 'நான் உன்னை ஏமாற்றி விடுவேனா? இந்தா பணத்தை எடுத்துக் கொள்' என்று கொடுத்து அக்கடிதத்தையும் வாங்கிக் கொண்டார்.

கோபாலன் செல்வநாதரிடம் கொடுத்த கவரின்மீது 'பிரத்யேகம்' என்றும், 'ராட்சஸ குப்பனுக்கு' என்றும் எழுதப்பட்டிருந்தது. அதைப் பிரித்துப் பார்ப்பதற்கு இல்லை. கவரைப் பார்ப்பதற்கு மட்டும் ஐம்பது பவுன் கொடுப்பதாக ஒப்புக்கொண்டு கொடுத்தாய் விட்டது. ஆகவே செல்வநாதர் அவனிடம், 'ஐயா, நான் எனது உறுதிமொழியை சர்வ

ஜாக்கிரதையுடன் காப்பாற்றுவேன். நான் இதைப் பிரித்துப் பார்க்கமாட்டேன். ஆனால் இப்போது இன்னொரு ஐம்பதுபவுன் வாங்கிக்கொண்டு இந்தக் கடிதத்தைப் பிரித்துப் படிக்க உத்தரவு தருவாயா?' என்று கேட்டார். அதற்குக் கோபாலன், 'அது முடியாத காரியம் ஐயா! அது மற்றொருவருக்காக எழுதப்பட்டது. நானே அதைப் பார்த்தும் பிரிக்கவில்லையென்றால் உனக்குப் பிரித்துப் பார்க்க அனுமதி தர முடியுமா? அதனால் எவ்வளவுதான் கிடைப்பதாயிருந்தாலும் அதைப் பிரித்துப் பார்க்க அனுமதிக்க முடியாது' என்று கண்டிப்பாகக் கூறிவிட்டான். உடனே செல்வநாதர், 'அந்த ராட்சஸ குப்பன் என்பது யார்? அதை மட்டும் சொல்' என்று கேட்டார். அதற்கு அவன், 'ஐயா, அவன் அடிக்கடி இங்குவந்து என்னுடன் நல்ல முறையில் வியாபாரம் செய்பவன். இக் கடிதத்தை நாம் பிரித்துப் பார்த்து விட்டால் அவன் அதிக கோபங்கொண்டு என்னுடன் வியாபாரம் செய்வதை நிறுத்தி விடுவான். அவன் சென்ற ஒருவார காலமாக இங்கு வரவில்லை, அவனுக்கு என்ன நேர்ந்தது என்பதும் எனக்குத் தெரியவில்லை,' என்றான்.

அச்சமயத்தில் கோபாலனுடைய மனைவி அங்கே வந்து அவ்னிடம் ஏதோ இரகசியமாகச் சொல்லிவிட்டு வெளியே போய்விட்டாள். அவள் சென்றதும் கோபாலன் அவர்களிடம், 'இப்போது நல்ல வேளைபோ லிருக்கிறது, ராட்சஸ குப்பன் என்னும் அந்தக் கனவான் இந்த மாளிகைக்கு வந்திருப்பதாகத் தெரிகிறது. கீழே ஒரு அறையில் இருக்கிறான். வேண்டுமாயின் அவனை உங்களுக்கு அறிமுகம் செய்து வைக்கிறேன்' என்று சொன்னதும் செல்வநாதர், 'அப்படியே செய்! என்று கேட்டார். அப்போது அவன், 'இக்கடிதத்தை நான் என் சட்டைப்பையில் வைத்து விடுகிறேன். இப்போது

நீங்கள் கொடுத்த ஐம்பது பவுனைப்பற்றிப் பிரஸ்தாபிக்காதீர்கள். அச் சங்கதி அவனுக்குத் தெரிந்தால் அவன் பாதி தொகையைக் கேட்பான்' என்று கேட்டுக் கொள்ளவே செல்வநாதரும், 'நான் அதைப்பற்றி யெல்லாம் பிரஸ்தாபிக்கமாட்டேன். நீ எதற்கும் பயப்பட வேண்டாம். அந்த ஆளை உள்ளே அழைத்து வா' என்றார். அப்போது அவன், 'ராட்சஸ குப்பன் நல்ல மனிதன். அவனை எளிதில் வழிக்குக் கொண்டு வந்து விடலாம். அதிலும் கையில் பணம் இருக்கிறதென்றால் அக் காரியத்தை மிகச் சுலபமாக முடித்துவிடலாம், அவன் பணத்துக்காக எதையும் செய்யக்கூடிய தன்மையுடையவன்' என்று சொல்லிக்கொண்டே ராட்சஸ குப்பனை அழைத்து வரக் கீழ்க்கட்டுக்குச் சென்றான்.

அவன் வெளியே போனதும் செல்வநாதர் மோகனதாஸினிடம், 'நாம் நமது காரியத்தில் வெற்றி யடைந்து விடுவோம் என்று நிச்சயமாக நம்பு. இவர்களைப்போன்ற ஆசாமிகளிடம் பொன்னைக்கொண்டு எப்படிப்பட்ட காரியங்களையும் சாதித்துக்கொண்டு விடலாம். அழகும் அந்தஸ்தும் வாய்ந்த ஹேமவதி சீமாட்டியுடன் கடிதப் போக்கு வரத்து செய்யும் பாக்கியம்பெற்ற அந்த ராட்சஸ குப்பன் யார் என்று தெரிந்து கொள்வதில் மிக ஆவலுடையவனா யிருக்கிறேன்,' என்று சொன்னான். இவர்கள் இவ்வாறு பேசிக்கொண்டிருக்கையில் சொற்ப நிமிஷங்களுக்குள் கோபாலன் ராட்சஸ குப்பனுடன் அங்கு வந்து சேர்ந்தான். குப்பன் வழக்கப்படி ஆபாசமான உடையை அணிந்திருந்தான். அவனுடைய முகத்தைப்போன்ற விகாரமான முகத்தைச் செல்வநாதராவது மோனதாஸாவது தங்கள் வாழ்க்கையிலேயே கண்டதில்லை. அவன் க்ஷவரம் செய்துகொண்டு இரண்டு மூன்று தினங்களாய் இருந்ததால் அவனது தாடியானது கருமை

யாக வளந்து கண்டோர் மனத்தைக் கலங்கச் செய்வதான பயங்கரத்தோடு கூடியதாய் இருந்தது. அவனைக் கண்டதும் செல்வநாதர் இப்படிப்பட்ட ஆளும் ஒருவன் இருப்பானு என்று ஆச்சர்யத்துடனும் பிரமையுடனும் அவனையே உற்றுப் பார்த்தார். மோகனதாஸோ, இப்படிப்பட்ட ஒருவனுடன் ஹேமவதி சீமாட்டி கடிதப் போக்கு வரத்து வைத்துக் கொள்ள நேர்ந்திருப்பதை நினைத்து ஆச்சர்யமடைந்தான். கோபாலனும் குப்பனும் உள்ளே நுழைந்ததும் கோபாலன், உள்பக்கம் கதவைச் சாத்திக்கொண்டு, 'இவன்தான் ராட்சஸ குப்பன்' என்று அறிமுகம் செய்து வைத்தான். குப்பனும் மிக்க அடக்கத்துடன் பேசுவதுபோன்ற தோரணையில், 'அன்பர்களே! உங்களிஷ்டப்படி நடக்கக் காத்திருக்கிறேன்' என்று சொன்னான்.

செல்வநாதரும் அவனிடமிருந்து தன் காரியத்தைச் சாதித்துக்கொண்டு போகவேண்டுமென்னும் எண்ணமுடையவராய் இருந்ததால் அவனுடன் பரிந்து பேசுவதுபோல, 'குப்பா! உட்காரு. இதோ இந்த மதுபானத்தை அருந்து. நாம் சில விஷயங்களைப் பேசவேண்டியிருக்கிறது இந்த மாளிகையின் சொந்தக்காரனாகிய கோபாலன் நாங்கள் யார் என்பதுபற்றி உன்னிடம் சொல்லியிருப்பான் என்றுநம்புகிறேன்' என்று கூறினார். அதற்குக் குப்பன், 'ஆம், ஏதோ கடிதத்தைப்பற்றிப் பிரஸ்தாபித்தான்,' என்று சொல்லிக்கொண்டே எதிரிலிருந்த ஆசனத்தில் அமர்ந்து செல்வநாதர் கொடுத்த பானத்தை அருந்திக்கொண்டே, 'கோபாலா! என்ன கடிதம், அதைக் காண்பி பார்க்கலாம்,' என்று கேட்டான். அப்போது கோபாலனும் தன்னிடமிருந்ததும் ராட்சஸ குப்பனுக்காக எழுதப்பட்டதுமான அக் கடிதத்தை அவனிடம்

கொடுத்தான். அவன் அக்கடித விஷயத்தில் எத்தகைய மனோபாவத்தை யடைகிறான் என்பதை அவனது முகக் குறியிலிருந்தே அறிய விரும்பிய செல்வநாதரும் மோகன தாஸனும் அவனையே உற்றுப் பார்த்தார்கள். அவனும் அதை அலட்சிய புத்தியுடன் திறந்து பார்த்து, 'ஓ! இதுதானே' என்று சொல்லிக்கொண்டே அககடிதத்தை மடித்துத் தன் சட்டைப் பையில் வைத்துக் கொண்டுவிட்டான்.

அப்போது செல்வநாதர், 'குப்பா! நான் இப்போது சொல்லவிரும்பும் விஷயத்தைச் சொல்லிவிடுகிறேன். உனக்கு இப்போது கிடைத்த இந்தக் கடிதம் மிதுனபுரி தபாலாபீசில் போடப்படும்போது எனது நண்பனாகிய இவன் அந்தத் தபா லாபீசில் இருக்க நேரிட்டது. அக்கடிதம் போட்டது யார் என்பதை அவன் அறிவானாதலால் சில முக்கிய காரணங் களைக்கொண்டு இந்த கடிதத்தில் என்ன எழுதப்பட்டிருக்கிற தென்பதை அறிய விரும்புகின்றான். எனக்கும் அதைத் தெ ரிந்துகொள்ள வேண்டுமென்னும் ஆசை அதிகமாகவே இருக் கிறது. நீ ஐம்பதுபவுன் பெற்றுக்கொண்டு அக் கடிதத்தை எங்களுக்குக் காண்பிப்பாயா, என்று,' கேட்டார். அப்போது பணத்தையே பெரிதெனக்கொள்ளும் ராட்சஸகுப்பன், 'ஐயா நூறுபவுன் கொடுக்கச் சம்மதித்தால் உடனே இதை உங்க ளிடம் கொடுத்து விடுகிறேன்' என்றதும் செல்வநாதரும் 'அப்படியே ஆகட்டும். நூறு பவுனையே தருகிறேன். இதோ இரண்டு ஐம்பது பவுன் நோட்டுகள் இருக்கின்றன. எந்தப் போழும் ஒழுங்காக நடக்கவேண்டியிருப்பதால் ஒரு கையால் இந்த நோட்டுகளைப் பெற்றுக்கொண்டே மற்றொரு கையால் அக் கடிதத்தை என்னிடம் கொடு என்று கூறினார். அப் படியே இருவரும் பரஸ்பரம் நோட்டையும் கடிதத்தையும் மாற்றிக் கொண்டார்கள். செல்வநாதரும் ஆர்வத்துடன் அக்

கடிதத்தைப் பிரித்துப் பார்த்தார். மோகனதாஸனும் அதைப் பார்த்தான். அதில், 'கிருஷ்ணகிரிக்கு நீ உடனே புறப்பட்டு வரவேண்டும். நான் சில முக்கியவிஷயமாக உன்னைப் பார்க்க வேண்டியிருக்கிறது. தினசரி இரவு பதினொருமணிக்கு எனது மாளிகையின் மடத்தில் நீ வந்திருக்கிறாயோ என்று பார்ப்பேன்' என்று எழுதப்பட்டிருந்தது. இனிமேல் என் செய்வது என்பது பற்றி யோசிப்பவர்கள்போல் மோகனதாஸனும் செல்வநாதரும் பரஸ்பரம் தங்கள் முகத்தைப் பார்த்துக்கொண்டனர். ஹேமவதி சீமாட்டி ஏதோ ஒரு கொடிய காரியத்தை முடிக்கும் பொருட்டு இவனுடைய உதவியைக் கோரியிருக்கிறாள் என்று மட்டும் தெரிந்துகொள்ள அவர்களால் முடிந்தது. சிறிது நேரம் மௌனமாக இருந்துவிட்டுப் பின் செல்வநாதர் குப்பனிடம், 'சீமாட்டி சொல்லும் காரியம் யாதாயினும் அதைச் செய்து முடிப்பதால் உனக்கு அதிகமானபொருளுதவி கிடைக்குமோ?' என்றுவிசாரிக்க அவன் 'எனக்கு ஏதேனும் லாபமிருந்தாலொழிய நான் எந்தவிஷயத்தையும் யாருடனும பேசுவதில்லை' என்று கூறினான்.

அப்போது செல்வநாதர், 'குப்பா! ஹேமவதி சீமாட்டி தான் இடப்போகும் வேலைக்காக என்ன கொடுக்கிறாளோ அதற்கு இரட்டிப்பு தொகையை நான் கொடுத்தால் அந்தக் காரியம் என்ன என்பதை எங்களுக்குத் தெரிவிப்பாயா?' என்று கேட்க குப்பனும் சந்தோஷத்துடன், 'இப்படிப்பட்டவர்களுடன்தான் நான் பேச விரும்புகிறேன். எனக்கு வேண்டியதெல்லாம் பேரம். வெறும் பேச்சில் காலப்போக்கு செய்வது எனக்குப் பிடிக்காது. வந்தால் எதைப்பற்றியாயினும் பேரம்செய்து உடனே ஒருவித ஒழுங்குக்கு வந்துவிட

வேண்டும். இப்போது நான் உங்களுக்காகச் செய்யவேண்டியதென்ன?' என்று கேட்டான். செல்வநாதர், 'குப்பனே! இக்கடிதத்திலிருந்து நீ ஏதோ ஒரு மடத்துக்குப் போக வேண்டுமென்றும் அது ஒரு மாளிகையை அடுத்ததென்றும் தெரிகிறது! என்றதும் 'மோகனதாஸ்' கிருஷ்ணகிரியிலுள்ள சுந்தரவிலாச மாளிகையைச் சேர்ந்த மடத்துக்குப் போக வேண்டும். இதிலென்ன இரகசியமிருக்கிறது.' என்று அலட்சியமாகச் சொன்னான். அப்போது ராட்சஸ குப்பனும், 'ஆம், அம்மாளிகைதான். மேலே நடக்க வேண்டியதைச் சொல்லுங்கள்' என்று கண்டிப்பாகப் பேசினான். அதற்குச் செல்வநாதர், 'குப்பா! நீ சுந்தரவிலாச மாளிகைக்குப்போன பின்னர் உனக்கும் சீமாட்டிக்கு மிடையில் நடக்கும் பேச்சு வார்த்தைகளையெல்லாம் ஒன்றும் விடாமல் எனக்குத் தெரிவித்தால் அவள் கொடுக்கும் பணத்தைவிட இரட்டிப்பான பணத்தைக் கொடுப்பேன்' என்று அறிவித்தார்.

அப்போது ராட்சஸ குப்பன், 'நான் இருதரப்பிலும் பணம் வாங்கிக்கொள்வதில் எனக்கும் பிரியமே. ஆனால் நான் அதை உங்களிடம் சொல்வதால் எனக்கே ஆபத்து விளைவதாக இருந்தால் நான் என்ன செய்வேன்?' என்றான். அதற்குச் செல்வநாதர், 'ஹேமவதி சீமாட்டியின் உத்தேசமென்ன என்று தெரிந்துகொண்டு கூடுமாயின் அதை அவள் நிறைவேற்றாதபடி தடுத்து விடுவதுதான் எங்களுடைய உத்தேசம். அது தவிர அநாவசியமாக நாங்கள் அந்த சமாசாரத்தை எங்கும் சொல்லமாட்டோம். அதிலும் உனக்கு இதனால் எப்படிப்பட்ட தீங்கும் வாராதபடி பார்த்துக் கொள்வோம்' என்று சொன்னார். உடனே குப்பனும், 'அப்படியானால் நாம் இதைப்பற்றி அதிகமாகப் பேசிக்கொண்டிருக்க வேண்டியதில்லை. நான் நாளையதினமே கிருஷ்ணகிரிக்குப்

போய் விஷயத்தைத் தெரிந்துகொண்டு வந்து விடுகிறேன். நாளைக்கு மறுநாள் மாலை உங்களை நீங்கள் குறிப்பிடும் இடத்தில் சந்திக்கிறேன்' என்றான். செல்வநாதர், 'அன்று இரவு ஒன்பது மணிக்கு ஒரு ஆற்றோரம் சந்திக்கலாம்' என்று தெரிவித்து விட்டதும் எல்லோருமாக அங்கிருந்து பிரியும் எண்ணத்துடன் வெளியே புறப்பட்டனர்.

புறப்படுவதற்குமுன், செல்வநாதர் அவ்வீட்டின் சொந்தக்காரனாகிய கோபாலனுக்கு ஒரு பவுன் கொடுத்தார். அவனும் தான் முன்பு ஐம்பது பவுன் பெற்றுக்கொண்ட சங்கதியைச் செல்வநாதர் பிரஸ்தாபிக்காமலேயே இருந்து விட்டதைக் கண்டு சந்தோஷமடைந்தான். பலவித குற்றங்கள், விபசாரம் ஒழுங்கீனம் முதலிய அயோக்கியத்தனங்களுக்கும் இடமாக இருந்த அந்த இடத்தைவிட்டுச் சந்தோஷத்துடன் செல்வநாதரும் மோகனதாஸும் வெளியேறினர். தாங்கள் விட்டு வந்த வண்டியிருக்குமிடத்திற்குச் செல்லும் வழியில் மோகனதாஸ் செல்வநாதரிடம், 'ஐயோ! இதைப்பற்றியெல்லாம் நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?' என்று கேட்க அவர், 'முன்பே நம் இருவருக்கும் தோன்றியபடிதான் நடக்கும் போலிருக்கிறது. உன்னுடைய தொல்லைகளைப் பொறுக்க மாட்டாமல் அவள் உன்னையே அடியோடு தொலைத்துவிட ஏற்பாடு செய்து வருகிறாள் என்றே தெரிகிறது. ஆயினும் அவளது காரியம் கைகூடாதபடி நாம் தடுத்துவிடுவோம்' என்றார். ஹேமவதி சீமாட்டி மறுபடியும் கொலை எண்ணத்தை யுடையவளாக இருக்கிறாள் என்பதை நினைத்த மாத்திரத்தில் மோகனதாஸின் தேகம் அச்சத்தால் நடுங்க, 'ஆ! என்ன பயங்கர குணமுடைய மாது! அவள் அந்த உத்தேசத்துடன் தான் இம்மாதிரியெல்லாம் ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறாள் என்று தான் நினைக்கவேண்டியிருக்கிறது.

அப்படிப்பட்ட உயர்ந்த ஸ்தானத்திலுள்ள ஒரு மாது கேவலம் ராட்சஸ குப்பனைப்போன்ற ஒரு அயோக்கியனுடன் கூடித் போக்குவரத்து செய்து அவனைத் தன் ஆயுதமாக உபயோகிக்கிறாளென்றால் அதைக் கேட்கும்போதே நீங்கள் நடுங்கவில்லையா?' என்று கேட்டான்.

அப்போது செல்வநாதர், 'அப்பா நான் திடுக்கிடுகிறேனே தவிர இதைக் கண்டு ஆச்சர்யப்படவில்லை. ஏனென்றால் பெரிய மனிதர்கள் என்பவர்களின் யோக்கியதையை நான் அறிந்திருக்கிறேன். உயர்ந்த வகுப்பைச் சேர்ந்தவர்களென்றும் பணக்காரர்களென்றும் சொல்லிக் கொள்பவர்கள், ஏழைகளும் தாழ்த்தப்பட்டவர்களும் எப்படிப்பட்ட அயோக்கியத்தனத்தையும் செய்வார்கள் என்று பறை சாற்றியபோதிலும் உண்மையில் அவர்களுக்கு வழிகாட்டிகளாக இருப்பவர்கள் இந்த பெரிய மனிதர்கள் என்பவர்களே, அதிலும் இரத்தினபுரி பெரிய மனிதர்கள் என்பவர்களைப்போல் கெட்டுப்போனவர்கள் இந்த உலகத்தில் வேறு எங்குமில்லை யென்று நிச்சயமாகச் சொல்வேன். நானும் வாலிபனாய் இருக்கும்போது பல சங்கங்களில் சேர்ந்திருந்தேன். அவற்றின் மெம்பர்கள் பெரிய மனிதர்கள் என்று சொல்லிக்கொண்டாலும் பாதிக்கு மேற்பட்டவர்கள் முதல்தரமான காலிகள் என்பதில் ஆட்சேபமில்லை. பெரிய மனிதர்களைப்போல் வேடமணிந்து எல்லா விதமான அயோக்கியத் தனங்களையும் செய்வார்கள். ஒரு வேளை சாப்பாட்டுக்கு இல்லாதவர்களும் பெரிய டம்பாச்சாரிகளாகத் திரிவார்கள். ஆதலால் பெரிய குடும்பத்தைச் சேர்ந்த ஹேமவதி இவ்வாறு செய்வதில் ஆச்சரியமொன்றுமில்லை' என்றார். இதற்குள் அவர்கள் தங்கள் வண்டி இருந்த இடத்துக்கு வந்துவிட்டார்கள். ஆகவே, அவர்கள் வண்டியி

லேறிக்கொண்டு மோகனதாஸின் வீட்டுக்கு வண்டியைச் செலுத்தும்படி கட்டளையிட்டார்கள்.

வண்டி வேகமாகச் செல்லுகிறது. அப்போது செல்வநாதர் மீண்டும் பேச ஆரம்பித்து, 'பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், அயோக்கியர்கள் என்று சொன்னதாலேயே அதில் ஒருவர்கூட யோக்கியர் இல்லையென்று அர்த்தமல்ல. காட்டுப் புஷ்பங்களிடையிலும் எப்படியோ நல்ல ரோஜா ஒன்று முளைத்துவிடுகிறது. அதுபோல இரத்தினபுரியிலுள்ள பெரிய குடும்பத்தில், ஷண்பகவல்லி ஒருத்தி இனிய குணங்களுடன் பிறந்து விட்டாள்' என்று சொன்னதும் மோகனதாஸ் அதிக சந்தோஷமடைந்து, 'அவள் நல்ல குணத்துடன் அவர்களிடையில் பிறந்திருக்கிறாள் என்று சிறப்பித்துக் கூறியதைப்பற்றி நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன்' என்றான். அதற்குச் செல்வநாதர், உள்ளதைச் சொல்வதில் என்ன ஆட்சேபமிருக்கிறது. உண்மையிலேயே பரிசுத்தமும் நன்மையும் ஒன்றாய்த் திரண்டு உருவெடுத்தாற்போல் அவள் பிறந்திருக்கிறாள் என்பதும் மிகையாகாது. நான் முதல்முறை அவளைச் சந்தித்தபோது அவள் நடந்துகொண்ட முறையிலிருந்தே அவளுடைய நற்குணத்தையும் பெருந்தன்மையையும் நான் அறிந்துகொண்டு விட்டேன். பெரிய மனிதர் குடும்பத்தில் பிறந்தாலும் அவர்களுடைய அயோக்கியத்தனம் அவளுக்குப் படியவில்லை. அவள் பரிசுத்தமான இனிய குணத்தோடு கூடிய வாழ்க்கையையே நடத்தும்படி நாம் பார்த்துக் கொள்ளலாம்' என்று சொன்னார். அப்போது மோகனதாஸ், 'ஐயா, நீங்கள் அந்த மனோகரம் பிரபுவுடன் கடிதப் போக்குவரத்து வைத்துக்கொண் டிருப்பீர்களென்றே நம்புகிறேன்!' என்று கேட்க, அப்பெரியார், 'ஓகோ! நீ என்

இரகசியங்களையெல்லாம் அறிய முயல்கின்றாய் போலும்! இப்படியெல்லாம் கேட்கவேண்டாம். நான் செய்துமுடிக்கவேண்டிய வேலைகள் இன்னது என்பது எனக்குத் தெரியும். அவற்றை நான் உன்னிடம் வாக்களித்தபடியே ஒழுங்காகச் செய்து முடிப்பேன். ஷண்பகவல்லி அந்த அயோக்கியப் பையலான தினகரனை மணந்துகொள்ளப்போவதில்லையென்று நான் முன்னரே சொல்லியிருக்கிறேனல்லவா?' என்று கூறினர்.

அப்போது மோகனதாஸ், 'பெரியாரே! தாங்கள் இப்போதுபேசுவது திடஎண்ணத்துடனும், உண்மை விஷயத்தையறிந்தும் பேசுகிறீர்களா? தாங்கள் கூறுவது உண்மைதானே' என்று பரிந்து கேட்க, அவர், 'அதில் சிறிதும் சந்தேகமில்லை விஷயங்களையும் சந்தர்ப்பங்களையும் முற்றும் அறிந்தே நான் பேசுகிறேன். உத்தம குணங்களை யுடைய ஷண்பகவல்லி அந்த தினகரம் பிரபுவை நிச்சயமாக மணந்து கொள்ளப் போவதில்லை. என்னுடைய நண்பனாகிய வாலிபன் ஒருவனே அவளைப் பெறுவது நிச்சயம்' என்று சிரித்துக் கொண்டே சொன்னர். அவன் குறிப்பிட்ட வாலிபன்தானே என்பதை அறிந்து மோகனதாஸ் அதிக சந்தோஷத்துடன் அப்பெரியாரின் கையை ஆர்வத்துடன் பிடித்துக்கொண்டு, 'தாங்கள் குறிப்பிட்ட வாலிபன் இன்னுனென்று நான் அறிந்துகொண்டேன். ஆ! தாங்கள் என்னை எவ்வளவு சந்தோஷத்தில் ஆழ்த்திவிட்டீர்கள் தெரியுமா?' எனலும், அவர், 'உன்னைச் சந்தோஷப் படுத்துவதைத்தானே நான் என் கடமையாகக் கொண்டிருக்கிறேன். நீ மிக்க நற்குண நற்செய்கைகளையுடைய வாலிபனயிருக்கிறாய். என் சொந்த குமாரனை நேசிப்பதுபோலவே நான் உன்னை நேசிக்கிறேன். உன் சகோதரி

ராஜலட்சுமியையும் நான் என்குமாரிபோலவே கருதுகிறேன். அவள் இனி நாடக மேடைக்குச் செல்லலாகாது. அவளுக்கும் தக்க ஏற்பாடு செய்யப்போகிறேன்' என்று கூறினர். அவர் கூறியதன் பொருளை அறிந்துகொள்ள முடியாமல் மோகனதாஸ், பெரியாரே! தாங்கள் சொல்வது என்ன?' என்று கேட்டான். அதற்கு அவர், 'நமது ராஜலட்சுமி பரிசுத்தமும் கற்பும்உடையவள் என்பதில் கடுகளவு சந்தேகமும் எனக்கு இல்லை. ஆயினும் அப்படிப்பட்ட நிலைமையில் இன்னும் வைத்திருந்தால் அது ஆபத்தானது. ஆகையால் இனி நாடகமேடை ஏறுவதை நிறுத்திவிட வேண்டும். இப்போது நாடகக் கம்பெனி மானேஜரிடம் செய்துகொண்டுள்ள ஒப்பந்தம் முடியும்வரை ஆடிவிடட்டும். பிறகு நான் ஏற்பாடு செய்கிறேன். நான் உங்களுக்கு நன்மையே செய்வேனுதலால் அந்தப் பொறுப்பை என்னிடம் ஒப்புவித்து விடு. ஆனல் நீ இதற்குள் எதையும் ராஜலட்சுமியிடம் தெரிவித்துவிடாதே. நான் முதன்முதலில் உங்களைச் சந்தித்த போதே ராஜலட்சுமியை நாடகத் தொழிலினின்றும் நிறுத்திவிட நினைத்தேன். ஆயினும் உங்களிடம் இன்னமும் அதிகம் பழக்கம் ஏற்பட வேண்டுமென்றும், நீ உன் வாழ்க்கையை எவ்வாறு அபிவிருத்தி செய்துகொள்கிருய் என்று கவனிக்க வேண்டு மென்றும் கருதியே அப்போது சும்மா இருந்தேன்!' என்று சொன்னர்.

உடனே மோகனதாஸ், 'ஐயா, பெரியாரே! தாங்கள் செய்யும் உதவிக்குக் கைம்மாறு செய்ய என்னுல் எப்போதுமே முடியப் போவதில்லை. இது நிச்சயம். தாங்கள் எங்களை எப்படி நடத்தினுலும் அப்படியே நடக்க நாங்கள் தயாராக இருக்கிறோம்' என்ருன். அதற்கு அவர், 'கைம்மாறு! அதைப்பற்றி யெல்லாம் என்னிடம் ஒன்றும் பேசவேண்

டாம். நீ என்னிடம் எப்போதுமே மிக மரியாதையாக நடந்துகொள்கிறாய். உன் விஷயத்தில் எனக்கு எத்தகைய அதிருப்தியும் கிடையாது. உன் சகோதரி விஷயத்திலும் அவள் நாடகத்தொழிலை விட்டுவிடுவதில் உனக்கு :ஏதேனும் தடையுண்டோ' என்று கேட்டார். அதற்கு அவன் 'எனக் கொன்றும் தடையில்லை. ஹேமவதி சீமாட்டி என்னைப் பற்றிப் பொய்யான புகார் செய்யாதமுன் என் தொழில் ஒழுங்காக நடந்துவந்தபோது என் சகோதரி இந்த ஒப்பந்தம் முடிந்ததும் சுமார் இரண்டாயிரம் பவுனைச் சேர்த்து வைத்திருப்பாளாதலால் அதையும் என் வருவாயையும் கொண்டு வாழ்க்கையைச் சௌகரியமாக நடத்திவிடலாமென்றும், என் சகோதரி நாடகத் தொழிலை விட்டுவிட வேண்டியதுதானென்றும் நினைத்ததுண்டு' என்று கூறினான். அதைக் கேட்ட செல்வநாதர், 'ஓ அதைக்கொண்டே நீங்கள் சௌகரியமாக வாழ்க்கையை நடத்திவிடலாம் என்று நினைத்தாயோ? சரிதான் உங்கள் தொகையுடன் நானும் சிறிது கொடுக்கிறேன். நான் கொடுக்கப்போவதை நீ மறுக்கமாட்டாய் என்றே நினைக்கிறேன். முதன் முதலில் நான் உன்னைச் சந்தித்தபோது நான் வாங்கிய படத்துக்கு நீ பணம் பெறமாட்டேன் என்று சொல்லி விட்டாயல்லவா? அந்தத்தொகை அதிகவட்டியுடன் என்னிடம் பெருகிவருகிறது என்பதை நீ ஞாபகத்தில் வைத்துக்கொள்' என்று கூறலும், மோகனதாஸ் ஆச்சர்யத்துடனும் சந்தோஷத்துடனும், 'செல்வநாதரே! நான் தங்களிடமிருந்து இவ்வளவு உதவிகளைப் பெற என்ன பாக்கியம் செய்துவைத்தேனோ? நான் ஏதோ தங்களுடைய உதவியைக் கோரியே தங்கள் விஷயத்தில் இவ்வளவு மரியாதையாகவும் ஒழுங்காகவும் நடந்துகொண்டதாகத் தாங்கள் நினைத்துவிடக் கூடாது' என்று கேட்டுக் கொண்டபோது அப்பெரியார் 'சுயநல எண்ணமா? சீ! அப்படியெல்லாம் பேசவேண்டாம்'

மனிதர்களின் உண்மைத் தன்மையை அறியும் சக்தி எனக்கு இல்லாமற் போகவில்லை. நாம் இதோ உன் வீட்டை அடைந்து விட்டோம்' என்றார். வண்டியும் மோகனதாஸ் இல்லத்தின் எதிரில்வந்து நின்றது. மோகனதாஸ் அப்பெரியாரிடம் 'ஐயா, தாங்களும் உள்ளே வந்து எங்களுடன் சிறிது ஆகாரத்தை அருந்திவிட்டுச் செல்லுங்கள் என்று கேட்டுக் கொண்டான். அதற்கு அவர், 'இன்று அதிகவேலையாய்விட்டது. இனி நான் சாப்பிடமாட்டேன். மற்றொருமுறை பார்த்துக் கொள்வோம். நான் போய் வருகிறேன்' என்று சொன்னதும் மோகனதாஸ் அப்பெரியாரின் கையைப் பிடித்துக் குலுக்கிவிட்டு வண்டியினின்றும் கீழே இறங்கினான். செல்வநாதரும், 'அப்பா, நான் நாளை காலை வருகிறேன். கிருஷ்ணகிரிப் புறப்படுவோம். தயாராக இரு' என்று சொன்னதும் வண்டி புறப்பட்டுவிட்டது.

66-வது அத்தியாயம்.

—:():—

நடனமாதும் இரு பிரபுக்களும்

மோகனதாஸும் செல்வநாதரும் பிரிந்த அதே சமயத்தில் இரத்தினபுரி நகரின் மற்றொரு மூலையில் என்ன நடக்கிற தென்பதைக் கவனிப்போம். நாடக கொட்டகையில் நடிப்பவளான கமலகுமாரி தன் வீட்டில் பிரகாசத்தோடு கூடிய ஒரு அறையில் கண்டோர் மனம் தன்னிடம் அடிமைப்படும்படியான வகையில் ஆடை ஆபரணாதிகளால் அலங்கரித்துக்கொண்டு ஒரு சோபாவின்மீது உட்கார்ந்திருந்தாள்.

அவளது அருகில் சந்திரசேகரம் பிரபு உட்கார்ந்திருந்தான். அவன் அவளைச் சந்திக்கவந்து சில நிமிஷங்களே ஆயிருந்த தால் அவர்களிருவரும் ஏதோ லோகோபசாரமான வார்த் தைகளையே பேசிக்கொண்டிருந்ததால் அதைப்பற்றி நாம் கவ னிக்கவேண்டிய அவசியமில்லை. எனினும் அச்சமயத்திலவன், தினகரன் இன்னும் சில நிமிஷங்களுக்குள் வருவான் என்று அறிந்தபடியால் அதற்குள் தன் காரியங்களைச் சாதித்துக் கொண்டுவிட வேண்டுமென்று நினைத்தான். ஆகவே அவன் அவளிடம் 'கமலம்! நான் உன்னிடம் சில முக்கியமான விஷயங்களை மிக அவசரமாகப் பேசவேண்டி யிருக்கிறது? என்ன சொல்கிறாய்?' என்று கேட்டான். அதற்கு அவள் தன் அழகிய பற்களை வெளிக்காட்ட வேண்டுமென்னும் எண் ணத்துடன் புன் சிரிப்போடு வேடிக்கையாக, 'என்ன! நீ சொல்வதைப் பார்த்தால் என்னைக் கலியாணம் செய்துகொள் ளப்போகும் விஷயமாய்ப் பேசப்போவதுபோல் காணப்படு கிறதே' என்று சொன்னாள். அப்போது அவளைச் சந்தோ ஷப் படுத்தும் பொருட்டு, 'கலியாணமா! இன்னும் இதை விடக் கேவலமாகவும் உன்னைக் கேட்பேன். அது கிடக்கட் டும். இப்போது வேடிக்கைப்பேச வேளையில்லை. தினகரம் பிரபு வருவதற்குச் சொற்ப நேரமே இருக்கிறதென்று நீயே சொல்வதால் அதற்குள் நான் சில முக்கிய விஷயங்களைப் பேசித் தீர்த்துவிட வேண்டியதா யிருக்கிறது. முதலாவதாக நான் ஹேமவதி சீமாட்டியின் சம்பந்தமாக உன்னிடம்கூறிய தெல்லாம் உனக்கு ஞாபக மிருக்கிறதல்லவா?' என்று கேட் டான்.

அதற்குக் கமலகுமாரி, 'ஓ! அதுதானே. ஆதி முதல் அந்தம்வரை எனக்கு ஞாபகமிருக்கிறது. நானும் தினகரம் பிரபுவும்கூட அதைப்பற்றி அடிக்கடி பேசிக்கொள்வதுண்டு.

நானும் சிரிப்பேன். அது இருக்கட்டும் இவ்வளவு விஷயத்தில் இடையிலும் தினகரன் தன் தாயை அதிகம் நேசிப்பதாகத் தெரிகிறதல்லவா ?' என்றாள். அப்போது சந்திரசேகரம் பிரபு 'இல்லை. நீ தவறாக நினைத்திருக்கிறாய். ஆனால் நான் கேட்ப தற்குப் பதில் சொல். அவளுடைய அந்த சங்கதிகளையெல் லாம் நீ வேறு யாரிடத்திலேனும் சொல்லிவிட்டாயா ? அதைப்பற்றி நீ நாடகமேடையில் உன்னிடமிருக்கும் ஆண் பெண்கள் யாரிடமேனும் வேடிக்கையாகப் பேசுகையில் சொல்லிவிட்டாயோ? நீ இவ்விஷயத்தில் உண்மையையே பேசு. நான் அதை அவசியமாக அறிய விரும்புகிறேன்' என்று கேட்டதும் அவள், 'இல்லவே இல்லை. சத்தியமாகச் சொல்கிறேன்' நான் அதைப்பற்றி யாரிடமும் பிரஸ்தாபிக்க வில்லை. எனக்கு எங்கெந்த சந்தர்ப்பங்களையொட்டியோ தெரி யும். எல்லா விஷயங்களையும் கண்டவர்களிடம் சொல்ல வேண்டுமென்னும் அவசியமே இல்லை. அதுபோலவே இந்த சங்கதிகளையும் நான் என் மனதிலேயே வைத்துக்கொண் டிருக்கிறேன்' என்று உறுதி கூறினாள். அப்போது சந்திர சேகரன் மற்றும் அதிக ஆவலுடன், 'நீ எந்தத் தனி மனித ரிடம்கூட இதைப்பற்றிச் சொல்லவில்லை என்பது நிச்சயந் தானா? உனக்குத் தெரியாமலும் இது சம்பந்தமான வார்த் தை ஒன்றுகூட வெளிவந்துவிட வில்லையே!' என்று கேட்க, அவள், 'நான் நிச்சயமாகச் சொல்கிறேன். இதைப்பற்றி நான் யாரிடமும் பிரஸ்தாபித்ததே இல்லை. நான் யாரிடமும் வாய் தவறியும் சொல்லவில்லையென்று நிச்சயமாகச் சொல்ல முடியும். எனினும் அது விஷயமாக ஹேமவதி சீமாட்டி யுடன் நீ ஏதேனும் சமாதானம் செய்துகொண்டிருக்கிறாயோ. ஏனென்றால் நீ கிருஷ்ணகிரிக்கு அச்சீமாட்டியின் விருந்தாளி யாகப் போயிருப்பதாகத் தினகரம் சொன்னான். உண்மை

சங்கதி என்ன ?' என்று கேட்டாள். அதற்கு அவன், 'ஆம், நான் அச் சீமாட்டியுடன் ஒருவித சமாதானத்துக்கு வந்திருக்கிறேன். இப்போது கவனிக்கும்போது அவளுக்கு விரோதமாக நான் ஏன் இப்படியெல்லாம் செய்துவிட்டேன் என்று வருத்தப்படுகிறேன், அச் சீமாட்டி விருந்துக்கு அணிந்துவந்த பாஞ்சால ராஜகுமாரியைப்போன்ற உடை உன்னிடம்தானே இருக்கிறது. அதை இப்படிக் கொடுத்துவிடு. வீண் வேடிக்கைகளை யெல்லாம் பேசிக் காலத்தைப் போக்கவேண்டாம்,' என்று கேட்டான்.

கமலகுமாரி ஏதோ யோசிப்பவள்போல் சிறிது நேரம் யோசனைசெய்த பின்னர் திடீரென்று மிக ஆத்திரத்துடன், 'ஐயா! இப்படிப்பட்ட இரகசியத்துக்கு ஆதாரமான அந்த உடையை நான் உன்னிடம் எப்படிக் கொடுத்துவிடமுடியும்? அதனால் நான் என்னுடைய காரியங்களைச் சாதித்துக்கொள்ள வேண்டுமென்றல்லவா நினைத்தேன். உன்னிடம் கொடுப்பதால் நீ சீமாட்டியின் விஷயங்களை மறைத்துவிட அது உனக்கும் பயன்படுமே ஒழிய அவ்வாறு கொடுத்துவிடுவதால் நான் அடையப்போகும் லாபமென்ன! அதனால் எனக்குக் கஷ்டமும் நஷ்டமும்தானே ஏற்படும். நானிவ் விஷயத்தில் சிறிது நிதானமாக நடந்துகொள்ள வேண்டியதல்லவா ?' என்று கேட்டாள். அதற்கு அவன் முன்னமே எல்லாவற்றையும் யோசித்து வைத்திருப்பவன்போல், 'ஆம் இவ்விஷயங்களை யெல்லாம் நான் முன்பே யோசித்தேன். நீ திடீரென்று அந்த உடையைக் கொடுத்து விடுவாய் என்று நான் நினைக்கவேயில்லை. அதைப் பற்றியும் யோசித்துப் பார்த்தே உனக்கு அந்த உடையின் பதிலாக ஐந்நூறுபவுன் கொடுப்பதென்று முடிவு செய்திருக்கிறேன். இது உனக்குச் சம்மதம்தானே ?'

என்று கேட்டான். அதற்கு அவள், 'ஓ ஹோ, அப்படியா! அவர்கள் இந்த விஷயத்தை மிக முக்கியமானதாகவல்லவோ நினைத்திருக்கிறார்கள். அதையும் நான் கவனிக்கவேண்டாமா?' என்று சொன்னதும் அவள் கருத்தை யறிந்துகொள்ள முடியாமல் சந்திரசேகரன், 'நீ சொல்வதுதான் என்ன ? எனக்கு ஒன்றும் புரியவில்லையே. நாம் இருவரும் பழைய சிநேகிதர்கள் அல்லவா? இந்தச் சிறு உதவியை நீ எனக்குப் புரியலாகாதா? இவ்விஷயத்தை விரைவில் முடிவு செய்து விடுவோம். தினகரம் பிரபு வந்துவிடுவான். இதோ உனக்காக ஐந்நூறுபவுன் முடிப்பு கொண்டு வந்திருக்கிறேன்' என்று அவசரத்துடன் கேட்டான். அதற்கு அவள் பரிகாச தோரணையில் அலட்சிய புத்தியுடன், 'எனதன்புள்ள சந்திரசேகரம் பிரபுவே! உனக்கு நான் அதிக வந்தனம் செலுத்துகிறேன். ஆயினும் நான் அறிந்திருக்கும் இரகசியமும் என்னிடமிருக்கும் அந்த உடையும் ஐந்நூறு பவுனுக்குமேல் பெறாது என்று நினைக்கிறாயா? சிறிது யோசித்துப்பார்' என்றாள்.

அப்போது சந்திரசேகரம் பிரபு அந்த விஷயமே மிக்க உபாயமான விஷயமாகக் கருதியவன்போன்ற தோரணையில் 'என்ன பிரமாதம். அவைகளை வைத்துக்கொண்டு நீ எதை ருஜூப்பித்துவிட முடியும்! என்று கேட்கவும் அப்போது கமல குமாரி, 'ஏன்? பல விஷயங்களை ருஜூப்பிக்கலாம். ஹேமவதி சீமாட்டி என்னும் ஒரு பிரபு குலமாது குறிப்பிட்ட ஒரு விருந்துக்குச் சென்றபோது குறிப்பிட்ட ஒருவித உடையை அணிந்து வந்தாள் என்பதை ருஜூப்பிக்க முடியும். அவளுடைய குமாரன்தான் அதை அவளுடையபெட்டியிலிருந்து எடுத்ததை ஒப்புக்கொள்ள மறுத்தாலும், அந்த உடை ஹேமவதி சீமாட்டிக்காகத்தான் தைக்கப்பட்டது என்பதை எப்படியாவது கண்டு பிடித்து விடலாம்' என்று

இன்னும் ஏதோ சொல்லப் போகும்போது சந்திர சேகரம் குறுக்கிட்டு, 'கமலா! நீ இப்படி துவேஷ புத்தியுடன் சீமாட்டிக்கு விரோதமாகப் புறப்பட்டு விடுவாய் என்று நான் நினைக்கவில்லையே' என்று சொன்னதும் அவளும் பின் வாங்காமல், 'சந்திரசேகரம் பிரபுவே! நீ இவ்வாறு என் முன் பேசுவதற்கு உனக்கு உரிமையிருக்கிறதா? இப்போது அச்சீமாட்டியுடன் ஏதோ சமாதானம் செய்து கொண்டு விட்டதால் அவளுடைய இரகசியத்தை மறைத்துவிடப் பார்க்கிறாய். ஆனால் நீ சிலதினங்களுக்கு முன் அவளுக்கு விரோதமாக அவளுடைய இரகசியத்தை ஊரெல்லாம் பகிரங்கப்படுத்த முயலவில்லையா? அதுபோலவே இப்போது அந்த இரகசியம் எனக்கு அதிக விலையுள்ளதாகக் காணப்படுகிறது?' என்று சொல்லிவிட்டு அவன் என்ன பதில் சொல்லப் போகிறான் என்பதை அறியும் அவாவுடன் அவனது முகத்தை உற்றுப் பார்த்தாள் அவன் தான் ஆத்திரப்பட்டு அந்த விஷயத்தை அவளிடம் சொல்லிவிட்டதற்காக வருத்த மடைந்தவனும், விஷயம் இவ்வாறு மாறிவிட்டதற்காக ஆத்திரமடைந்தவனுயும் கடுகடுத்த முகத்துடன், 'சரி, அப்படியானால் அதற்காக நீ கேட்கும் தொகைதான் என்ன?' என்று கேட்டான்.

அப்போது அவள் சிறிதும் கவலைப்படாதவள் போல் நிதானமாக, 'பிரபுவே! இவ்வளவு தூரம் நம்மில் பேச்சு வார்த்தை நடந்தபின் உன்னுடன் பேரம் செய்ய நான் தயாராக இல்லை' என்று சொல்லிக்கொண்டே அவன் இஷ்டப்பட்டால் எழுந்து போகட்டும் என்று நினைப்பவள் போல் தான் உட்கார்ந்திருந்த ஆசனத்தை விட்டு எழுந்தாள். அதைக்கண்ட சந்திரசேகரம் பிரபு, அவளைத் தேற்றும் எண்ணத்துடன், 'எனதன்புள்ள கமலா! இதற்காக நாம் இருவரும் இவ்வாறு மனஸ்தாபத்தை அடைவதா? நான் உன்னை

ஆத்திரப்படுத்தும் உத்தேசத்துடன் ஒரு வார்த்தையும் பேச வில்லை. எனக்கு அந்த எண்ணமேகிடையாது. எப்படியாவது உன்னைத் திருப்தி செய்வதுதான் என் உத்தேசம். நீ என் பழைய காதற் களஞ்சியமல்லவா? நாம் பழையபடி அன்பர் களாக இருப்போம். அதற்கு அடையாளமாக உன் கரத் தைக் கொடு' என்று பரிவுடன் கேட்டான். அவள் சிறிதும் அசையாமல், 'பிரபுவே! முடியாது. நீ என்னை அலட்சியமாக வும், அந்யாயமாகவும், பேசிவிட்டாய். ஆகையால் நம்மு டைய சினேகம் முடிவடைந்து விட்டது. என்னிடம் இருக் கும் இரகசியம் சம்பந்தமாய் நான் அது சம்பந்தப்பட்ட முத லாளியிடமே பேரம் செய்துகொள்கிறேன்' என்று கண்டிப் பாகக் கூறிவிட்டாள்.

அதைக் கேட்டுக் கலக்கமடைந்த சந்திரசேகரம் பிரபு 'ஓ, அப்படியானால் நீ ஹேமவதி சீமாட்டியுடன் நேராகக் கடி தப் போக்குவரத்துசெய்வதாகத் தீர்மானித்து விட்டாயோ?' என்று கேட்டான். அதற்கு அவள், 'நான் சீமாட்டிக்குக் கடிதம் எழுதிக்கொண்டிருப்பதில் காலப்போக்கு செய்யமாட் டேன். நான் நேரிலேயே போய் வந்துவிடுகிறேன்' என்று மிடுக்காகச் சொன்னாள். அவன், அதனால் நீ உன் காதலனா கிய தினகரனுக்கே விரோதம் செய்வது போலாகாதா? அத னால் உனக்கும் அவனுக்கும்கூட விரோதம் ஏற்பட்டுவிடுமே? என்ன செய்வாய்! என்று கேட்க அவள், அலட்சியத்துடன் 'தினகரனைபற்றி எனக்கென்னகவலை. முன்னரே நான் அவன் விஷயத்தில் வெறுப்புகொண் டிருக்கிறேன், மற்றொரு விஷய மும் நான் உன்னிடம் ஒளிக்காமல் சொல்லி விடுகிறேன். அதாவது எவ்வளவு சீக்கிரத்தில் நான் அவனைத் தொலைத்து விடுகிறேனோ அவ்வளவும் எனக்கு நல்லதுதான். நான் ஹேம வதி சீமாட்டியிடமிருந்து பெறும் தொகை மிக்க அதிகமாய்

இருக்கு மாதலால் அதுவே எனக்குப் போதும்' என்று சரசர வென்று பேச ஆரம்பித்தாள். அப்போது சந்திரசேகரன், 'ஓஹோ! அப்படியானல் நீ இந்த இரகசியத்துக்காக எவ்வளவு அதிகமான தொகைகேட்க முடியுமோ அவ்வளவையும் கேட்டு விடுவதெனத் தீர்மானித்திருக்கிருய் போலும்' என்று கவலையுடன் விசாரித்தான். அதற்கு அவள் 'பிரபு, நான் உன்னுடைய தயவினல் பெற்ற அந்த இரகசியத்தின் முக்கியத் தன்மைக்குத் தக்கபடி யானதாகத்தான் நான் கேட்கும் தொகையும் இருக்கும், என்று பரிகாசச்சிரிப்புடன் கூறினள். மேலும் அவள், 'அந்த இரகசியத்தை நான் வெறும் வம்பளப்புதற்குத்தான் ஏற்றதென்று முதலில் நினைத்திருந்தேன். ஆனல் அது விலைமதிக்கத் தக்கதெனச் சொல்லிக் கொடுத்ததும் நீதான். அதற்காகவும் உனக்கு நான் அதிகம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்' என்று அதே தோரணையில் பேசி முடித்தாள்.

தன்னுடைய நிலைமை மிகக் கேவலமாய் விட்டதை உணர்ந்த சந்திரசேகரன், 'கமலம்! எனது பேச்சைச் சிறிது கவனமாகக் கேள். நான் இப்போது கொஞ்சம் பணம் வைத்துக்கொண்டிருக்கிறேன். நீ கேட்கப்போகும்தொகை இன்னதென்று எனக்குத்தெரிந்தால் அதற்குத்தக்க ஏற்பாடுசெய்ய முயல்வேன். அதனல் நீ கிருஷ்ணகிரிக்குச் செல்லும் சிரமமும் நேரில்போய் இதை யெல்லாம் பேசவேண்டிய அசந்தர்ப்பமான நிலைமையும் இல்லாமற்போகும்,' என்று தெரிவித்தான். அதற்குக் கமலகுமாரி, 'ஓ, பிரபுவே, அப்படியானல் நீ பெரிய பணக்காரனய் ஒரு நிமிஷத்தில் மாறிவிட்டாய்போலும்! ஒரு நிமிஷத்தில் நான் கேட்கும் பணத்தைக் கொடுப்பதாகச் சொன்னல் நீ பணக்காரனகத்தான் மாறி இருக்க

வேண்டும். நீ ஐயாயிரம் பவுன் கொடுக்க முடியுமா,' என்று கேட்டாள். அதற்கு அவன், 'நான் இன்னும் மூன்று நாட்களில் பணத்தைக் கொடுத்துவிடுகிறேன். இப்போது ஒரு ஆயிரம் பவுன் கொடுத்துவிட்டு மீதி நாலாயிரத்தை இன்னும் மூன்று தினங்களில் கொடுப்பதாக எழுதிக் கொடுத்தால் நீ அந்த ஆடையைக் கொடுத்துவிடுவாயா?' என்று கேட்டான். அப்போது அவள் வேடிக்கையாக, 'அது முடியாது. நான் நினைத்தது வேறு. அந்த இரகசியம் ஐயாயிரம்ரூபாய் மதிப்புப் பெறும் என்பதை உன் வாயாலேயே ஒப்புக்கொள்ளும்படி செய்துவிட்டேன். என் உத்தேசம் பதினாயிரம் பவுனைப் பெறவேண்டு மென்பதுதான். அதைக் கொடுத்தேனும் என் வாயை அடைத்து வைக்க ஹேமவதி சீமாட்டி தயாராக இருப்பாள். ஆகவே பிரபுவே இப்போது நீ போய் வா,' என்று கண்டிப்பாகச் சொன்னாள்.

அவ்வாறு சொல்லி முடிந்ததும் அவள் சேவகனை அழைக்கும் மணியையும் அடித்து விட்டதால் இனி தான் அங்கு இருப்பதிலும், அவளைச் சமாதானப் படுத்த முயல்வதிலும் யாதொரு பயனுமில்லை யென்பதை உணர்ந்த சந்திரசேகரம் பிரபு, தான் செய்த குற்றத்தாலேயே தனக்கு விளைந்துள்ள அபாரதீமையை அறிந்துகொண்டு அதற்காக வருத்தமடைந்தவனாய் அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டான். வெளியில் தனக்காகக் காத்திருந்த வண்டியில் அமர்ந்து ஊர் செல்ல அவ் வண்டியில் ஏறுவதற்காகக் கால் எடுத்து வைக்கும் போது அவன் மனதில் ஒருவித எண்ணம் தோன்றியது. அதன்படி செய்தால் தன் காரியம் சித்தியாகுமென முதலில் நினைத்தான். ஆகவே வண்டியைச் சிறிது தூரத்திலுள்ள

ரஸ்தாவில் கொண்டுபோய் நிறுத்தும்படி வண்டிக்காரனிடம் சொல்லிவிட்டு அவன் மட்டும் அம்மாளிகையின் வாயிலுக்குச் சமீபத்தில் ஓரிடத்தில் யாருக்கும் புலப்படாத வண்ணம் நின்று அம்மாளிகைக்கு யார் வருகிறார்கள் என்று பார்த்துக் கொண்டிருந்தான். சிறிது நேரத்துக்கெல்லாம் அம்மாளிகையின் வாயிலின் முன் ஒரு வண்டி வந்து நின்றது. அதிலிருந்து இறங்கியவன் தினகரம் பிரபுவே என்பதை அவன் தெரிந்துகொண்டான். தினகரன் உள்ளே நுழையும் வரையில் காத்திருந்து அவன் உள்ளே சென்ற பிறகு தானும் வாயிலைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்து அவன் சகஜமாகக் கமல குமாரியைச் சந்திக்கும் அறைக்குப்பின்னால் ஒரு தாழ்வாரத்தில் ஒளிந்தான். சந்திரசேகரனைக் கண்ட அம்மாளிகையின் வேலைக்காரர்களும் அவன் கமலகுமாரிக்கும், தினகரனுக்கும் தெரிந்தவன் என்பதை அறிவார்களாதலால் அங்கிருப்பதைக் குற்றமாகக் கொள்ளவில்லை. அவன் அங்கிருந்த ஒரு வேலைக்காரியிடம் கொஞ்சம் பணம் கொடுத்துத் தன்னைக் கமலகுமாரியின் பிரத்யேக அறையில் கொண்டு போய் விடும்படி கேட்டுக்கொண்டான்.

அந்த வேலைக்காரி அவன் கொடுத்த பணத்தைப் பெற்றுக்கொள்ளச் சிறிதும் பின்வாங்காமல், 'அந்த அறைக்குப் பக்கத்து அறையில் இப்போது என்எஜமானியுடன் தினகரம் பிரபு இருக்கிறானே என்ன செய்வது?'' என்று கேட்டாள். அதற்குச் சந்திரசேகரன், 'ஆம், அவன் இருப்பது எனக்கும் தெரியும். அவனை ரஸ்தாவிலேயே சந்தித்தேன். அரைமணி நேரந்தான் இருந்துவிட்டுப் போய்விடுவதாகச் சொன்னான். ஆகையால் தாமதமில்லாமல் அங்கே அழைத்துப்போ' என்றான். அப்போது அவள், 'ஐயா, அதற்கு ஆட்சேபமில்லை. எனினும் உன்னைப்போன்ற நிரந்தரமில்லாத பல ஆட்களுடன்

பேசுவதைவிட தினகரம்பிரபுவே மேல் என்று எஜமானியே பலமுறை கூறியிருக்கிருள்' என்று சொல்லவும், அவன், 'அதெல்லாம் எனக்கும் தெரியும். இப்போது நீ அக்கதையை யெல்லாம் பேசிக்கொண்டிருக்க வேண்டாம். எப்படியாவது திருட்டுத்தனமாக என்னை அவ்வறையில் நுழைத்து விடு' என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டான். தன் எஜமானியின் இரகசியம் ஒன்று தனக்கும் தெரிந்திருப்பது நல்லதே என் னும் எண்ணத்துடன் அவளும் அவனை அம்மாளிகையின் சமயலறை வழியாக அழைத்துச் சென்ருள். போகும் வழி யில் அவன், 'பெண்ணே, பயப்படாதே. யாராவது ஆட்கள் பார்த்துவிட்டாலும் அவர்களுக்கும் ஏதேனும் சில்லறை கொடுத்து அவர்களது வாயை மூடிவிடலாம். அதற்காகப் பயப்படாதே' என்று சொன்னுன்.

அந்த வேலைக்காரியும், 'ஓ, நீர் எல்லாருடைய வாயை யும் மூடிவிடுவதில் சமர்த்தர் போலும்' என்று வேடிக்கை யாகக் கேட்கவும், அவன், 'ஆம், இப்படித்தான் மூடுவேன்' என்று கூறிக்கொண்டே அவள் தோளின் மீது கையைப் போட்டு அவளது கன்னத்தில் ஒரு முத்தத்தைக்கொடுத்தான். சமையல் வீட்டில் நுழைந்ததும் அங்கிருந்த வேலைக்காரர்கள் இரண்டொருவருக்கும் தலா ஒரு பவுன்வீதம் கொடுத்து விட்டு அங்கிருந்த படிக்கட்டுகளின்வழியே மாடிக்குச்சென்று பிரத்தியேக அறையை அடைந்தார்கள். அதற்குப் பக்கத்தி லுள்ள அறையில் தினகரம் பிரபுவும், கமலகுமாரியும் உரத்த சத்தத்துடன் ஏதோ சண்டை போட்டுக் கொண்டிருந்தனர். அந்தக் கூச்சலில் பக்கத்திலுள்ள அறைக்கு இவர் கள் வந்ததும் அவர்களுக்குத் தெரியவில்லை. சந்திரசேகரனை அந்த அறையில் விட்டுவிட்டு அவ்வேலைக்காரியும் போய் விட்

டாள். அவள் போனதும் சந்திரசேகரன் கமலகுமாரியின் பெட்டிகளையெல்லாம் ஒன்றன்பின் ஒன்ருகத் திறந்து தேட லானுன். அவன் நடப்பது யாருக்கும் கேட்காதபடி கட்டை விரலாலேயே நடந்து சந்தடி யில்லாமல் ஹேமவதி சீமாட்டி யின் ஆடையைத் தேடலானுன்.

இவ்வாறு சந்திரசேகரன் அந்த ஆடையைத் திருட்டுத் தனமாகத் தேடிக்கொண்டிருந்தபோது கமல குமாரியும் தின கரம் பிரபுவும் இருந்த அறையில் என்ன நடந்தது என்பதைக் கவனிப்போம். தினகரன் அதிக கோபக்காரன் என்பதும், அவன் எந்த விஷயமாகக் கோபித்துக் கொள்கிருனே அது சம்பந்தமாய் எந்த ஆசாமியை முதலில் பார்க்கிருனே அந்த ஆளிடமே தன் கோபத்தைக் காண்பிக்கும் சுபாவமுடைய வன் என்பதும் வாசகர்களுக்குத் தெரிந்த விஷயம். தினகரன் கமல குமாரியின் வீட்டுக்கு வருவதற்கு முன்னர் மௌண்ட் ரோட்டிலுள்ள ஒரு ஓட்டலில் அவன், தன்னைப்போன்ற போக்கிரிகள் சிலருடன் ஆகாரம் அருந்திக்கொண்டிருந்த போது ஏதோ மனஸ்தாபமான பேச்சு ஏற்பட்டு அவர்களில் ஒருவன் தினகரனைத் திட்டிவிட்டான். இதனுல் அதிக கோப மடைந்த தினகரன் அந்த நண்பர்களிடம் தன் கோபத்தைக் காண்பிக்க முடியாமல் அதே கோபத்துடன் தன் வைப்பாட் டியின் வீட்டுக்கு வந்து சேர்ந்தான். கமல குமாரி அந்த அறையில் ஒரு சோபாவில் உட்கார்ந்திருப்பதைக் கண்ட அவன்,' கமலம் நீ என்னைக் கண்டதும் இன்னும் சிறிது சந் தோஷத்தையும் உற்சாகத்தையும் காண்பிக்க வேண்டாமா?' என்று கேட்டான். எப்படியாவது தினகரனுடன் சண்டை போட்டுக்கொண்டு விடவேண்டுமென்று நினைத்திருந்த அவள் சிறிதும் அவனை லட்சியம் செய்யாமல் தான் சோபாவில் உட்

கார்ந்தபடியே, 'நீ சொல்வது எனக்கு விளங்கவில்லையே. நான் உன்னைக் கண்டதும் சோபாவிலிருந்து ஓடிவந்து உன்னை அணைத்துக்கொண்டு வரவேற்க வேண்டுமெனக் கருதுகிறாயோ?' என்று கேட்டாள்.

அப்போது தினகரன் சிறிது ஆத்திரமடைந்து, 'ஆம், அப்படித்தான் செய்யவேண்டும். அவ்வாறில்லை யென்றால் நான் இவ்வளவுசெலவில் ஏன் ஒரு காமக்கிழத்தியைவைத்துக் கொள்ளவேண்டும்? என்னை நீ திருப்திசெய்ய வேண்டாமா?' என்று கேட்டான். அதற்கு அவள், 'ஓகோ, அப்படியா! நீ எனக்குத் திருப்தியை அளிக்காவிட்டால் நான்தான் ஏன் உன்னைக் கட்டிக்கொண்டு அழவேண்டும்?' என்று சொன்னதும் தினகரன் கோபத்துடன், 'ஏ, நன்றிகெட்ட மாதே! நான் உனக்காக எவ்வளவோ செய்திருக்கிறேன். நீ என்னை அடையும்போது உன்னிடம் ஒரு பைசாகூட இருக்கவில்லை அல்லவா? உன் வீடு ஆபாசமாக இருக்கவில்லையா? உன்னிடம் ஒரு நகையாவது இருந்ததா? நான் உனக்குப் பெருந்திரளான பணத்தைக்கொடுத்து எவ்வளவோ சௌகரியங்களை ஏற்படுத்திக் கொடுக்கவில்லையா?' என்று கேட்டான். அதைக் கண்ட கமல குமாரி அவனை எதிர்ப்பதென்று முடிவு செய்து கொண்டு, 'அடே, அயோக்கியப் பையலே! உன் நகைகளும் சாமான்களும் மகாப் பிரமாதமா? இதைப்போல் ஆயிரம் மடங்கு நீ எனக்குக் கொடுக்கலாம். உன்னைப் போன்ற எத்தனையோ பணக்கார வாலிபர்கள் என் அழகைக் கண்டு மோகித்து எனக்காக எதையும் செய்யக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். ஒரு நடின மாதோ அல்லது தாசியோ குறைந்தது அரை டஜன் பேர்வழிகளையாவது இன்சால்வெண்ட்டுகளாக ஆக்கவில்லையென்றால் அவள் தனக்குப் புகழைத் தேடிக் கொள்ள முடியுமா?' என்று கூறினாள்.

அவளது பிரசங்கத்தைக் கேட்டுக்கொண்டிருந்த தின கரன், 'ஓகோ, அப்படியா சொல்கிறாய்? உண்மையைச் சொல்லி விடுகிறேன் கேள். உனக்காக நான் என் ஆஸ்தி பாஸ்திகளையெல்லாம் தோற்று இன்சால்வெண்ட் ஆக முடியாது. அப்படித்தான் நீ மிக்க நம்பிக்கைக்குப் பாத்திரமானவள் என்பதை எவ்வகையிலேனும் ருஜூப்பித்திருக்கிறாயா?' என்று அவள்மீது சந்தேகப் படுபவன்போல் கேட்கவும் அவள், 'நான் நம்பிக்கைக்குப் பாத்திரமானவள் என்பதை ருஜூப்பிக்க என்னால் முடியுமென்றாலும் இப்போது உன்னிடம் அதைக் காண்பித்துக் கொண்டிருக்க நான் தயாராக இல்லை,' என்று வெறுப்புடன் கூறினாள். அதுதான் சமயமெனக் கொண்டு தினகரம் பிரபு, 'உன்னால் ருஜூப்பிக்க முடியாதாகையால் ருஜூப்பிக்கமாட்டேன் என்கிறாய். இதோ பார். இந்தப் பாயின்மீது ஒரு கைக்குட்டை கிடக்கிறது. இது உன்னுடையதல்ல என்பது நிச்சயம். இதைக் கொண்டே நீ என் விஷயத்தில் நம்பிக்கைக்குப் பாத்திரமானவளாக இருக்கிறாய் என்று கூற முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறதல்லவா?' என்று கேட்டான். அவளும் அசிரத்தையுடன், 'ஆம், அது என்னுடையதல்ல என்பது உண்மைதான். உன்னைவிடப் பெரிய மனிதனாக இருக்கிற ஒருவனுடையதுதான் அது. ஆயினும் நான் அவனுடனும் சண்டை போட்டு விட்டேன்' என்று கூறியதும், தினகரன் அளவு கடந்த கோபமடைந்து, 'என்னடீ, நீ என்ன உளறுகிறாய்? நான் இங்கு இல்லாதபோது உன்னைக் காணவந்தது யார்? இன்றையதினம் நாடகத்துக்குப் போகாமையால் நீ தனியாக இருக்கப்போவதாகக்கூறினாயே,' என்று ஆத்திரத்துடன்கேட்டான். அவள் ஏதோ ஒருவிதமான பரிகாசச் சிரிப்புடன், 'நான் அப்படிச் சொன்னேன். ஆயினும் யாரோ ஒருவர்

இங்கு வந்துபோனதாகத்தான் தெரிகிறது,' என்று பதிலளித்தாள்.

உடனே தினகரன், கோபத்தால் தன் தேகம் பூராவும் நடுநடுங்க ஆத்திரத்துடன், 'இப்போது இங்கே வந்து போனது யார் என்பதைச் சொல்' என்று அதட்டினான். அப்போதும் அவள் சிறிதும் விட்டுக் கொடுக்காமல், ,ஓ! நான் செய்யும் காரியங்களையும், அதற்கான காரணங்களையும் உன்னிடம் சொல்லிக்கொண்டிருக்க வேண்டுமென்னும் அவசியம் ஒன்றும் எனக்கில்லை' என்று பதிலளித்து விட்டாள். அப்போது அவன், 'நீ என்னை ஏமாற்றுவதாகவும், முட்டாளாக்குவதாகவும் இருந்தால் நான் அதை எளிதில் விட்டுவிட முடியாது. நீ எப்படியாவது என்னுடன் சண்டைபோட வேண்டுமென்று தீர்மானித்திருக்கிறாய் எனத் தெரிகிறது. என்னை இந்த வீட்டை விட்டுத் துரத்திவிடப் பார்க்கிறாய். இந்தக் கைக்குட்டையின் சொந்தக்காரனை நீ எங்கேயோ ஒளித்து வைத்திருக்க வேண்டுமென்று நினைக்கிறேன். ஆதலால் நான் இந்த வீட்டை ஒருமூலை முடுக்கும் விடாமல் தேடிப்பார்ப்பதாக உத்தேசித்திருக்கிறேன்' என்றான். அவளும் சந்தோஷத்துடன், 'அப்படியேசெய். ஆனால் நீ தேடிப் பார்ப்பதிலிருந்து யாரும் அகப்படாவிட்டால் நீ அநாவசியமாக என்மீது சந்தேகப்பட்டதற்காகத் தண்டனையாக எனக்கும் உனக்குமுள்ள சம்பந்தம் அற்றுப்போக வேண்டியது தான்' என்றாள். அதற்கு அவன், 'ஓகோ! நான் சொன்ன காரியத்தைச் செய்வதினின்றும் என்னைத் தடுக்கப் பார்க்கிறாய். அது முடியாது, நான் தேடியே முடிப்பேன்' என்று சொல்லிக் கொண்டே எதிரிலிருந்த மெழுகுவர்த்தி ஒன்றை எடுத்து விளக்கை ஏற்றிக்கொண்டு தேடுவதற்காக அவ்வறையினின்றும் புறப்பட்டான். கமலகுமாரியோ சோபாவில் சாய்ந்துகொண்டு அவன்

செய்வது பைத்தியக்காரத் தனமென நினைத்துச் சிரிக்க ஆரம்பித்தாள்.

அவன் தேடப்போனதும் கமலகுமாரியின் வேலைக்காரி தன் எஜமானியிடம் சென்று அதிக பயபக்தியுடன், 'அம்மணி! அவர் அகப்பட்டுவிட்டால் என்ன செய்வது?' என்று கேட்டாள். அவள் சொல்வது இன்னதென்று அறிந்து கொள்ள முடியாத கமலம், 'என்னடி, அது? என்ன சொல்கிறாய்' என்று ஆச்சரியத்துடனும் சந்தேகத்துடனும் கேட்டாள். அதற்கு அவள், 'என்ன இம்மாதிரி கேட்கிறாயே; சந்திரசேகரம்பிரபு வீட்டில் இருப்பது உனக்குத்தெரியாதா?' என்றாள். அப்போது கமலகுமாரி, 'சந்திரசேகரனா? அவன் அப்போதே போய்விடவில்லையா?' என்றுகேட்க,அவ்வேலைக்காரி, 'ஆனால் அவர் திரும்பி வந்து மேல்மாடிக்கு வழி காட்டும்படி கேட்டு இங்கே வந்திருக்கிறார். அவர் இப்போது அகப்பட்டு விடுவது நிச்சயம்.' என்று சொல்லும் போதே அடுத்த அறையில் தினகரன் ஆச்சர்யத்துடனும் கோபத்துடனும் பேசுவதுபோல் கேட்டது. அதைக் கேட்டதும் என்ன ஆகுமோ என்று வேலைக்காரி பயந்தாள். ஆனால் கமலகுமாரி சிரித்துக்கொண்டே, 'சரிதான். இந்த விவகாரம் ஒருவிதமாக முடிந்துவிடுவதே நலம். வா, நாமே அந்த அறைக்குப் போகலாம்' என்று சொல்லி வேலைக்காரியை அழைத்துச் சென்றாள்.

இதற்கிடையில் சந்திரசேகரம் செய்வதைக் கவனிப்போம். தினகரன் தேடப்போகிறான் என்பதை அறிந்ததும் அவன் சிறிது பதுங்கினான். தினகரனும் ஒரு அறையில் தேடிவிட்டு வெளியே வரும்போது, தன் இடத்தினின்றும் தப்பித்துச் செல்ல முயன்ற சந்திரசேகரன் எதிர் எதிராக

அகப்பட்டுக்கொண்டான். அவனைக் கண்டதும் தினகரனுக்கு அளவிலா ஆச்சர்யமும் ஆத்திரமும் உண்டாய் விட்டது. அந்தரங்க நண்பன் என்று கருதப்பட்ட அவன் செய்த காரியத்தைக் கண்டு திடுக்கிட்டான். சந்திரசேகரனும் எதிர் பாராத வகையில், தவருன சந்தர்ப்பத்தில் தினகரன் முன் அகப்பட்டுக் கொண்டதற்காக வருந்தினன். 'தினகரம் பிரபுவோ தனது நண்பனுன சந்திரசேகரனிடம் அதிக வெறுப்பு கொண்டு, 'சந்திரசேகரா! நீ செய்தது மிகத் தவருன காரியம்' என்று கடிந்தான். ஆனல் அவனுடன் சண்டைபோடுவதற்கு மட்டும் பயம். எனினும் சந்திரசேகரன் என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் தவித்துக்கொண் டிருந்தபோது கமலகுமாரி தன் வேலைக்காரியுடன் அங்கே வந்து சேர்ந்தாள். அங்குள்ள நிலைமையைக்கண்டு சிரித்தாள். மகா ஆத்திரமும் அவமானமுமடைந்த தினகரன், 'சரிதான். இனி துயரப்படுவதில் பயனில்லை. சந்திரசேகரா! இத்துடன் நமது சினேகம் ஒழிந்துவிட்டது. நீ கிருஷ்ணகிரிக்கு எங்கள் மாளிகைக்குப் போயிருப்பதாகக் கேள்விப்பட்டேன். இனி நீ என் வீட்டில் அதாவது விரைவில் எனக்குச் சொந்தமாகப்போகிற அவ்வீட்டில் காலடியும் வைக்கக்கூடாது,' என்று கண்டிப்பாகக் கூறினன்.

இவ்வாறு கூறிக்கொண்டே அவன், கமலகுமாரி, சந்திரசேகரன் ஆகியோரின் தொடர்பே சிறிதும் விரும்பாதவன் போல் ஆத்திரத்துடன் அவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டான். மாடியிலிருந்து கீழே இறங்குகையில் படிக்கட்டுகளில் சந்திரசேகரன் ஒரு உதை கொடுத்தால் என்ன செய்வது என்பது பற்றியும் அவன் அச்சப்படவில்லை. கமலகுமாரியோ அல்லது சந்திரசேகரனே அவனை நிறுத்திவைத்துக் கொள்ள எத்தகைய முயற்சியும் செய்யவில்லை. கமலகுமாரி அவன் எக்

காரணத்தாலாவது ஒழிந்தால் போதுமென்று இருந்ததால் அவனை நிறுத்திக்கொள்ளப் பிரயத்தனப்படவில்லை. சந்திரசேகரனோ அப்படிப்பட்ட அசந்தர்ப்பமான நிலைமையில் அவனுடன் பேசவும் வெட்கப்பட்டதால் தினகரன் போகும்போது அவனைக்கூப்பிட சந்திரசேகரனுக்குத் தைரியம் பிறக்கவில்லை. தினகரம்பிரபு அம்மாளிகையை விட்டுச் சென்றதும், அவன் போய்விட்டானே என்னும் கவலை சிறிதுமின்றி கல கல வென்று அசட்டுச் சிரிப்புடன் சந்திரசேகரனருகில் சென்று 'நீ மகா வெறுக்கத்தக்க அயோக்கியன்' என்று கூறினாள். அதைக்கேட்ட சந்திரசேகரன் மனக்குழப்ப மடைந்தவனாய், 'கமலம்! இவ்வளவு கடுமையான வார்த்தைகளை நீ உபயோகிக்கலாகாது' என்று கூறினான். அப்போது கமலகுமாரி, 'இனி நீ என்னை அத்தகைய நெருங்கிய முறையால் அழைக்கக்கூடாது, ஜாக்கிரதை என்று சொல்லிவிட்டுத் தன் வேலைக்காரியைப் பார்த்து, சந்திரசேகரன் பக்கம் தன் கையை நீட்டியவண்ணம், 'அதோ அந்த மனிதன் திருடன், கொள்ளைக்காரன், பரம அயோக்கியன்' என்று சரமாரியாக வார்த்தைகளை அடுக்கினாள். அதையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த சந்திர சேகரன் வெளுத்த முகத்துடன், 'ஐயோ, கடவுளே! கமலம், இப்படிப்பட்ட தாங்கமுடியாத வார்த்தைகளை என் எதிரில் பேசவேண்டாம். அவ்வளவு இழிவாக என்னைப் பற்றிச் சொல்லக்கூடாது' என்றான்.

அப்போதும் அவள் அவனுடைய விஷயத்தில் சிறிதேனும் கருணையோ, தாட்சண்யமோ காண்பிக்க விரும்பாதவள் போல், 'நான் சொன்னவைகளெல்லாம் உனக்குப் பொருந்தும். பிரபுவே, ஓடிப்போ, இல்லாவிடில் கொள்ளைக்காரன் தான் எனச்சொல்லி உன்னைப் போலீஸ் காவலில் ஒப்படைத்துவிடுவேன்.' என்றாள். அப்போது அவன் வேறு விதி

யில்லையென்று தெரிந்துகொண்டு அம்மாளிகையை விட்டுப் போகும் உத்தேசத்துடன் படிக்கட்டுகளின் வழியே இறங்குகையில் கமலகுமாரியிடம், 'நீ இப்போது எனக்கு இழைக்கும் அவமானத்துக்குப் பதிலாக நீ இதற்காக வருந்தும்படி நான் செய்யாமற் போவேனு?' என்றுகூறிக்கொண்டே சென்றான். அதைக்கேட்ட அவள் கோபத்துடனும் பரிகாசமாகவும், 'நீயாவது நான் வருந்தும்படி செய்வதாவது; பார்த்துக்கொள் ளலாம் போ. கொள்ளைக்காரனுகிய நீ முதலில் வீட்டை விட்டுப்போ' என்றாள். சந்திரசேகரன் ஒன்றும் பதில் கூறுமல் அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டான். பாவம்! ஏதோ பிரமாதமாகக் காரியத்தைச் சாதிக்கப் போவதாக ஹேமவதி சீமாட்டியிடம் சொல்லிவிட்டுவந்த சந்திரசேகரன் ஏமாற்றத்தையும், அவமானத்தையும் அடைந்தான். அதிலும் கேவலம் ஒரு விபசாரியிடம் இவற்றையடைய நேர்ந்ததற்காக அவன் அதிகம் மனம் வருந்தினன்.

67-வது அத்தியாயம்.

—:():—

பிரபுகுலமாதும், நடனமாதும்

சந்திரசேகரம் பிரபு கமலகுமாரியைப் பார்த்து விட்டுச் சென்ற தினத்தின் அடுத்தநாள் பகல் சுமார் பன்னிரண்டு மணிக்கு ஹேமவதி சீமாட்டி கிருஷ்ணகிரியில் தன் மாளிகைக்கு அடுத்த ஆற்றோரம் உலாவிக்கொண் டிருந்தாள். அப்போது அவள் பற்பல விஷயங்களைப்பற்றி யெல்லாம் சிந்தித்துக் கொண்டிருந்தாள். அவள் நினைத்த விஷயங்களில்

ஒன்றுவது அவளுக்குச் சந்தோஷத்தைத் தருவதாக இல்லை. அதிலும் சந்திரசேகரனை என்ன வேலையாக அனுப்பியிருந்தாளோ அது அவளுக்கு அதிக விசாரத்தைக் கொடுத்துக் கொண்டிருந்தது. சென்ற சில வாரங்களாக அவளது நிலைமை மிக்க நெருக்கடியாய்ப் போனதை அவள் உணராமல் இல்லை. எப்பக்கத்திலிருந்தும் அவளுக்குப் பயமுறுத்தலும், துக்கமும் சம்பவிக்க ஆரம்பித்து விட்டது. ஆகவே அவள் எவ்வளவு தான் மனேஉறுதி வாய்ந்தவளாக இருந்தபோதிலும் அச்சமயத்தில் அவள் மனேவியாகூலத்துடன் அவஸ்தைப்பட்டாள். அதுமட்டுமா? அவள் புருஷன் இறந்துபோன பின்னர் 19-வருஷகாலமாக அவள் பரிசுத்த முடையவளாக இருந்தும் இப்போது அந்த நிலைமையும் போய்விட்டது. அப்படியாவது அவள் மனமார நேசித்த மோகனதாஸின் கரத்தில் வீழ்ந்து அவனல் அணைத்துக் கொள்ளப் பட்டிருந்தாலும் அவள் மனம் சிறிது திருப்தியையேனும் அடைந்திருக்கும்; அப்படியு மில்லை. தான் அதிகம் வெறுத்த சந்திரசேகரன் தன்னை அழைத்துக்கொள்ளும்படி இடங்கொடுக்க வேண்டியதாயிற்றே, அது தன் ஜன்மத்தையே பாழ்படுத்திவிட்டது எனக் கருதினள். அன்பு அல்லது காதல் காரணமாக ஒரு ஆடவனுடைய அணைப்பிற்கு ஆளாவதைவிட்டுக் கேவலம் பயத்துக்காக அவ்வாறு செய்ய நேர்ந்ததானது தன் இழி நிலைமையைக் காட்டுகின்றது என்று நினைத்து வருந்தினள். இதனல் அவளுக்குத் தன்னிடமே ஒரு வித வெறுப்புத் தோன்றலாயிற்று.

ஹேமவதி சீமாட்டி பலவாருகச் சிந்தித்துக் கொண்டிருந்த அச்சமயத்தில், சந்திரசேகரன் போன காரியம் ஆகாவிட்டால் என்ன செய்வது?' என்னும் கவலை திடீரென்று அவள் மனதில் உதயமாயிற்று. செல்வநாதர் அந்த மோகன

தாஸுக்காகக் கடைசிவரை ஹேமவதியை எதிர்ப்பதென்று முடிவு செய்திருக்கிறானே என்று நினைத்தபோது அவளுக்கு அவளிடம் அளவு கடந்த வெறுப்பும் துவேஷமும் ஏற்பட்டது. அவளை எப்படியாவது பழிவாங்க வேண்டுமென்று தீர்மானித்தாள். அவ்வளவுதானா?' இந்த இரண்டுமூன்று தினங்களாக ஷண்பகவல்லி தன்னிடம் அவ்வளவு மரியாதையாக நடந்துகொள்வதில்லையே, அதற்குக்காரணம் யாதாயிருக்கலாமென்னும் யோசனை அதிகமாய்விட்டது. ஷண்பகவல்லி நடந்து கொள்ளும் தோரணையைப் பார்த்தால் தன்னைப்பற்றி ஏதேனும் அவள், உண்மையைத் தெரிந்துகொண்டு விட்டாளோ என்னும் சந்தேகம் ஹேமவதி சீமாட்டிக்கு அதிகமாய் விட்டது. ஒருகால் மோகனதாஸைப்பற்றித் தான் எல்லாரிடமும் புகார்செய்துவிட்டதன் சம்பந்தமாய்த் தன்னிடம் ஷண்பகவல்லி வெறுப்படைந்திருக்கிறாளோவென சீமாட்டி நினைத்தாள். ஆயினும் அவ்வாறு இருக்க முடியாதென்று மறு நிமிஷமே தீர்மானித்தாள். இவ்வாறாக அவள் நீண்டநேரம் பல விஷயங்களையெல்லாம் சிந்தித்துக்கொண்டிருந்தாள். இப்படிச் சிந்திப்பதற்காகவே அவள் தனியாகத் தன் மாளிகையை விட்டு ஆற்றோரம் வந்திருந்தாள். அவளுடைய குமாரியாகிய ராஜேஸ்வரியுடனும், தன் மாளிகைக்கு விருந்தாளியாக வந்திருந்த ஷண்பகவல்லியுடனும் மாளிகையின் தோட்டத்தில் தியாகராஜன் பேசிக்கொண்டிருந்தான். மதனவல்லிச் சீமாட்டியோ தன் வழக்கப்படி மாளிகையிலேயே ஒரு அறையில் புஸ்தகங்களை வாசிப்பதிலும் பின்னர் வேலைசெய்வதிலும், காலங் கழித்துக்கொண்டிருந்தாள். ஆகவே, ஹேமவதி சீமாட்டி தனியாக ஆற்றோரம் வந்தபோது அவளைப் பின் தொடர்பவர்கள் யாரும் இருக்கவில்லை.

ஹேமவதி சீமாட்டி பலவிஷயங்களைச் சிந்தித்துக்கொண்டிருந்ததால் தனக்கும் தெரியாமலே மாளிகையினின்றும் ஒருமைல் தூரம்வரை நடந்துவிட்டாள். பிறகு தான் அவள் திடீரென்று தூக்கத்திலிருந்து கனவுகண்டு விழிப்பவள்போல் விழிப்பு நிலையை அடைந்தாள். அவ்வாறு விழிப்பு நிலையை அடையும்படிசெய்தது எதிரில் வெகுவேகமாக வந்த ஒரு வண்டியின் சத்தமேயாகும். சீமாட்டி அந்த வண்டியைக் கவனித்தபோது அது தன் மாளிகையையே நோக்கிச் செல்கிறதென்பதையும், அதிலுள்ள ஆள் தன்னைக் கவனித்துத் தான் யார் என்பதைத் தெரிந்துகொண்டு விட்டான் என்பதையும் அறிந்தாள். இதற்குள் வண்டியில் இருந்தவனும் வண்டியின் ஜன்னல் வழியாகத் தலையை நீட்டிப் பார்த்ததும் வண்டிக்காரனிடம் வண்டியை நிறுத்தும்படி கட்டளையிட்டான். வண்டி நின்றதும் அவனும் கீழே இறங்கினான். அப்போது ஹேமவதி சீமாட்டி வண்டியினின்றும் இறங்கியவன் சந்திரசேகரம் பிரபு என்பதை அறிந்துகொண்டாள். அவனைக் கண்டதும் அவன் தன்காரியத்தைத் திருப்திகரமாக முடித்துவிட்டிருப்பானென நினைத்துச் சந்தோஷப்பட்டாள். ஆனாலவன் சமீபித்ததும் அவன் முகத்தைப் பார்த்ததிலிருந்து வேறுவிதமாகத் தோன்றியதால் அவள் சந்தோஷமெல்லாம் பறந்துவிட்டது. ஆகவே, உபசார வார்த்தைகள் எதையும் முதலில் பேசாமல், 'நீ உன்காரியத்தில் வெற்றியடைந்தாயா?' என்று கேட்டாள். அப்போது அவன், 'நான் வெற்றியடையவில்லையென்று சொல்லவேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கிறேன்' என்றதும் அவள், 'அப்படியானால் திருப்தியில்லாத ஒருவிஷயத்தை என்னிடம் சொல்வதற்காகவே இப்போது நீ இங்கு வந்திருக்கிறாய்போலும்! நடந்த விவகாரங்களை விவரமாகச் சொல்லிவிடு. என்னைக் காக்க வைப்பதில் பிரயோஜனமில்லை. உடனே சொல்' என்று ஏமாற்றத்துடனும் பரபரப்புடனும்

கேட்டாள். அதற்கு அவன், 'உன்னைக் காக்கவைக்கும் உத்தேசம் எனக்கு இல்லை. நான் எவ்வளவு வேகமாகவும் விரைவிலும் வந்திருக்கிறேன் என்பதிலிருந்தே உன் வேலையை நான் எவ்வளவு முக்கியமாகக் கவனிக்கிறேன் என்பது தெரியவில்லையா?' என்பதற்குள், அவள், 'அப்படியானால் வீண்பேச்சுகளைப் பேசிக்கொண்டிராமல் உடனே என்ன நடந்தது என்பதைத் தெரிவி' என்று கேட்டாள்.

அப்போது அவன், 'நாடக மாதாகிய கமல குமாரி உன்னைக் கண்டுபேச இங்கே வருவாள்' என்றதும், சீமாட்டி குழப்பத்துடன், 'யார், அந்த நாடகக்கணிகையா? என் குமாரன் தினகரனுடைய கூத்தியாரா?' என்று வெறுப்புடன் கேட்டாள். அதற்கு அவன், 'ஆம்; அவள்தான். இன்று மாலைக்குள் உன்னை வந்து பார்ப்பாள் என்பது நிச்சயம். ஆனால் என்னுடன் எத்தகைய ஒப்பந்தமும் பேசிக்கொள்ளாமலும், என் அனுமதியோ இஷ்டமோ கேட்காமலும் அவள் வருகிறாள் என்பதை நீ அறியவேண்டும்!' என்று கூறினான். அதற்குச் சீமாட்டி, 'ஓ, அப்படியானால் அந்த விவகாரத்தை ஒழுங்காக முடிக்க உன்னால் முடியவில்லை போலிருக்கிறது. நீ பிரமாதமாக வாக்களித்ததெல்லாம் வெறும் பொய்யே என்று தெரிகிறது. இவ்வளவுதானா உன் சங்கதி' என்றாள். அதற்குச் சந்திரசேகரன், 'பின்னால் என்ன நடக்கப்போகிறதென்பதை நான் எப்படி அறிவேன். என்னால் இயன்றவரை நான் செய்தேன். என் சேவகன் ஆறுமுகம் விஷயத்தில் நமக்குச் சிறிதும் கவலையில்லை. இந்தக் கமலகுமாரியின் விஷயத்திலும் ஒரு சமாசாரம் தெரிந்துவிட்டது. அதாவது அவள் உன் சமாசாரத்தை வெளியில் எங்கும் விட்டுவிடவில்லை. ஆனால் அவள் வட்டிக்குப் பணம் விடும் காருண்யமற்ற ஜாதியினரைப்போல் பணவிஷயத்தில் கண்டிப்பாக

இருக்கிறாள். அவள் இதற்காக உன்னிடமிருந்து எவ்வளவு அதிகமான பணம் பிடுங்கமுடியுமோ அவ்வளவும் பிடுங்குவதென்று தீர்மானித்திருக்கிறாள். அதற்கு நான் என்ன செய்வேன்?' என்றதற்கு ஹேமவதி சீமாட்டி, 'அந்தச் சங்கதியை நீ ஏன் எனக்கு எழுதியிருக்கக்கூடாது. நான் உன் கடிதம் கண்டு மீண்டும் பணம் அனுப்புகிறவரையில் அவளை ஏன் இரத்தினபுரியிலேயே வைத்திருக்கக்கூடாது' என்று ஆத்திரத்துடன் கேட்டாள். அதற்கு அவன், 'அப்பெண் என்னிடம் மரியாதையாகப் பேசவில்லை. மேலும் அவள் கேட்ட தொகை, அப்பா! அதைச் சொல்லி உன்னைப் பயமுறுத்த நான் விரும்பவில்லை!' என்று சொல்லி முடிக்குமுன்னர் சீமாட்டி பரபரப்புடன், 'அத்தொகை என்ன என்பதைச் சொல், அதை உடனே தெரிவி' என்று ஆரவாரம் செய்தாள்.

அப்போது சந்திரசேகரனும், 'அவள் கேட்பதா? அவள் பதினாயிரம் பவுன் கேட்கிறாள்' என்று சொன்னதும் ஹேமவதி சீமாட்டி அளவுகடந்த ஆச்சர்யத்துடன் திடுக்கிட்டு நின்றாள். அப்போது அவன், 'ஆம்! அவள் அவ்வளவு பெரிய தொகையை நிர்த்தாட்சண்யமாகக் கேட்கிறாள். உண்மையில் நான் அவளிடம் சென்றதில் துரதிர்ஷ்டமுடையவனென்றே சொல்லவேண்டும். அவள் என்னுடன் பேரம்பேசத் தயாராக இல்லையென்றும், உன்னிடமே நேராக வந்து விடுவதாகவும் தெரிவித்தாள். நீ நாகலாபுரம் ஜமீன்தார் வீட்டு விருந்துக்கு அணிந்துவந்த ஆடையை அபகரித்து விட்டால் அவளை எளிதில் வழிக்குக் கொண்டுவந்து விடலாமென நினைத்து அவள் பிரத்யேக அறைக்குள்ளும் திருட்டுத்தனமாகப் போய்விட்டேன். எவ்வளவு தேடியும் உடை அகப்படவில்லை. எப்படியோ தினகரன் தன்னுடைய காமக் கிழத்தியாகிய கமல குமாரியின் சிநேகிதன் எவனோ உள்ளே இருப்ப

தாகச் சந்தேகப்பட்டுத் தேடியதில் என்னைக் கண்டுபிடித்து விட்டான். இதனால் எங்கள் இருவருக்குள்ளும் பிரமாத மாகச் சண்டை ஏற்பட்டுவிட்டது' என்று சொல்லிவரும் போது, ஹேமவதி, 'ஆ, தினகரனுடன் சண்டைபோட்டுவிட் டாயா?' என்று திடுக்கிட்டுக் கேட்டாள். அதற்கு அவன், 'ஆம நான் மரியாதையுள்ள மனிதனாக; இருந்தால் இனி அவ னுக்குச் சொந்தமான இந்த சுந்தரவிலாச மாளிகையிலோ அல்லது இரத்தினபுரியிலுள்ள உங்கள் மாளிகையிலோ காலடியும் வைக்கக்கூடாதென்று கண்டிப்பாகச் சொல்லிவிட் டான். இப்போது உனக்கு எல்லாம் தெரிந்து விட்டதல் லவா?' என்று கேட்டான்

ஹேமவதி சீமாட்டி உடனே எத்தகைய பதிலையும் கூறி விடவில்லை. சில நிமிஷங்கள்வரை தீர்க்கமாக யோசித்துப் பார்த்தாள். சந்திரசேகரமபிரபு அங்கு வருவதற்கு முன் அவளுடைய விஷயங்களெல்லாம் எப்படிப்பட்ட நெருக்க டியை அடைந்து விட்டனவென்று அவள் நினைத்தாளோ அதைவிட ஆயிரம் மடங்கு அதிக நெருக்கடியாகப் போன தாக அப்போது அவள் கருதினாள். அவள் என்ன செய்வது எவ்வாறு நடந்துகொள்வது என்னும் விஷயமாக எப்படிப் பட்ட முடிவுக்கும் வர முடியவில்லை. சிறிது நேரமேனும் ஆழ்ந்து சிந்திக்க வேண்டியதான நிலைமையில் அவள் இருந் தாள். ஆகவே இரண்டொரு நிமிஷங்களுக்குப் பின்னர் அவள் அவனிடம், 'சரி, கிடக்கட்டும். நீ வண்டியிலேறி நமது மாளிகைக்குப் போய்ச்சேர். நீ என்னை இங்குச் சந் தித்தது நமது மாளிகையில் யாருக்கும் தெரியக் கூடாது. நான் சொற்ப நேரத்துக்குப் பின்னர் மாளிகைக்கு வந்து உன்னைப் பார்க்கும்போது நீ அப்போதுதான் என்னை முத

லில் சந்திப்பவன்போல் நடிக்கவேண்டும்' என்று சொன்னாள். அதற்கு அவன், அப்படியானால் அந்தக் கமலகுமாரி இங்கு வந்து உன்னைச் சந்திப்பதற்கு முன் நாம் இருவரும் தனியாகப் பேசும் சந்தர்ப்பம் வாய்க்காதோ' என்று கேட்க, அவள், 'நான் அவளைச் சந்தித்தும் பேசுவதற்கு முன் நாம் எத்தகைய முடிவிற்கும் வரமுடியாது. பிறகு நாம் என்ன செய்யவேண்டு மென்பது பற்றி யோசிக்க நமக்கு அதிக சாவகாசமிருக்கும் என்பது மட்டும் நிச்சயம்' என்றாள். அப்போது சந்திரசேகரன், ஏது? நீ மிக்க நிதானமாகவும், பொறுமையுடனும், சாந்தமாகவும் இருக்கிறாயே?' என்று கேட்டான்.

அதற்கு அவள் 'அப்படியில்லாமல் உன்னைக் கட்டிக் கொண்டு என்ன செய்வது? நாம் மறைத்துவைக்க முயலும் விஷயம் மறைக்க முடியாமல் போய்ச் செல்வநாதரும், மோகனதாஸும் வெற்றி பெற்றுவிட்டால் அதனால் எனக்கு அவமானமும், மானக்கேடும் நேரிட்டால் பிறகு நீ என்னிடத்திலுள்ள மோகத்தை இழந்து என்னை அபேட்சிப்பதை விட்டு விடுவாயல்லவா?' என்று கேட்டாள். அதற்குச் சந்திரசேகரம் பிரபு, எப்படியாவது நாம் இந்தக் கமலகுமாரியை வழிக்குக் கொண்டுவந்து விட்டால் பிறகு நீ ஏன் பயப்பட வேண்டும்?' என்று கேட்டானேயொழிய அவள் கேட்டதற்குச் சரியான பதிலை அளிக்கவில்லை. அப்போது ஹேமவதி சீமாட்டி தன் கண்களில் தீப்பொறி பறக்க, 'நீ சொல்வது ஆச்சர்யமாய் இருக்கிறதே. அவள் கேட்கிற தொகையைக் கொடுப்பதென்பது சாத்தியமானகாரியமா? பத்தாயிரம்பவுன் என்றால் சிறிய தொகையா? அதுமட்டுமா? நான் இந்தப் பதினாயிரம் பவுன் கொடுப்பதென்று வைத்துக் கொண்டால் அவன் இன்னும் இரட்டிப்பு தொகை வேண்டு மென்று

கேட்கமாட்டாளா? ஆகவே அது முடியாகவேலை. கமல குமாரியை வேறு எந்த வழியிலாவது சரிப்படுத்தவேண்டும். இப்போது நீ வண்டியிலேறிக்கொண்டு மாளிகைக்குப் போ. நமது சம்பாஷணையைப் பெருக்கிக்கொண்டிருப்பதில் பிரயோசனமில்லை' என்று கூறினாள்.

186579

இவ்வாறு கூறிக்கொண்டே ஹேமவதி [illegible] திடீரென்று வேறுபக்கமாகத்திரும்பி [illegible] மாளிகையை நோக்கி மெதுவாக நடக்கலானாள். சந்திரசேகரம் பிரபுவோ இன்னது செய்வதென்று தெரியாமல் ஒரு நிமிஷ நேரம் திக்பிரமையுடன் நின்றான். சீமாட்டியின் பின்னாலேயே போய் அவள் சொற்பநேரத்துக்கு முன்னர் உபதேசித்த சொற்களின் அர்த்தம் தான் என்ன என்று கேட்கலாமென நினைத்தான். ஆனால் அதைக் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று நினைத்த போதே அவனுக்கு ஒருவிதமான பயங்கரம் தோன்றியது. தேகம் நடுங்கியது. ஆகவே, அவன் அந்த யோசனையை விட்டுவிட்டுத் தன் வண்டியிலேறிக்கொண்டு சுந்தர விலாச மாளிகைக்குப் போய்ச்சேர்ந்தான். அவன் அம்மாளிகையின் வாயிற்படியை அடைந்ததும் தன் சகோதரியாகிய ஷண்பக வல்லியைச் சந்தித்தான். ஷண்பகம் அப்போதுதான் ராஜேஸ்வரியையும் தியாகராஜனையும் காதல் சம்பாஷணை நடத்தும் பொருட்டுத் தனியே விட்டு விட்டுத் தான் மாளிகைக்குத் திரும்பி வாயிற்படியை அடைந்திருந்தாள். அவளைக் கண்ட சந்திர சேகரன் தன் வழக்கப்படி சகோதரியின் விஷயத்தில் அதிக சிரத்தை இல்லாத முறையில், 'என்ன, ஷண்பகம் இந் நேரத்தில் தனியாக உலாவிக்கொண்டிருக்கிறாய்?' என்று கேட்க, தன் சகோதரன் முகத்திலிருந்தே அவள் முன் நாள் இரவு தூங்கவில்லையென்றும், ஏதோ கவலையுடனிருப்பதாக

வும் அறிந்துகொண்ட ஷண்பகம், 'சகோதரா' ஏது எதிர்பாராத விதத்தில் திரும்பிவிட்டாய்?' என்று கேட்டாள்.

அதற்கு அவன், 'ஆம், நான் இங்கு வந்துவிட வேண்டுமென்று மிக ஆவலாகவே இருந்தேன். நான் இங்கிருந்து போகும்போதே கூடிய விரைவில் வந்து உங்களுடன் கலந்துகொள்வேன் என்று கூறவில்லையா? ஏது? உன்னைப் பார்த்தால் ஒருமாதிரி இருக்கிறது. என்ன விசேஷம் நடந்தது?' என்று பரிவுடன் கேட்டான். அப்போது அந்த யுவதி, 'அப்படியொன்றுமில்லை. விசேஷம் ஏதும் நிகழவில்லை. உனக்கு நிரம்ப ஓய்வு வேண்டும்போ லிருக்கிறது. நேற்று இரவு முழுதும் நீ தூங்கியிருக்கமாட்டாய் என்று தெரிகிறது,' என்று வினவ, அவனும், 'ஆம், நான்போய் இரண்டுமணி நேரமாவது படுத்துத் தூங்கவேண்டும்,' என்று சொல்லிக் கொண்டே மாளிகையில் நுழைந்துசென்றான். அவன் சென்ற பின்னர் ஷண்பகவல்லி பொழுது போக்காக ஆற்றோரம் போகலாமென நினைத்து அந்தப் பக்கமாக நடந்துகொண்டே தன் மனத்தில், 'ஐயோ பாவம், என் சகோதரா! நான் சந்தேகிக்கிறபடி நீ ஹேமவதி சீமாட்டியின் வலையில் சிக்கிக் கொண்டால் உன் கதி யாதாருமோ தெரியவில்லையே,' என்று சிந்தித்துக்கொண்டே சென்றாள்.

ஒருவாறு பகற்பொழுதெல்லாம் கழிந்தது. மாலை நேரம் வந்தது. அம்மாளிகையிலிருந்த அனைவரும் ஒருமுகமாக இராப் போஜனத்துக்கு வந்து அமர்ந்தனர். தியாகராஜனையும் அங்கேயே விருந்துக்கு இருக்கும்படி கேட்டுக்கொண்டதால் அவனும் இருந்தான். அவன் சகஜமாக ராஜேஸ்வரியின் அருகில் உட்கார்ந்தான். அவன் அவளிடம் நடந்துகொண்ட முறையிலிருந்து ராஜேஸ்வரியை அவன் காதலிக்கிறான் என்

பதைச் சந்திரசேகரம் பிரபு எளிதில் தெரிந்துகொண்டு விட்டான். மாளிகையின் சொந்தக்காரியாகிய ஹேமவதி சீமாட்டியோ அங்கிருந்தவர்களையெல்லாம் முறைப்படி உபசரித்துக் கொண்டிருந்தாள். அப்போது புதிய ஆசாமிகள் யாரேனும் அவளைப் பார்த்தால் அவள் எத்தகைய கவலையுமின்றி நிம்மதியுட னிருப்பதாக நினைப்பார்கள். ஆனால் அவளுடைய மனக் கவலையின் ஆழம் அறிந்தவர்களுக்குத்தான் தெரியும். ஷண்பக வல்லி, தன் காதலனாகிய மோகனதாஸின் மூலம் ஹேமவதி சீமாட்டியின் யோக்கியதைகளை யெல்லாம் தெரிந்துகொண்டு விட்டபடியால் அவளைக் கண்டதும் ஷண்பகத்துக்கு வெறுப்பு ஏற்பட்டதென்றாலும் தன் சகோதரன் கதி யாதாகுமோ என்னும் கவலை இருந்தாலும் மோகனதாஸின் கட்டளைக்கு இணங்க எல்லாவற்றையும் மறந்து அவற்றை அறியாதவளேபோல் ஹேமவதி செய்யும் உபசாரங்களை யெல்லாம் பார்த்துக் கொண்டே சும்மா இருந்தாள். ஆகாரம் முடிந்த பின்னர் அவர்களனைவரும் தோட்டத்துக்குச் சென்றார்கள். அங்கு போனபின்னர் அவரவர்களும் ஒருவர், இருவராகப் பிரிந்து விட்டார்கள். ராஜேஸ்வரியும் தியாகராஜனும் ஒரு புறமாகச் சென்றனர். மதனவல்லிச் சீமாட்டியும் ஷண்பகவல்லியும் வேறொரு புறமாகச் சென்றனர். ஆகவே சந்திரசேகரம் பிரபு ஹேமவதி சீமாட்டியுடன் தனியாகப் பேசச் சந்தர்ப்பம் கிடைத்தது. அந்த இருவரும் பேச முயற்சிசெய்து இரண்டொரு வார்த்தைகளைப் பேசுவதற்குள் ஒரு வண்டி வேகமாக அம்மாளிகையை நோக்கி வந்தது. அதைக்கண்ட ஹேமவதி சீமாட்டி, 'இது நாடகக் கணிகையான கமல குமாரியினுடைய வண்டியாகத்தான் இருக்க வேண்டும். அப்படியாயின் நான் மட்டும் தனியாக அவளைப் பார்க்கிறேன். நீ அங்கு வருவதற்கும் பிரயத்தனப்படவேண்டாம். அவள் உன்னைப்

பார்க்க விரும்புகிறாளா என்று கேட்டுத் தெரிந்து கொள்கிறேன்,' என்றாள்.

அதற்குச் சந்திரசேகரம் பிரபு, 'அது சரிதான். நீ அவளிடம் எந்த முறையைக் கைக்கொள்ளப் போகிறாய்?' என்று அவள் முகத்தை அதிக கருத்துடன் பார்த்துக்கொண்டே கேட்டதற்கு அவள், அதை இப்போது சொல்ல முடியாது. சந்தர்ப்பங்களுக் கேற்றவாறு நான் நடந்துகொள்வேன்' என்று கூறினாள். அச்சமயத்தில் ஒரு வேலைக்காரன் அங்கே வந்து இப்போதுதான் வண்டியில் வந்து இறங்கிய ஒரு மாது ஹேமவதி சீமாட்டியை அவசரமாகச் சந்தித்துப் பேச விரும்புவதாகத் தெரிவித்தான். உடனே சீமாட்டியும், 'அவள் தன் பெயரைத் தெரிவித்தாளா' என்று மிக்க நிதானமான முறையில் கேட்டாள். அதற்கு அந்தச் சேவகன், 'அம்மா! அவள் தன் பெயரைத் தெரிவிக்கவில்லை. உங்களுக்கு அவள் தெரியாதாகையால் பெயரைச் சொல்வதில் பிரயோசனமில்லை என்று கூறிவிட்டாள்,' என்று தெரிவிக்கவும் சீமாட்டி, 'அப்படியானால் அவளை நான் பார்க்கிறேன்' என்று சொல்லிக் கொண்டே சேவகன் பின்னால் மாளிகையில் நுழைந்தாள். சேவகனும் சீமாட்டியை அம்மாது காத்துக் கொண்டிருந்த அறைக்கு அழைத்துச் சென்றான். ஹேமவதி சீமாட்டி அவ்வறையில் நுழையும்போது மிக்க பெருந்தன்மையும், படாடோபமும், உள்ளவள்போல் பாவனை செய்து கொண்டு சென்று தன்வீட்டுக்கு வந்திருக்கும் அம்மாதைப் பார்த்தாள் அவளும் தன் ஆசனத்தினின்றும் எழுந்து நின்று மரியாதை செய்தாள். சீமாட்டி அவளை ஒரு பார்வை பார்த்ததிலிருந்தே அவள் அழகுமிக்கவ ளென்பதையும், நாகரிகமாக அலங்கரித்துக் கொள்பவள் என்பதையும், காரியத்தில் பிடிவாதக்காரி என்பதையும் தெரிந்துகொண்டு விட்டாள். அங்கு வந்திருப்

பவள் யாரென்று ஒரு சிறிதும் அறியாதவள்போல் சீமாட்டி அவளைப் பார்த்து, 'என் முன்னிலையில் நிற்கும் நீயார் என்று நான் அழைப்பது?' என்று கேட்டாள். அதற்கு அவள், 'நாடக உலகில் பெயர்பெற்ற கமலகுமாரியைப்பற்றி நீ கேள் விப்பட்டதில்லையா?' என்று கேட்கவும் சீமாட்டி, 'இல்லை என் ஞாபகத்துக்கு எட்டியவரை நான் கேள்விப்பட்டதில்லை' என்று கூறிக்கொண்டே ஏதோ பிரமாதமாக ஞாபகத்துக்குக் கொண்டுவருபவள்போல் யோசனை செய்துகொண்டே நின்றதால் கமலகுமாரியும் நின்றபடியே நிற்கவேண்டியதாயிற்று.

தன்னைச் சீமாட்டி பார்த்ததில்லை என்று சொன்னதே தனக்கு ஏதோ கௌரவக் குறைவு ஏற்பட்டதைப் போல நினைத்த கமலகுமாரி, 'ஏன்? நான் உன்னை நாடகக் கொட்டகையில் ஒரு முறை பார்த்திருக்கிறேன்,' என்று சொல்லவும் சீமாட்டி, 'அப்படியும் இருக்கலாம். ஆயினும் நாடகமேடை முதலிய பொது இடங்களில் வருபவர்கள் ஒவ்வொருவரையும் எப்படித் தெரிந்து கொண்டிருக்க முடியும்' என்று சொல்லி விவகாரத்தை எளிதில் தீர்த்துவிட்டாள். அப்போது கமலகுமாரி, 'சீமாட்டியே! நமது சம்பாஷணை நீளமான தொன்றாக இருக்கும்போலிருக்கிறது. ஆனால் நானோ ரயிலிலும் வண்டியிலுமாகப் பிரயாணம் செய்து வந்ததால் அதிக களைப்படைந்திருக்கிறேன். ஆதலின் நான் உட்கார நீ அனுமதி கொடுப்பாய் என்று நம்புகிறேன்' என்று சொல்லிக் கொண்டே சீமாட்டியின் அனுமதியும் கிடைக்காத முன்னர் அங்கிருந்த சோபாவின் மீது தாராளமாக உட்கார்ந்து கொண்டு தன்னுடைய அதிகப்பட்ட உடுப்புகளையும் கழற்றலானாள். அதைக் கண்டு சகிக்காதவள் போன்ற முறையில் ஹேமவதி சீமாட்டியும் மற்றொரு சோபாவில் அமர்ந்து, 'சரி'

இப்போது நீ இங்கு என்ன வேலையாக வந்தாய் என்பதைத் தெரியப்படுத்து, பார்க்கலாம்' என்று கேட்கவும், கமலகுமாரி, நான் உனக்குத் தெரியவில்லை என்று நீ கூறியது தான் ஆச்சர்யமாக இருக்கிறது. அது கிடக்கட்டும்; நான் யார் என்பதை ஒரு வினாடியில் சொல்லி முடித்து விடுகிறேன். எனக்குப் பங்கஜம் என்று பெயர். நான் நாடக உலகில் கமலகுமாரி என்னும் பெயரால் பிரசித்தி பெற்றிருக்கிறேன். நாடகத்தில் சேர்ந்திருப்பதால் எனக்குப் பல சௌகரியங்களிருக்கின்றன. நான் அந்தப் பெயராலேயே இங்கும் வந்திருக்கிறேன். என் வீடும், என் வாழ்க்கையும் மிக உயர் தரமானது. உன் குமாரன் தினகரம்பிரபுவும் என்னுடைய அந்தரங்க சிநேகனாக இருந்து நேற்று இரவுதான் அவனுடன் சண்டை போட்டுவிட்டேன் என்பதையும் தெரிவித்து விடுகிறேன். சந்திரசேகரம் பிரபு என்பவன், அவன் உனக்கும் தெரிந்தவனே, அவன் இதை யெல்லாம் உன்னிடம் சொல்வான், என்று கூறிக்கொண்டே பரிகாசச் சிரிப்பு சிரித்தாள்.

கமலகுமாரி, அதிக நெருக்கமுள்ளவள் போலவும், பரிகாச தோரணையிலும் பேசியதால் அதிக ஆத்திரமும், பரபரப்பும் அடைந்த ஹேமவதி சீமாட்டி அதை வெளிக்குக் காட்டிக்கொள்ளாமல், நீ யார் என்பதைத் தெரிவித்து விட்டாய். அது சரிதான். நீ என்ன வேலையாக இங்கு வந்தாய் என்பதையும் தாமதமில்லாமல் தெரிவித்துவிடு' என்று நிதானமாகவும் உறுதியான தொனியுடனும் கேட்டாள். அதற்குக் கமலகுமாரி, 'நான் ஏன் வந்தேன் என்பதை நீ குறிப்பாகவும் தெரிந்துகொள்ளவில்லை என்பது எனக்கு ஆச்சர்யத்தையே தருகின்றது. எனினும் என் காரணத்தைச் சுருக்கமாகச் சொல்லிவிடுகிறேன், கேள். உனக்கும் சந்திரசேகரம் பிரபுவுக்கு மிடையில் ஏதேனும் விசேஷமிருக்கிறதா என்பதை

யோசித்துப் பார்த்தால் நான் இங்கு வந்திருப்பதன் காரணம் உனக்கு எளிதில் விளங்கிவிடும்? என்று சொன்னதும் ஹேமவதி சீமாட்டி இன்னும் அதிக கோபமடைந்து, 'மாதே. நீ பேசும் முறையைப் பார்த்தால் நான் உன்னை வெளியில் அனுப்பிவிடவேண்டிய நிலைமை ஏற்பட்டுவிடும்போலிருக்கிறது' என்று கூறியதற்குக் கமலகுமாரி, 'அவ்வாறு திடீரென்று என்னை அனுப்பிவிட உன்னால் முடியவே முடியாது. நான் பிறர் முகக்குறியைக் கொண்டே அவர்கள் உள்ளத்திலுள்ள விஷயத்தைத் தெரிந்துகொண்டுவிடுவேன். இப்போது உன் முகக்குறியிலிருந்தே உன் மனம் ஏதோ குழப்பமடைந்திருக்கிறதென்று நன்றாகத் தெரிகிறது. ஆனால் சாதாரண மனிதர்கள் அதை அறிந்துகொள்ள முடியாதபடி நீ பாவனை காட்டுகிறாய் என்பதையும் அறிந்துகொண்டேன் அது கிடக்கட்டும். சந்திரசேகரம் பிரபு நேற்று மாலை இரத்தினபுரியில் என் வீட்டுக்கு வந்து சில விஷயங்களைப் பேசியது உனக்குத் தெரியுமென்றே நான் நினைக்கிறேன். அவன் எனக்குக் கொஞ்சம் பணம்கொடுத்தான். அது அவனுடையதாக இருக்கமுடியாது. நீ தான் அதைக் கொடுத்திருக்க வேண்டும். அவன் ஒரு காரியத்துக்காகவே அதை என்னிடம் கொடுக்க வந்தான் என்பதும் உனக்குத் தெரிந்திருக்கலாம்' என்று கூறினாள்.

அதைக்கேட்ட ஹேமவதி சீமாட்டி அதிக கஷ்டத்துடன் தன் உதட்டைக் கடித்துக் கொண்டு தாங்க முடியாத மனத்துயரத்தால் வருத்தப்பட்டாளென்றாலும் அதை ஒருவாறு அடக்கிக் கொண்டு கமலகுமாரியைப் பார்த்து, 'நீ எவ்வளவு தொகைதான் கேட்கிறாய் என்பதைச் சில வார்த்தைகளில் சொல்லிவிட முடியுமா? முன்னுரை, பின்னுரை பேசுவதில் நாம் காலத்தைக் கழிக்கவேண்

டியதில்லை. என்னைப்பற்றித் தவருன சில புகார் வெளியில் உலாவுகிற தென்பதை நான் அறிவேன். துரதிர்ஷ்ட வசமாக என் குமாரனும் அச் செய்தி பரவுவதற்குத் துணை செய்து விட்டான். என்னைப்பற்றி ஏதேனும் கூறுகிறவர்களை நான் அலட்சியம் செய்துவிடுவேன். ஆனால் உலகம் மிகக் கெட்டதாக இருக்கிறது. ஆகவே, நீ கேட்கும் தொகை நியாயமானதாக இருந்தால் அதைக்கொடுக்க நான் மறுக்கப் போவதில்லை என்று பட்டவர்த்தனமாகக் கூறிவிட்டாள். உடனே கமல குமாரியும், 'எனக்குப் பதினாயிரம் பவுன் தேவை. அதைக் கொடுத்துவிட்டால் என்னிட மிருக்கும் ஒரு குறிப்பிட்ட ஆடையை உனக்குக் கொடுத்துவிடுவேன்?' என்றதும் ஹேமவதி சீமாட்டி, 'அம்மா! நீ இப்போது சொன்ன தொகை எனக்கு அலட்சியமானதே யாயினும் அது ஒரு பெருந் தொகை என்பதை ஆட்சேபிக்க யாராலும் முடியாது' என்ருள். அதற்குக் கமல குமாரி 'அப்படியானல் நான் இதில் ஒரு பைசாவும் குறைக்க முடியாது. இந்தப் பதினாயிரம் பவுனை இரட்டிப் பாக்காம லிருக்கிறேனே, அதற்கே நீ எனக்கு வந்தனம் கூறவேண்டும்' என்ருள்.

அதற்கு ஹேமவதி சீமாட்டி சிறிதும் பயப்படாதவள் போல், 'நீ அம்மாதிரி யெல்லாம் கேட்பதாக இருந்தால் நான் மறுபேச்சு பேசாமல் இந்த விஷயத்தைப்பற்றி உன்னிடம் பேசுவதையே விட்டு விடுவேன். ஆனால், பதினாயிரம் பவுன் சம்பந்தப்பட்டவரை அதைக் கொடுப்பதில் எனக்குச் சிறிதும் ஆட்சேபமில்லை. அந்தக் குறிப்பிட்ட உடை உன்னிடம் இருக்கிறதென்று சொன்னாயல்லவா?' என்று கேட்டதற்கு அவள், 'அது என் வண்டியில் இருக்கிறது. எனது வேலைக்காரி அதை வைத்துக் கொண்டிருக்கிருள்' என்றதும் ஹேமவதி சீமாட்டி, 'கமல குமாரியே! பதினாயிரம் பவுன்போன்ற

பெரிய தொகை இப்போது நினைத்த மாத்திரத்தில் என்னிடம் இராது என்பது உனக்குத் தெரிந்திருக்குமென்றே நினைக்கிறேன்,' என்றாள். அதற்கு அவள், 'அம்மா, நீ இரத்தின புரியிலுள்ள உன் பாங்கிக்கு ஒரு செக் எழுதிக்கொடுத்துவிட்டால் போதுமானது. நான் தொகையை எளிதில் பெற்றுவிடுவேன், என்று சொன்னதும் சீமாட்டி, 'அது முடியாத காரியம். நான் நாடகக் கணிகையாகிய உன் பேருக்கு அவ்வளவு பெரிய தொகைக்குச் செக் கொடுத்தால் அங்கிருப்பவர்கள் என்னைப்பற்றி ஏதேனும் நினைப்பார்கள். தானே என் பிள்ளைக்குக் கெட்ட வழியில் தூண்டுவதாகச் சொல்வார்கள். நான் மிதுனபுரியிலுள்ள என் பாங்கியிலிருந்து நாளையதினம் நோட்டாகவும் பவுனாகவும் உனக்கு வேண்டிய தொகையை வரவழைத்து விடுவேன். ஆதலால் நாளைய மாலைவரை நீ இவ்வூரிலேயே தங்கியிருக்க முடியுமா?' என்று கேட்டாள். அதற்குக் கமல குமாரி, 'என்ன செய்வது? அப்படியே காத்திருக்கிறேன். நாளையதினம் நான் உன்னை எத்தனை மணிக்குச் சந்திப்பதென்பதை மட்டும் சொல்லிவிடு என்று கேட்க, ஹேமவதி சீமாட்டி ஏதோ சொற்பநேரம் ஆழ்ந்து யோசிப்பது போலப் பாவனைசெய்து, 'மாதே நான் நம்முடைய இந்த இரண்டாவது சந்திப்பு விஷயத்தில் சில அவசியமான எச்சரிக்கைகளை நான் எடுத்துக் கொள்வதற்காக நீ ஆச்சரியப்படக்கூடாது. நாளை மாலை அதிகநேரங்கழித்து நாம் சந்திக்க வேண்டும். அதிலும் எனது மாளிகையில் இரண்டாவது முறை சந்தித்தால் இங்குள்ளவர்களுக்கு அதிக சந்தேகம் ஏற்பட்டுவிடும். இப்போதே நான் ஏதேனும் சால் ஜாப்பு சொல்லியாக வேண்டும். உன் வண்டியிலிருக்கும் வேலைக்காரி என் சேவகர்களிடம் ஏதேனும் இது விஷயமாகப் பேசிவிடுவாளோ?' என்று கேட்டாள்.

அப்போது கமலகுமாரி, 'சீமாட்டியே! அவள் ஒன்றும் சொல்லமாட்டாள் என்பது நிச்சயம். நான் எங்கே வந்திருக்கிறேன், எதற்காக வந்திருக்கிறேன் என்பதெல்லாம் அவளுக்குத் தெரியாது. இதிலிருந்தே நான் இவ்விஷயத்தில் எவ்வளவு முன் ஜாக்கிரதையுடன் இருக்கிறேன் என்பது நன்றாகத் தெரிகிறதல்லவா? மேலும் என் வேலைக்காரி யாரிடமும் என் பெயரைச் சொல்லமாட்டாள்' என்று கூறியதும் ஹேமவதி சீமாட்டி, 'இதற்காக உனக்கு நான் வந்தனம் செலுத்துகிறேன். நீ நாளையதினம் மிதுனபுரியில் போய்த் தங்கியிருந்து மாலை எட்டு மணிக்குமேல் புறப்பட்டுத் தனியாக ஆற்றோரத்திலேயே எனது மாளிகையை நோக்கி வா. அதிக சமீபத்தில் இருப்பதால் நீ பயப்படவேண்டியதில்லை. நானும் என் மாளிகையினின்றும் புறப்பட்டு உன்னை எதிர் நோக்கி வருகிறேன். இருவரும் சுமார் ஒன்பது மணிக்குப் பாதிவழியில் சந்திப்போம். நான் பணம் கொண்டுவருகிறேன். நீ அந்தக் குறிப்பிட்ட ஆடையைக் கொண்டுவா. நமது விவகாரத்தை முடித்துக்கொண்டு விடுவோம்' என்றாள். அதற்கு அவள் 'நான் என்னுடன் எனது வேலைக்காரியை அழைத்துக்கொண்டு வருவதில் உனக்கு எத்தகைய ஆட்சேபமும் இல்லையல்லவா?' என்று கேட்டதற்குச் சீமாட்டி, 'ஆட்சேபம் ஏதுவுமில்லை. ஆனால் நான் யார், அதாவது நீ யாரைச் சந்திக்கிறாய் என்பது அவளுக்குத் தெரியாமலிருந்தால் அதுவேபோதுமானது. அவள் உனக்கு எப்படிப்பட்ட நம்பிக்கை யுடையவளாயினும் நான் அவளது அதிகாரத்தில் சிக்கிக் கொள்ள லாகாதல்லவா?' என்றாள்.

ஹேமவதி சீமாட்டி இந்த விவகாரத்தை முடிக்க எடுத்துக்கொண்ட வழியில் அவ்வளவாகத் திருப்தியை அடையாத கமலகுமாரி, 'நமது இந்த விவகாரத்தை முடிக்க வேறு

வழி எதுவும் இல்லையா? நாளைய தினம் மிதுனபுரி பாங்கிக்கு நீ போகும்போது நான் உன்னை அங்குச் சந்தித்தாலென்ன?' என்று கேட்டதற்குச் சீமாட்டி, 'அது முடியாது. அங்கு நான் எல்லாருக்கும் தெரிந்தவள். நாம் இருவரும் சந்திப்பதை அங்கு யாரேனும் பார்த்துவிட்டால் என்னைப்பற்றி அனைவரும் கேவலமாகப் பேசிக்கொள்ள ஆரம்பித்து விடுவார்கள். நாம் இந்த விவகாரத்தையெல்லாம் மிக இரகசியமாக முடிக்காவிட்டால் உன் வாயைமூட நான் இவ்வளவு செலவு செய்தும் பிரயோஜனமில்லாமல் போய்விடும்,' என்று சொல்லவே கமலகுமாரியும், 'அப்படியானல் நீ தீர்மானித்தபடியே ஆகட்டும். நீ எவ்வளவு ஜாக்கிரதையுடன் நடந்துகொண்டாலும் அது உன் விஷயம் நான் அதையெல்லாம் ஆட்சேபம் செய்யப் போவதில்லை.' என்று கூறியதும் சீமாட்டியும் 'ஆம் என்ன செய்வது? அவ்வளவு இரகசிய ஏற்பாடுகளும் அவசியமாக இருக்கின்றன. மேலும் ஒரு வார்த்தை. இப்போது நடக்கப்போகும் நமது சங்கதிகளையும், இன்னும் என் சம்பந்தமான சமாசாரங்களையும் நீ யாரிடமும் சொல்லாமல் ஒரு வருஷம்வரை இரகசியமாக வைத்திருப்பாயானல் வருஷக் கடைசியில் நான் உனக்குச் சன்மானமாக ஐயாயிரம் பவுன் கொடுப்பேன்,' என்ருள். இதைக்கேட்ட கமலகுமாரி அதிக சந்தோஷமடைந்து, 'சீமாட்டியே! நீ என்னைத் தைரியமாக நம்பலாம். நான் யாரிடமும் சொல்ல மாட்டேன்' என்று கூறிவிட்டுச் சீமாட்டியின் அனுமதி பெற்றுச் செல்வதற்காக எழுந்தாள். முதலில் அவள் அங்கிருந்த ஒரு பெரிய நிலக்கண்ணாடியின் முன் நின்று தன் முகத்தையும் ஆடைகளையும் குட்டையால் துடைத்துச் சரிப்படுத்திக்கொண்டு அவ்வறையை விட்டுச் சென்று தன் வண்டியில் ஏறிக்கொண்டு அடுத்த கிராமத்துக்குச் சென்ருள்.

68-வது அத்தியாயம்.

—:():—

ஒரு எதிர்பாராத சம்பவம்.

கமலகுமாரி சுந்தரவிலாச மாளிகையை விட்டுச்சென்ற மறுநாள் பகல் சுமார் ஒரு மணிக்கு தியாகராஜன் தன்னுடைய முதல்தரமான குதிரையின்மீது கம்பீரமாகச் சவாரி செய்துகொண்டு வந்தான். அன்று பகல் போஜனத்திற்கு அங்கு வரும்படி ஹேமவதி சீமாட்டி முதல்நாள் மாலையே அவனுக்குத் தெரிவித்திருந்தாள். அவன் வந்ததும் ஆகாரம் சாப்பிடும்போது தன் குதிரையின் பெருமையைப் பற்றியும், தனக்குச் சவாரி செய்வதில் உள்ள திறமையைப் பற்றியும் பிரமாதமாகச் சொல்லிக் கொண்டான். பல பெண்களின் எதிரில் ஒரு ஆடவன் தன்னுடைய பெருமையைச் சொல்லிக் கொண்டால் மற்றவன் சும்மா இருக்கமுடியுமா? அதிலும் சந்திரசேகரம் பிரபு ஹேமவதி சீமாட்டியின்மீது கண் வைத்திருப்பதால் தியாகராஜனைவிடத் தான் சமர்த்தன் என்று காட்டிக்கொள்ள வேண்டுமென்று அவன் நினைத்து, 'தியாகராஜா! நானும் குதிரை சவாரி செய்வதில் கை தேர்ந்தவன் என்றும் எப்படிப்பட்ட குதிரையையும் அடக்க வல்லவனென்றும் என் சினேகிதர்கள் கூறுவார்கள் என்பது உனக்குத் தெரியாது போலும்! நீ பிரமாதமாகப் புகழ்கிற உன் குதிரையை அடக்கிச் சமீபத்திலுள்ள பெரிய கேட்டை அக்குதிரை தாண்டிக் கடந்து செல்லும்படி செய்கிறேன், பார்க்கிறாயா?'' என்று பெருமை பேசினான். உடனே அவனுடைய சகோதரி ஷண்பகவல்லி அவனிடம் எவ்வளவுதான்

வெறுப்பு அடைந்திருந்த போதிலும் சகோதர வாஞ்சையை அதிகமாகப் பெற்றிருந்தபடியால் அவனிடம், 'சகோதர! நீ அப்படிப்பட்ட வேலையில் இப்போது இறங்கவேண்டாம். கிரகசாரம் எப்படி இருக்குமோ?' என்றாள். உடனே மதனவல்லிச் சீமாட்டியும், 'ஆம், நானும் சிற்றன்னை என்னும்முறையில் சந்திரசேகரம் அவ்வாறு செய்யக்கூடாதென்று தடுக்கிறேன்' என்று கூறினாள். அதைக்கேட்ட சந்திரசேகரன் 'எனது சிற்றன்னையே, எனது சகோதரியே! நீங்கள் பயப்படாதீர்கள். எனக்கு இதுகளெல்லாம் மிகச் சாதாரண விஷயம். ஆதலால் நீங்கள் இதற்காகக் கவலைப்படாமல் என் இஷ்டப்படி செய்ய இடங்கொடுங்கள்' என்றான்.

இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த ஹேமவதி சீமாட்டியும் அவனிடம் அதிக அனுதாபமுடையவள்போல், 'பிரபுவே, நீ உன் சகோதரியும், சிற்றன்னையும் சொல்லும் புத்திமதியைத் தவறாமல் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆதலால் அந்தக் குதிரையின் மீது சவாரி செய்வதென்னும் எண்ணத்தையே நீ அடியோடு விட்டுவிடு' என்றாள். அப்போது ராஜேஸ்வரி, 'இவ்வளவு என்ன கஷ்டம்; சவாரி செய்வதால் என்ன துன்பம் விளையுமென்பதுபற்றி சரியான அபிப்பிராயம் கூறக்கூடியவன் தியாகராஜனே யாதலால் அவனுடைய அபிப்பிராயம் தெரிந்துகொண்டு விட்டால் போகிறது' என்றாள். அதற்குத் தியாகராஜன், 'முதலில் நான் அக்குதிரைமீது ஏறி நமது தோட்டத்தின் கடைசியிலுள்ள பெரிய கேட்டைக் கடக்கும்படி செய்கிறேன். அதைப் பார்த்துவிட்டு அதன்பிறகு சந்திரசேகரன் அவ்வாறு செய்வது நல்லதா, கெட்டதா என்பதை நான்கு மாதர்களாகிய நீங்களே

முடிவு செய்யுங்கள்,' என்றதும் தன் காதலனுன தியாகராஜ னுக்கு என்ன ஆபத்து நேரிடுமோ என்னும் கவலையுடன் ராஜேஸ்வரி, 'உண்மையில் அவ்வாறு தாண்டுவதால் ஆபத்து இருக்குமாயின் நீ தாண்டுவதையும் நான் அனுமதிக்கமாட் டேன்' என்று அன்புடன் கூறினுள். அதற்கு அவன் காதல் பார்வையை அவள்மீது வீசிக்கொண்டே,' எனக்கா ஆபத்து! நல்ல குதிரை வீரர்களுக்கு அப்படிப்பட்ட ஆபத்து ஒன்றும் வராது. நீ சிறிதும் பயப்படவேண்டாம்' என்று கூறினுன்.

இதற்குள் சந்திரசேகரன் எழுந்து, 'தியாகராஜன் வா, நாம் போய் குதிரை லாயத்தினின்றும் குதிரையை அவிழ்த் துக்கொண்டு வருவோம். இதற்குள் மாதர்களும் தோட்டத் துக்கு வந்துவிடுவார்கள்,' என்று சொன்னதற்கு யாரும் எத் தகைய ஆட்சேபமும் சொல்லாததால் தியாகராஜனும் சந்திர சேகரனும்போய் குதிரையைக் கொண்டுவரவும், மாதர்கள் தோட்டத்தில் சேரவும், எல்லோருமாகப் பெரிய கேட்டின் அருகில் கூடினுர்கள். தியாகராஜன் முதலில் குதிரைமீது ஏறி கேட்டைக் கடக்க முயன்றபோது அவனுடைய காதலியா கிய ராஜேஸ்வரி அவனைப் பரிவுடன் பார்த்தாள். அவனும் அவளைப் பார்த்ததிலிருந்து எதற்கும் பயப்படாமலிரு என்று சொல்வதுபோல் இருந்தது. உடனே அவனும் குதிரை மீது ஏறிக்கொண்டு எவ்வளவு தூரத்திலிருந்து குதிரையைத் தட் டிக்கொடுத்தால் குதிரை எளிதில் தாவிப் பாய்ந்து அந்தக் கேட்டைக் கடந்துவிடுமோ அவ்வளவு தூரம் சென்று எல் லாரையும் ஒருமுறை கம்பீரமாகப் பார்த்துவிட்டு குதிரையின் விலாப்புறத்தில் ஒரு உதை கொடுத்தான். உடனே குதிரை யும் வேகமாகப் பாய்ந்தது. குதிரை பாய்ந்தபோது தியாக ராஜன் கீழேவிழுந்துவிடுவானேஎன்று எல்லாரும் கருதினர். ஆனுல் குதிரை கேட்டுக்கு அப்பால் போய் நின்றபோது

தியாகராஜன் அதன்மீது பழையபடியே உட்கார்ந்திருந்தான். அவன் குதிரையைத் தட்டிக் கொடுத்துப் பழைய இடத்தில் கொண்டுவந்து நிறுத்தினன். உடனே சந்திரசேகரன் பெரிய வீரனைப்போல் அதைத் தட்டிக்கொடுத்து ஏறிக்கொண்டான். தியாகராஜனைப் போலவே குதிரையின் விலாப்புறத்தில் உதைத்தான். குதிரை வேகமாகத் தாவிற்று. கேட்டுக்கு அப்பால் குதிரை நின்றது. ஆனல் சந்திரசேகரன் குதிரையின்மீது இல்லை.

குதிரையின் மீது சந்திரசேகரன் இல்லாதிருப்பதைக் கண்ட மாதர்கள் ஓவென்று கதறினர்கள். அவன் இறந்துவிட்டானென்று புலம்பினர்கள். கேட் கதவைத் திறந்து கொண்டு அனைவரும் அப்பால் போய்ப் பார்த்ததில் சந்திரசேகரன் கீழே தரையில் கிடந்தான். அவன் ஸ்மரணை தப்பி இருந்தான். மாதர்களெல்லாரும் பயந்து விட்டார்கள். தியாகராஜன் அவனைத் தூக்கி உட்காரவைத்தான். அவனுடைய எலும்புகள் எதுவும் முறிந்து போகவில்லையென்றும் விழுந்த அதிர்ச்சியால் பலத்த காயம் ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவித்தான். பிறகு தியாகராஜன் ஓடிப்போய் அதிக தூரத்தில் சென்று நின்றிருந்த தன் குதிரையைப் பிடித்துக் கொண்டு வந்தான். சந்திரசேகரனைப் பார்த்த அவனுடைய சகோதரி ஷண்பகவல்லி அனுதாபத்துடன் ஏதேனும் வைத்திய உதவியையாவது தேடவேண்டும் என்ருள். அப்போது சுமாராக பிரக்ஞையடைந்த சந்திரசேகரன் தன் சகோதரியிடம், 'வைத்திய உதவி அவசியமில்லை. எனக்கு உபாதை புதியதல்ல. பலமுறை நான் இம்மாதிரி விழுந்திருக்கிறேன்; நீ என்னிடத்தில் இவ்வளவு பிரியத்துடன் இருப்பதற்காக உனக்கு நன்றி செலுத்துகிறேன்' என்ருன். அப்போது

தியாகராஜன், 'சந்திரசேகரா! நீ உடனே மாளிகைக்குப் போய்ப் படுத்துக்கொள். மூன்று நாட்களாவது தொடர்ச்சியாகப் படுக்கையில் இருந்தால் உன் உடம்பு சொஸ்தமாய் விடும்' என்று கூறியதும் அவனும், 'உன் சொற்படியே நான் நடக்கிறேன்' என்று சொன்னான்.

உடனே மதனவல்லிச் சீமாட்டியும் ஷண்பகவல்லியும் சந்திரசேகரனை இருபுறமும் பிடித்துக்கொள்ள எல்லாருமாக மாளிகையை நோக்கி நடந்தார்கள். தியாகராஜனும் தன் குதிரையைப் பிடித்துக்கொண்டு அவர்களுடனேயே நடந்து சென்றான். அப்போது அவன் சந்திரசேகரனைப் பார்த்து 'நீ நன்றாகத்தானே குதிரையை அடக்கிக் கொண்டிருந்தாய். குதிரை தாவும்போதும் நான் பார்த்ததில் நீ மிக விரைப்பாக முறைப்படி உட்கார்ந்திருந்தாய். நீ வெற்றியுடன் அப்புறம் போய் இறங்குவாய் என்று நினைத்தேன். அப்படியிருந்தும் நீ விழுந்துவிட்டதைப்பார்த்தால் அது ஒரு அற்புதசக்தியின் செயலாகத்தான் இருக்க வேண்டுமென்று தோன்றுகிறது' என்று கேட்டதற்குச் சந்திரசேகரன், 'இச்சம்பவம் நடந்த தன் காரணம் எனக்கே சொல்லத்தெரியவில்லை. திடீரென்று ஏதோ மயக்கம் வந்திருக்கவேண்டும். அல்லது பாலென்ஸ் தப்பிப்போய் இருக்கும்,' என்றான். உடனே தியாகராஜன், 'நடந்துபோன காரியத்தைப்பற்றி வருந்துவதில் பயனில்லை. நீ குதிரை சவாரியில் தக்க தேர்ச்சியுடையவன் என்பதில் ஆட்சேபமில்லை. நீ இப்பொழுது விழுந்துவிட்டதாலேயே அந்தப் பெயருக்குப் பங்கம் வராது. நீ ஒழுங்காகத்தான் நடந்து கொண்டாய் என்பது உண்மை' என்று கூறிச் சமாதானப் படுத்தினான். இதற்குள் அனைவரும் மாளிகையில் நுழைந்தனர். எல்லாருமாகச் சந்திரசேகரனை அவனுக்கென்று ஏற்படுத்திய அறைக்கு அழைத்துச்சென்று அவ

னது படுக்கையில் படுக்கவைத்தனர். தியாகராஜன் அனுதாப குணமும், தாராள நோக்கமும் உடையவனுதலால் அடிக்கடி சந்திரசேகரனைப் பார்த்து அவனது வலியைப்பற்றி விசாரித்தான். ஷண்பகவல்லி தன் சகோதரனுக்குத் துணையாக அவ்வறையிலேயே இருக்க விரும்பினுள். ஆயினும் சந்திரசேகரன் தனியே இருக்க விரும்பியதால் அவளும் அங்கு இருக்க முடியவில்லை. மாலை ஏழுமணிக்கு மாலை ஆகாரம் அளிக்கப்பட்டது; அதற்கும் தியாகராஜன் அங்கேயே இருந்தான். ஆகாரத்துக்குப் பின்னர் அவன் தன் காதலியாகிய ராஜேஸ்வரியுடன் பேசிக்கொண்டே இரண்டொரு மணிநேரம் தோட்டத்தில் உலாவினுன்.

பிறகு தியாகராஜனும் ராஜேஸ்வரியும் சுமார் ஒன்பது மணிக்கு மாளிகையில் வந்தபோது ஹேமவதிசீமாட்டி, ஷண்பகவல்லி, மதனவல்லிச் சீமாட்டி ஆகிய மூவரும் பேசிக்கொண்டு உட்கார்ந்திருந்ததால் அக் காதலர்களும் அவர்களுடன் உட்கார்ந்திருந்தார்கள். பிறகு தியாகராஜன், ஹேமவதி சீமாட்டி, ஷண்பகவல்லி ஆகிய மூவரும் சந்திரசேகரன் படுத்திருந்த அறைக்குச் சென்று அவனது தேகநிலையை விசாரித்தார்கள். சந்திரசேகரன் இரண்டு நாள் நிம்மதியாகப் படுக்கையிலேயே படுத்திருந்தால் எல்லாம் சொஸ்தமாய் விடுமென்று தியாகராஜன் சொன்னதன்மேல் மூவரும் திருப்தியுடன் அங்கிருந்து திரும்பினர். அப்போது ஹேமவதி சீமாட்டி, தான் அவசரமாக இரண்டொரு கடிதங்களை எழுத வேண்டியிருப்பதால் தன் பிரத்யேக அறைக்குச் சென்று பதினைந்து நிமிஷங்களில் திரும்பி வருவதாகச் சொல்லிப் போய் அவ்வாறே வந்து சேர்ந்தாள். எல்லாருமாக நீண்ட நேரம்வரை பல விஷயங்களைப் பற்றிப் பேசிக்கொண் டிருந்தார்கள்.

அன்று இரவே சுமார் எட்டரை மணிக்கு மற்ருேரிடத்தில் நடக்கும் விசேஷத்தைக் கவனிப்போம்: செல்வநாதரும் மோகனதாஸும் அன்று மாலையே மிதுனபுரிக்கு வந்துவிட்டிருந்தபடியால் இரவு எட்டரைமணிக்கு அவர்களிருவரும் தாங்கள் தங்கியிருந்த ஓட்டலிலிருந்து புறப்பட்டு ஆற்ருேரமாகவே சுந்தரவிலாச மாளிகையை நோக்கி நடக்கலானுர்கள். அவர்கள் பாதிதூரம் வந்திருக்கும் சமயத்தில் செல்வநாதர், 'அந்த ராட்சஸ குப்பன் சொன்ன சொல் தவருமல் நடப்பானே இல்லையோ தெரியவில்லையே. இப்போது அவன் இங்கு வருவானே?' என்றதும் மோகனதாஸ், 'அவன் பணத்துக்காக எதையும் செய்வதால் தவருமல் வந்திருந்து சொன்னபடி செய்வானென்றே நம்புகிறேன். நீங்கள் அதிக பணம்கொடுப்பீர்களென்று அவன் நினைக்கிறபடியால் அவனை நாம் எளிதில் நமது வழிக்குக் கொண்டுவந்து விடலாம். ஆனுல் எனக்காக நீங்கள் இவ்வளவு சிரமமும் எடுத்துக்கொண்டு அதிகமான பணத்தையும் செலவு செய்வதைக் காணும்போது எனக்கு மிக வெட்கமாகவே இருக்கிறது!' என்று சொன்னதும் அப் பெரியார் அதிக கோபத்துடன், 'அப்படிச் சொல்லாதே. என் விஷயத்தில் இனி அவ்வாறு உபசார வார்த்தைகள் பேசவேண்டாமென்று பலமுறை சொல்லியிருக்கிறே னல்லவா? மறுபடியும் நீ இவ்வாறு பேசினுல் வேண்டுமென்றே கிண்டலுக்காகப் பேசுகிருய் என்று தான் நான் கருதுவேன்,' என்று சொன்னுர்.

அதற்கு மோகனதாஸ், 'நீங்கள் அவ்வாறு நினைக்கவே முடியாது. நான் உங்களால் பெற்ற இவ்வளவு நன்மைகளுக்கும் தக்கபடி வந்தனம் கூறவில்லை யென்ருல் செய்த நன்றி

கொன்ற மகன் அவன் அல்லனோ? ஆ! இந்த இடத்தில் தான் நான் ஒரு மாதை அவள் மூழ்குவதினின்றும் தப்பு வித்தேன். அதோ சிறிது தூரத்தில் விளக்கு தெரிகிறதே' அந்தக் குடிசையிலுள்ள விவசாயிகள்தான் எனக்கு வேண்டிய உதவி புரிந்தார்கள்' என்று சொன்னான். அப்போது செல்வநாதர், 'ஆம், அது சரிதான். இப்போது எனக்கு நீர் வரட்சி அதிகமாக இருக்கிறது. அந்தக் குடிசைக்குப்போய்ச் சொற்ப தண்ணீர் குடித்துவிட்டு வரலாம், வா. குப்பன் வர இன்னும் வேளையிருக்கிறது. அப்படியே வந்து விட்டாலும் சிறிது நேரம் காத்திருக்கமாட்டானா? என் தொண்டை கஷ்டப்படுத்துகிறது. தண்ணீர் அவசியம் வேண்டும்,' என்று கூறினார். ஆகவே அவர்களிருவரும் நதிக் கரையை விட்டு வேறு பக்கமாகத் திரும்பி அக் குடிசையினருகிற் சென்றார்கள். மோகனதாஸ் கதவைத் தட்டியதும் அந்த விவசாயியே வந்து கதவைத் திறந்தான். அங்கு காணப்பட்ட விளக்கு வெளிச்சத்திலிருந்து அவன் மோகனதாஸின் முகத்தைக் கண்டு அடையாளந் தெரிந்துகொண்டதும் அதிக சந்தோஷத்துடன், 'மோகனதாஸ்! மறுபடியும் எங்களை வந்து பார்த்துவிட்டுப் போகும்படியான நன்றியறித லுள்ளவனாக நீ இருக்கிறாயே. மிகவும் சந்தோஷம். உள்ளே வா,' என்று சொல்லிவிட்டு மறுபடியும், 'தாயே! மோகனதாஸ் வந்திருக்கிறார், அவருடன் இன்னும் யாரோ ஒரு நண்பரும் வந்திருக்கிறார்' என்று கத்தினான்.

அப்போது அக்கிழவி வெளியில் ஓடிவந்து, 'அவர்கள் இருவரையும் நான் மனமார வரவேற்கிறேன்' என்று சொல்லிக்கொண்டே மோகனதாஸின் கையைப் பிடித்துக் கொண்

டாள். பிறகு செல்வநாதரும் மோகனதாஸும் அக் குடிசை யின் ஒரு அறையில்போய் உட்கார்ந்தார்கள். கிழவியின் குமாரத்தியும் வந்து மோகனதாஸை வரவேற்ருள். அந்த அறையில் புதிதாக இரண்டு மாதர்கள் இருந்தார்கள். அவர் களில் ஒருத்தி விலையுயர்ந்த ஆடையாபரணங்களை அணிந்து கொண்டு சீமாட்டியைப்போல் காணப்பட்டாள். மற்ரெருத் தியோ அந்தச் சீமாட்டியின் வேலைக்காரிபோல் தோன்றி யது. அவள் கையில் ஒரு சிறு மூட்டையை வைத்திருந்தாள். மோகனதாஸ் சீமாட்டிபோலிருந்த அம் மாதைப் பார்த்ததும் அவளை எங்கேயோ தான் பார்த்திருப்பதாக ஞாபகம் வந்ததே யொழிய எங்கே, எப்போது என்பது அவனது ஞாபகத் துக்கு வரவில்லை. குடிசையின் சொந்தக்காரியான கிழவி செல்வநாதரைப் பார்த்து, 'இன்று நான் செய்த பாக்கியமே பாக்கியம். பலர் என் குடிசையில் நுழையவேண்டிய சந் தர்ப்பம் ஏற்பட்டது. அச்சீமாட்டியும் அந்த வேலைக்காரி யும் அதிக தூரம் நடந்து களைப்படைந்து சிறிது நேரம் உட் கார்ந்துவிட்டுப் போகலாமென என் குடிசையில் நுழைந்தார் கள். பின்னுலேயே நீங்கள் இருவரும் வந்தீர்கள். இவ்வளவு பேரையும் வரவேற்பதில் எனக்குச் சந்தோஷமே. இடம் மட்டும் சிறிதாக இருப்பதற்காக மன்னித்து விடுங்கள். நான் ஏழையாயிருந்தாலும் என்னுல் இயன்றதை உங்களுக்குக் கொடுக்கக் காத்திருக்கிறேன். உங்களுக்கு என்ன வேண்டும்?' என்று கேட்டாள். அப்போது மோகனதாஸ், 'தாயே எனது நண்பர் அதிக தாகத்துடன் இருக்கிருர். கொஞ்சம் ஜலமாவது பாலாவது கொடுத்தால் போதும்' என்ருன் அதற்கு அக்கிழவி, 'ஏன், என்னிடம் சிறந்த ஷர்பத் இருக் கிறது தருகிறேன். இந்த சீமாட்டியும் குடித்துவிட்டு நன்

ருக இருப்பதாகச் சொன்னுள்' என்று சொல்லி முடித்ததும், மோகனதாஸ் அவ்வறையில் நுழைந்தது முதல் அவனது அழகைக் கண்டும் பெயரைக் கேட்டும் பிரமித்துப்போய் அவனையே இமைகொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்த சீமாட்டி போன்ற அம்மாது உடனே, 'ஆம், ஐயா; நானும் அந்த ஷர்பத்தை அருந்தினேன். அது மிக உயர்தரமானது' என்று கூறினுள்.

அவள் பேசியபோது மோகனதாஸ் மரியாதையாக வணக்கம் செலுத்தினுன். அப்போதும் அவளை முன்பு எங்கேயோ பார்த்திருக்கிற மாதிரி அவனுக்குத் தோன்றியது. அப்போது அவள் மேலும் பேசத்தொடங்கி, 'ஐயா, தாங்கள் தான் மோகனதாஸ் என்பவரோ? சமீபத்தில் துப்பாக்கிச்சண்டையில் பலத்த காயமடைந்ததாகப் பத்திரிகைகளில் வெளியானசெய்தி தங்களைப்பற்றியதுதானே? அந்த சந்திரசேகரம் பிரபுவும் அவனது நண்பன் தினகரம் பிரபுவும் எனக்கு நன்கு அறிமுகமானவர்கள்' என்று சொன்னுள். அவள் பேசிய போது மோகனதாஸ் மறுபடியும் மரியாதையுடன் வணக்கம் செலுத்தினுனென்றுலும் அவள் தன்னையே பார்த்தது அவனுக்குப் பிடிக்கவில்லை. அப்போது செல்வநாதர் தனது வயதுக்கேற்ப எத்தகைய கபடமுமின்றி, 'மாதே! நீ இரத்தினபுரியிலிருந்து வந்திருக்கிருயோ' என்று கேட்டதற்கு அவள், 'நான் இரத்தினபுரியில்தான் இருப்பது. இங்கு ஒரு வேலையாக வரவேண்டியதாயிற்று. என் பெயரும் உங்களுக்கெல்லாம் தெரிந்திருக்கும். நமது நகரத்திலுள்ள பிரபல நாடகக் கம்பெனியில் நடிக்கும் கமலகுமாரி என்னும் மாது நான்தான்' என்று சொல்லிவிட்டு மிக்க பெருமையுடன் தன் வேலைக்காரியைப் பார்த்து, 'வா. நாம் போகலாம்' என்று சொல்லிக்

கொண்டே ஆசனத்திலிருந்து எழுந்ததும், தன் பணப்பையி னின்றும் ஒரு பவுன் எடுத்து அந்த வீட்டுக்காரியினிடம் கொடுத்துவிட்டு, அவளது வந்தனத்தையும் எதிர் பாராத வள் போலும், தான் இயற்கையிலேயே அதிக தாராள புத்தி யுடையவள்போலும் முகத்தை வைத்துக்கொண்டு புறப்பட் டவள் திடீரென்று மோகனதாஸைப் பார்த்து, 'ஐயா நீங்கள் இரத்தினபுரிக்குத் திரும்பும்போது எழுகிணற்று ரஸ்தாவுக்கு அப்பால் நகருக்குச் சிறிது தூரத்திலுள்ள பச்சை விலாச மென்னும் என் வீட்டுக்கு விஜயம் செய்யுங்கள். நான் உங் களை எனது இல்லத்தில் வரவேற்க ஆவலாக இருக்கிறேன்,' என்று சொன்னாள்.

அப்போது மோகனதாஸ் மிக்க மரியாதையுடன், 'அம்மா, உன் அழைப்பிற்காக நான் வந்தனம் செலுத்து கிறேன், 'ஆனால் உன் வீட்டுக்கு வரக்கூடிய அவகாசம் எனக் குக் கிடைக்குமா என்பதுதான் சந்தேகமாக இருக்கிறது,' என்று கூறியதைக் கேட்ட கமலகுமாரி தனக்கு ஏதோ அவ மானம் வந்து விட்டதுபோல நினைத்து அதிக ஆத்திர மடைந்ததால் ஏதேனும் கோபச் சொற்களைப் பிரயோகிக்க வேண்டுமென்று அவள் நினைத்தாளென்றாலும் அவ்வாறு செய்யத் தைரியமில்லாமல் ஆத்திரத்துடன் வெளியே போ னாள். அவளது வேலைக்காரியும் மோகனதாஸையும், செல்வ நாதரையும் கூர்மையாகப் பார்த்துக்கொண்டே போனாள். அம்மாதர்க ளிருவரும் போன பிறகு செல்வநாதருக்கும் மோகனதாஸுக்கும் ஷர்பத் கொடுக்கப்பட்டது. அவர்களும அதை அருந்திவிட்டு அது நன்றாக இருப்பதாகத் தெரிவித் தார்கள். பிறகு செல்வநாதரும், மோகனதாஸிடம், 'இந்த நேரத்தில் அந்த மாதுக்கும், அவளது வேலைக்காரிக்கும் இப் பக்கத்தில் என்னவேலை இருக்குமென்பதை நினைக்கும்போது

எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. தினகரம் பிரபு தனக்குத் தெரியுமென்று சொன்னாளல்லவா? ஒருகால் அவனைத் தேடிக் கொண்டுதான் வந்தாளோ ஆயினும் அதைப்பற்றி யெல்லாம் நமக்கென்ன கவலை,' என்று கூறினார். உடனே வீட்டுக்காரி யின் பக்கம் திரும்பி, 'அம்மா! நீங்கள் எனது நண்பனுக்கு முன் முறையில் அதிக உபசாரம் செய்தீர்களென்பதைக் கேட்டு நான் மிக்க சந்தோஷ மடைகிறேன். அவன் அதற் காக நன்றிசெலுத்திவிட்டிருப்பா னென்றாலும் நான் எனது கடமையைச் செய்யவேண்டாமா' என்று சொல்லிக்கொண் டே ஐந்து பவுன்களை யெடுத்து அவள் கையில் கொடுத்து விட்டு அவரும் மோகனதாஸும் புறப்பட்டார்கள். செல்வ நாதருடைய தயாள குணத்தையும் பெருந் தன்மையையும் கண்டு வியப்படைந்த அந்த விவசாயக் குடும்பத்தார் வாயிற் படி வரையில் வந்து அன்புடன் வழிகூட்டி அனுப்பினார்கள்.

அந்தக் குடிசையினின்றும் புறப்பட்ட செல்வநாதரும், மோகனதாஸும் அவசரமாகச் சென்று ஆற்றோரம் போய்ச் சேர்ந்தனர். அங்கு உடனே ராட்சஸ குப்பனும் வரவே மூவ ரும் சந்திக்கலாயினர். குப்பன் சுந்தரவிலாச மாளிகை இருக் கும் பக்கத்தினின்றும் வந்தான். அவன் பழையபடி தன்னு டைய விகாரமான ஆடையை அணிந்துகொண்டு கையில் பெரிய தடியுடன் விளங்கினான். அவர்களைக் கண்டதும் குப் பன், 'கனவான்களே! குறிப்பிட்ட வேளையில் குறிப்பிட்ட இடத்துக்கு வந்துவிட்டீர்கள். மேலும் சந்தோஷம். அதோ இரு மாதர்கள் போகிறார்கள். அவர்கள் என்னைக் கண்டதும் கொள்ளைக்காரன் என்று நினைத்துப் பதுங்கினார்கள். நான் கொள்ளைக்காரனைவிடச் சிறிது கௌரவமா னவனல்லவா?' என்று கேட்டுக்கொண்டே கல கல வென்று சிரித்தான். அப் போது செல்வநாதர், 'நாம் இப்போது அந்தக் குடிசையில்

கண்ட மாதர்களாகத்தான் அவர்கள் இருக்கவேண்டும். அவர்களும் சுந்தரவிலாச மாளிகைக்கே போகிருர்கள் போலும்?' என்ருர். உடனே ராட்சஸ குப்பன், 'ஆம்; அங்குதான் போகிருர்கள் போலிருக்கிறது. நாம் இன்றிரவு ஏதேனும் காரியம் செய்யவேண்டியிருந்தால் உடனே அதைக் கவனிக்க வேண்டும். இப்போதே மணி பத்தாய்விட்டது. பதினெரு மணிக்கெல்லாம் ஹேமவதிசீமாட்டி என்னை மாளிகைக்குப் பக்கத்திலுள்ள மடத்தில் எதிர்பார்ப்பாள்' என்று தெரிவித்தான்.

அதற்குச் செல்வநாதர், 'சரிதான். நீ எங்கள் இருவரையும் எப்படியாவது அந்த மடத்தில் அழைத்துச்சென்று நீயும் ஹேமவதி சீமாட்டியும் பேசுவதை நாங்கள் கேட்கும்படியான இடத்தில் எங்களை ஒளித்துவைக்கவேண்டும். அப்படிப்பட்ட இடம் நிறைய இருக்குமென்று நினைக்கிறேன்,' என்றதும் ராட்சஸ குப்பன், 'ஆஹா! இடத்துக்கென்ன குறைவு, மடத்தில் பூமி மட்டத்துக்குக் கீழே ஒரு அறை போகிறது. அதனுடைய படிக்கட்டுகளிலாவது, அல்லது சமாதிகள் பல இருப்பதால் ஏதேனுமொரு சமாதியின் பின்புறமாவது ஒளிந்து கொள்ளலாம். நானும் சீமாட்டியுடன் பேசிக்கொண்டே கீழும் மேலுமாக உலாத்துவேனுதலால் உங்களுக்கு நாங்கள் பேசுவது நன்ருகக் கேட்கும். ஆனல் நான் அவளிடம் வேலையைச் செய்வதற்காக அதிகமான தொகையைக் கேட்பேன். நீங்கள் அதற்கு இரட்டிப்பான தொகையைக் கொடுக்க வேண்டுமென்பது உங்கள் ஞாபகத்தில் இருக்கட்டும்' என்றுகூறி முடித்தான். அதற்குச் செல்வநாதர், 'அப்பா பணத்தைப்பற்றிக் கவலைப்படாதே. சொன்ன சொல் தவருதபடி பணம் கொடுப்பேன். ஆனல் நாங்கள் திருடர்களென்று கருதப்பட்டுச் சுட்டுவிடாமலிருக்கும்படியான வகையில் எங்களை எப்படி அம்மடத்தில் அழைத்துப் போகி

ருய் என்பதைச் சொல் பார்க்கலாம்,' என்ருர். அப்போது ராட்சஸ குப்பன், 'அதற்காகப் பயப்படாதீர்கள். அம் மடத்தில் நுழைய சௌகரியமான வழி இருக்கிறது. அந்த மடத்தில் பின்பக்கச் சுவர் இந்த ஆற்ருேரத்தில்தான் இருக்கிறது. அந்த சுவற்றுக் கடுத்தாற்போல் ஒரு பெரிய மரம் வளர்ந்து கொண்டிருக்கிறது, அம்மரக் கிளையின்மீது ஏறினுல் எளிதில் மடத்தில் குதித்து விடலாம். யாரும் பார்க்க மாட்டார்கள்,' என்று சொன்னுன். இவ்வாறு இவர்கள் பேசிக்கொண்டே நடந்து சென்றதில் சில கஜதூரம் முன்னேறி விட்டதால் அந்த இடத்தில் இவர்கள் சற்று நின்றபோது கொஞ்சதூரத்தில் துப்பாக்கி வெடிசத்தம் கேட்டது. உடனே ஒரு பெண்ணின் அபயக்குரல் கேட்டது. மறுபடியும் ஒருமுறை துப்பாக்கி வெடிசத்தம் கேட்டது. உடனே நிசப்தமாய்விட்டது; இதைக் கேட்ட செல்வநாதர் திடுக்கிட்டு, 'ஓ கடவுளே! இதென்ன இது, பயங்கரமாய் இருக்கிறது,' என்ருர்.

மோகனதாஸின் வாயினின்றும் ஐயோ! அப்பா! என்னும் சத்தம் புறப்பட்டது. உடனே மூவருமாக அந்தத் துப்பாக்கி வெடி சத்தம் கேட்ட திசையை நோக்கி அதாவது மாளிகையின் பக்கமாக விரைந்து சென்ருர்கள். சிறிது தூரத்தில் சென்றதும் அவர்கள் மூவரும் ஆச்சரியமும் அச்சமும் அடையும்படியான வகையில் இரு மாதர்கள் சுட்டு வீழ்த்தப்பட்டிருப்பதைக் கண்டார்கள். அம்மாதர்களின் முகத்தை நன்ருகப் பார்த்ததும் செல்வநாதர், 'ஆஹா! இவர்கள் அந்தக் குடிசையில் இருந்தவர்களே' என்ருர். மோகனதாஸ் நெருங்கிப் பார்த்துவிட்டு அவர்களுக்கு உயிர் போய்விட்டது என்று தெரிவித்தான். பாவம்! கமலகுமாரியின்முகம் சின்னுபின்னமாகி விட்டிருந்தது. அவளுடைய வேலைக்காரியின் இருதயத்தில் குண்டு பாய்ந்திருந்தது. அவர்களுடைய கோர

நிலைமையைக் கண்டு செல்வநாதரும் மோகனதாஸும் திடுக்கிட்டுப் போனார்கள். சிலநிமிஷநேரம்வரை அவர்களால் பேசவும் முடியவில்லை. அப்போது ராட்சஸ குப்பன், 'ஐயா! நல்ல காலம்! நான் இச்சமயத்தில் உங்களுடன் இல்லா விட்டால் இதை நானே செய்தேனென்று சொல்லிவிடுவார்களல்லவா?' என்றான். அதற்கு மோகனதாஸ் செல்வநாதரிடம், 'இப்போது நாம் என்ன செய்வது?' என்று சொல்லிவிட்டு வங்காள பாஷையில் ராட்சஸ குப்பனுக்குத் தெரியாதபடி, 'இவனுடன் நாமும் இருந்தால் இக் குற்றத்தை நம்மீது சுமத்திவிடுவார்களே,' என்று சொன்னான். அதற்கு அப்பெரியார் அப்போதுதான் சிறிது மனத்தெளிவை யடைந்து, 'வாஸ்தவம்தான். நாம் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்,' என்று சொல்லிவிட்டுத் தன் பணப்பையை எடுத்துச் சில பவுன்களையும், நோட்டுகளையும் ராட்சஸ குப்பனிடம்கொடுத்து, 'அப்பா நீ உடனே போய் விடு. நீதான் இக்குற்றத்தைச் செய்தாய் என்று எந்த அதிகாரியும் எளிதில் நிச்சயித்து விடுவான். அப்போது நாங்களும் சிக்கிக்கொள்ளநேரிடும். ஆதலின் உடனே போய் விடு' என்றார். குப்பனும் அப் பணத்தைப் பெற்றுக் கொண்டு, 'சரிதான். ஆனால் அந்த மாளிகையில் நடக்க வேண்டிய காரியத்தைப் பற்றி என்ன சொல்லுகிறீர்கள்,' என்று கேட்டான்.

அதற்கு அப்பெரியார், 'இந்த சம்பவம் நடந்த இடத்துக்குச் சமீபத்திலும் நீ இருப்பது நியாயமா?' என்று கேட்க அவன், 'நியாயமில்லைதான்' என்று சொல்லவும் செல்வநாதரும், மோகனதாஸும் சேர்ந்து அவனை ஓடிப் போகும்படி சொன்னார்கள். ராட்சஸ குப்பனும் ஓடிப்போய் எங்கேயோ மறைந்து போனான். அவன் சென்ற பின்னர் மோகனதாஸ் நாற்புறங்களிலும் கவனித்தான். இந்தக் காரி

யத்தை யார் செய்திருக்கலாமென்று நிதானிக்க அவனால் முடியவில்லை. யாரேனும் ஓடிப்போகும் சத்தமோ அல்லது தலை மறையும் நிலையோ காணப்படவில்லை. ஆனால் அவன் ஒரு ஆச்சர்யத்தைமட்டும் கண்டான். அதாவது வேலைக்காரி யின் கையிலிருந்த ஒரு சிறு மூட்டைமட்டும் காணப்பட வில்லை. அவன் பெரியவரை பார்த்து, 'இப்போது நாமென்ன செய்வது?' என்று கேட்டான். அதற்கு அவர், 'நீ உடனே குடிசைக்கு ஓடிப்போய் யாராவது ஒரு விவசாயியை மிதுன புரிக்குச் சென்று மாஜிஸ்ட்டிரேட்டிடம் தகவல் தெரிவிக்கும் படி சொல்லிவிட்டு வா. நான் இங்கேயே இருந்து இப்பிணங் களை யாரும் தொடாதபடி பார்த்துக்கொள்ளுகிறேன்' என்று சொன்னதற்கு மோகனதாஸ், 'கொலை செய்தவர்கள் மறு படியும் திரும்பி வந்தால் நீங்கள் க்ஷேமமாக இருப்பது சந் தேகம். ஆதலால் நான் பார்த்துக் கொள்ளுகிறேன், நீங்கள் போய்ச் சொல்லிவிட்டு வாருங்கள்' என்றான். அதற்கு அவர் 'அது முடியாது. நீ எதற்கும் பயப்பட வேண்டாம். நான் சொன்னபடியே செய்' என்று கூறவே அவன் அங்கிருந்து புறப்பட்டான்.

அங்கிருந்து சுமார் ஒருமைல் தூரத்திலிருந்த அக் குடி சைக்குப்போய் அதன் கதவைப் பலமாகத் தட்டினான். உடனே கதவும் திறக்கப்பட்டது. மோகனதாஸின் வெளுத்த முகத்தையும் நடுங்கும் உடம்பையும் கண்ட விவசாயி, ஏதோ ஆபத்து நேர்ந்திருக்கிறதென்று தெரிந்து கொண்டான். அப் படியே மோகனதாஸனும் நடந்த கதையை யெல்லாம் சொன் னான். விவசாயியும் அவ்வாறே மிதுனபுரிக்குப்போய்ப் போ லீசாரிடம் தகவல் அறிவிப்பதாக ஒப்புக்கொண்டு மிதுனபுரிக் குப் புறப்பட்டான். மோகனதாஸனும் செல்வநாதரிடம்

போய்ச் சேர்ந்தான். அவர் பிரேதங்கள் இரண்டும் கிடந்த இடத்துக்கருகில் ஆற்றோரத்தில் மேலும் கீழுமாக உலாத்திக் கொண்டிருந்தார். செல்வநாதரும் மோகனதாஸுமாக இரண்டுமணி நேரம் அச்சம்பவம் நடந்த இடத்திலேயே இருந்தார்கள். அந்த இரண்டுமணி நேரத்திலும் அவர்கள் ஒன்றிரண்டு வார்த்தைகளைப் பேசினார்களே யொழிய அதிகமாகப் பேச முடியவில்லை. அவர்கள் பீதியும் திக்பிரமையும் அடைந்திருந்தார்கள். போதாக்குறைக்கு மழையும் ஆரம்பமாய் விட்டது. அவர்களிடமோ குடையும் இல்லை. ஆகவே அவர்கள் ஒரு அடர்ந்த மரத்தின் அடியில் நின்றிருந்தார்கள். இரண்டு மணி நேரத்துக்குப் பிறகு சில மனிதர்கள் பேசிக்கொண்டே வரும் சத்தம் மிதுனபுரியின் பக்கத்திலிருந்து அவர்களுக்குக் கேட்டது. ஒரு மாஜிஸ்ட்ரேட், ஒருடாக்டர், சிலகான்ஸ்டபில்கள் ஆகியோர் அங்கு வந்து சேர்ந்தார்கள். செல்வநாதர் மாஜிஸ்ட்ரேட்டிடம் சுருக்கமாக எல்லாவற்றையும்சொன்னார். பிரேதம் விழுந்துள்ள நிலைமையையும், மற்றவைகளையும் அதிகாரிகள் குறித்துக் கொண்டார்கள். பின்னர் மாஜிஸ்ட்ரேட் அப்பிரேதத்தை மிதுனபுரிக்கு எடுத்துச்செல்வதென்றுமுடிவு செய்யவே அதற்கு வேண்டிய சிலசாமான்களைத் தயாரித்துக் கொண்டு பிணங்களுடன் புறப்பட்டார்கள்.

69-வது அத்தியாயம்.

—:():—

மாளிகைக் கடுத்த மடம்

ஹேமவதி சீமாட்டி தன்னுடைய விருந்தாளிகளுடன் தன் மாளிகையின் ஒரு அறையில் உட்கார்ந்துகொண்டு பேசிக்கொண் டிருந்தார்களென்று முன்னரே தெரிவித்திருக்

கிறேமல்லவா? அக்கூட்டத்தில் தியாகராஜனும் ராஜேஸ்வரி யும் இருந்து பொதுச் சம்பாஷணையில் கலந்து கொண்டார்க ளென்றாலும் இடையிடையே அவர்கள் காதல் விளையாட்டு களையும் விளையாடிக் கொண்டிருந்தார்கள். ஷண்பகவல்லி தன் சகோதரனுடைய நிலைமைக்காக மனவருத்த முடையவளாய் உற்சாகமின்றி உட்கார்ந்திருந்தாள். மதனவல்லிச் சீமாட்டி சந்திரசேகரன் அதிக அபாயமான நிலைமையில் இல்லை யென் பதைஅறிந்து ஒருவாறு சந்தோஷத்துடன் இருந்தாள். ஹேம வதி சீமாட்டி தன் குமாரி சரியான வலையை வீசித் தியாக ராஜனை மடக்கியிருப்பதைக் கண்டு சந்தோஷ முடையவ ளாய்த் தானும் அவனுக்குவேண்டிய உபசாரங்களையெல்லாம் செய்துகொண் டிருந்தாள். சுமார் பத்து மணிக்கு அனைவ ருக்கும் இராச்சாப்பாடு அளிக்கப்பட்டது. பிறகு ஷண்பக வல்லியும் ஹேமவதி சீமாட்டியும் சந்திரசேகரனுக் கென்று சிறிது ஆகாரத்தை எடுத்துக்கொண்டு அவன் படுத்திருக்கும் அறைக்குச் சென்றார்கள். ஹேமவதி சீமாட்டி முதலில் மிக சந்தடி செய்யாமல் அடிமேல் அடிவைத்து அறையில்போய்ப் பார்த்துவிட்டு வந்து அவன் தூங்குகிறான் என்றும், அவனை எழுப்பித் தொந்தரை செய்வது நல்லதல்லவென்றும் ஷண்பக வல்லியிடம் சொன்னாள். ஆகவே அவர்களிருவருமாகச் சேர்ந்து மறுபடியும் ஆகாரம் எங்கிருந்து எடுத்துக்கொண்டு போனார்களோ அதே அறைக்குத் திரும்பி வந்தார்கள்.

அம்மாதர்கள் இருவரும் திரும்பி வந்ததைக் கண்ட தியாகராஜன், சந்திரசேகரனுடைய தேக நிலைமையில் அதிக அக்கறையுடையவனாக இருந்தபடியால், அவன் நிலைமை எப் படியிருக்கிறதென்று விசாரித்தான். சந்திரசேகரன் தூங்கிக் கொண்டிருப்பதாக அறிந்ததும், 'அவன் இன்னும் இரண்

டொரு தினங்களில் சொஸ்தமடைந்து விடுவான். வலி அதிகமாக இருக்காது. அப்படி ஏதேனும் இருந்தால் அவன் தூங்கியிருக்க மாட்டான்!' என்று தியாகராஜன் சொன்னதைக் கேட்ட ஷண்பகவல்லி தன் சகோதரன் சொஸ்தமடைவான் என்பதை அறிந்து சந்தோஷப்பட்டாள். பிறகு தியாகராஜன் சுமார் பதினொருமணிக்கு ஹேமவதி சீமாட்டியின் உத்தரவு பெற்றுக்கொண்டு தன் குதிரைமீது சவாரி செய்துகொண்டு தன் இல்லம்போய்ச் சேர்ந்தான். அவன் போனதுதான் தாமதம். உடனே எல்லாரும் அவரவர்களுடைய அறைக்குப் படுக்கப் போய்விட்டார்கள். ஹேமவதி சீமாட்டியும் தன் படுக்கையறைக்குச் சென்றதும் தன் வேலைக்காரிகளையெல்லாம் படுக்கப் போகும்படி கட்டளையிட்டு விட்டுத் தான்மட்டும் ஏதோ படிப்பவள்போல் விளக்கின் அருகில் புஸ்தகத்துடன் உட்கார்ந்தாள். சுமார் அரைமணிநேரம் அவ்வாறு உட்கார்ந்தபின் வீட்டில் யாவரும் தூங்கிவிட்டார்கள் என்றும், வீடு நிசப்தமாய் விட்டதென்றும் தெரிந்த பின்னர் கையில் ஒரு மெழுகுவர்த்தியையும், தீப்பெட்டியையும் எடுத்துக்கொண்டு புறப்பட்டாள். முதலில் அவள் சந்திரசேகரன் படுத்திருக்கும் அறைக்குச் சென்று அவனுடன் ஒன்றிரண்டு நிமிஷங்கள்வரை பொதுவாகப் பேசிக்கொண்டிருந்து விட்டுப் பின்னர் அங்கிருந்து புறப்பட்டவள் நேரே தன் அறைக்குச் செல்லாமல் மாளிகையின் மேற்குப் புறத்துக்குச் சென்று மடத்தின் வாயிலை அடைந்ததும் தன் கையிலிருந்த விளக்கை ஏற்றிக்கொண்டு மடத்தைச் சுற்றிப் பார்த்தாள்.

மடத்தின் நடுவில் [illegible] குப்பன் நின்று[illegible]தக் கண்டதும் ஹேமவதி, [illegible]ரான் குறிப்பிட்டபடி வந்து விட்டாயே, மிகச் சந்தோஷம் என்றாள்.

0480022228000
186579

மனமோகினி

ஓர் மாதாந்த நாவல் சஞ்சிகை.

இதில் இனிய நாவல்களே வெளிவரும். நாவலுக்கென்றே ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது தமிழபிமானிகட்குத் திருப்தி யளிக்கக் கூடியதா யிருக்குமென்று நமது "ஆனந்த போதினி"ச் சந்தாதாரர்களிற் பலர் கேட்டுக்கொண்டபடி இதனை 1922ஹ பிப்ரவரிமீ 1உ முதல் ஆரம்பித்து நடத்தி வருகிறோம். இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாகவந்து ஆறுமாதங்களுக்கொருமுறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவுபெறும். இதற்கு முன் மகா அற்புதம்பொருந்திய அநேக நாவல்களின் ஆசிரியரான ஸ்ரீமான் ஆரணி - குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட "அமராவதி" "பவளத்தீவு" "ஞான செல்வாம்பாள்" "அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்" "கற்பகச் சோலையின் அற்புதக் கொலை" "கடற்கொள்ளைக்காரன்" "இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம்" "இரத்தினபாய் அல்லது இரகசிய சங்கம்" "சந்திராபாய் அல்லது சங்கரதாஸின் வெற்றி" இரத்தினபுரி ரகசியம் 3-ம்,4-ம்,5-ம்,6-ம்,7-ம் பாகம் நாவல்கள் முடிவுபெற்று இப்பொழுது இரத்தினபுரிரகசியம் 8-ம்பாகம் என்ற நாவல் ஆரம்பமாகி நடந்துவருகிறது. முடிவான நாவல்கள் வேண்டுவோர் புத்தகமாகவே வாங்கிக்கொள்ளவேண்டும்; அவற்றின் தனிச் சஞ்சிகைகள் கிடையா. இச்சஞ்சிகைகள் ஒவ்வொன்றும் கிரௌன் 80-பக்கங்கொண்டது. அடியிற்கண்டவிலாசத்திற்கு உடனே எழுதி வி-பி-யிலோ முன்பணம் அனுப்பியோ பெற்றுக்கொள்ளுங்கள்.

ஒவ்வொரு வருஷத்திலும் பிப்ரவரிமீ ஆரம்பமே இச்சஞ்சிகைக்கு வருஷ ஆரம்பம். எப்பொழுது சந்தாதாரராகச் சேர்ந்தாலும் அந்த வருஷம் பிப்ரவரிமாதம் முதற்கொண்டு கணக்கு வைக்கப்படும்.

உள் நாட்டிற்கு வருஷ சந்தா	ரூ.	2—8—0
வெளி நாட்டிற்கு	,,	3—0—0

இதுவரையில் சஞ்சிகை ரூபமாக வெளிவந்திருக்கும் புஸ்தகங்கள்.

அமராவதி 2 பாகமும்	ரூ.	4	0	
பவளத்தீவு 2 பாகமும்	ரூ.	3	0	
ஞானசெல்வாம்பாள் 5 பாகமும்	ரூ.	9	10	0
அர்ஜுனஸிங், சுந்தர்	,,	0	2	0
அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்		1	12	0
கற்பகச்சோலையின் அற்புதக்கொலை	ரூ.	1	4	0
கடற் கொள்ளைக்காரன் 2-பாகமும்	,,	3	4	0
இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம்	,,	2	0	0
இரத்தினபாய் அல்லது இரகசிய சங்கம்	,,	1	12	0
சந்திராபாய் அல்லது சங்கரதாஸின் வெற்றி	,,	2	0	0

மானேஜர்:—"ஆனந்த நிலையம்," தபால்பெட்டி நெ. 167, மதராஸ்

“ஆனந்தபோதினி”

ஓர் இனிய மாதாந்தத் தமிழ்ச் சஞ்சிகை.

இச்சஞ்சிகை 1915ளு ஜூலை மீ முதல் சென்னையில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. தற்காலம் குன்றியிருக்கும் நமது தமிழ்ப் பாஷையின் அபிவிர்த்தியையும், நமது நாட்டாருடைய இலௌகீக ஆசார ஒழுக்கங்களின் சீர் திருத்தத்தையும், ஆன்மார்த்த ஞானபிவிர்த்தியையும், பெண்கல்வியையும் நோக்கமாய்க்கொண்டே இச்சஞ்சிகை பிரசுரிக்கப்பட்டு வருகிறது. பிரதி சஞ்சிகையிலும் மேற்கண்ட விஷயங்களோடு, நமது சிறுவர், சிறுமிகளுக்கும், ஸ்திரீகளுக்கும் அவசியமான நீதிகளும், புத்திமதிகளும் காணலாம். எல்லா விஷயங்களும் உலக அனுபவமுடைய கல்வியாளரால் வரையப் படுகின்றன. இவையன்றி பேர்பெற்றவர்களால் எழுதப்பட்ட அறிவு விருத்திக்கான மிக்க நேர்த்தியான புது நாவல்களும் தொடர்ச்சியாய் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. இப்போது இது நமது நாட்டில் பிரசுரிக்கப்படும் எல்லாத் தமிழ்ச் சஞ்சிகைகளையும் விட அதிகமான சந்தாதாரரை யுடையது. இது ஜாதிமத பேதமின்றி ஒவ்வொரு மாணவனும், புருடனும், ஸ்திரீயும் அவசியம் வாசிக்கத் தக்கது. இது நமது நாட்டாரது நன்மையொன்றைமட்டும் கருதியே பிரசுரிக்கப்படுவதால், டெம்மி 8 பக்கம் அளவில் 80 பக்கம் விஷயங்களுள்ள இச்சஞ்சிகைக்குத் தபாற் கூலி யுள்பட வருட சந்தா 1 ரூபாதான் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. பினங்கு, ஸிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு ரூபா 2-0-0 மாதிரிக்காப்பி இனாம்.

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் இயற்றிய நாவல்கள்.

	ரூ.	அ.		ரூபா	
இரத்தினபுரி இரகசியம்			தினகரசுந்தரி	1	
7-பாகமும் ...	13	14	தபால்கொள்ளைக்காரர்	0	1
பவளத்தீவு 2-பாகமும் ...	3	0	ரத்தினாபாய் ...	1	1
கற்கோட்டை ...	2	0	வீரநாதன் ...	0	1
மின்சார மாயவன் ...	1	8	குணசுந்தரன் ...	0	1
தேவசுந்தரி ...	1	4	மஞ்சள் அறையின் மர்மம்	1	
கனகபூஷணம்2பாகம் ...	3	8	கமலசேகரன் ...	1	1
இராஜாமணி ...	2	0	பூங்கோதை ...	0	1
ஆனந்தவிங் ...	2	0	இந்திராபாய் ...	2	
மதனபூஷணம் ...	1	0	அமராவதி 2 பாகமும்	4	
ஞானசெல்வாம்பாள்			மதனாம்பாள் 2 பாகமும்	3	
5 பாகமும் ...	9	10	லோகநாயகி	1	

விலாசம் : மானேஜர், “ஆனந்தபோதினி” ஆபீஸ்,
6, லாயர் சின்னதம்பி முதலி வீதி, சௌகார்பேட்டை, மதரா